# சந்தனப் பெட்டகமும் ‘கிலாபத்’ கப்பலும்



மருதூர்க்கனி

விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுதலை

தரமான நூல்களின் தாயகம்

விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுதலை

தரமான நூல்களின் தாயகம்

விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுதலை

தரமான நூல்களின் தாயகம்

விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுதலை

தரமான நூல்களின் தாயகம்

விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுதலை

தரமான நூல்களின் தாயகம்

விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுதலை

தரமான நூல்களின் தாயகம்

விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுதலை

தரமான நூல்களின் தாயகம்

விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுதலை

தரமான நூல்களின் தாயகம்

விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுதலை

தரமான நூல்களின் தாயகம்

விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுதலை

தரமான நூல்களின் தாயகம்

விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுதலை

தரமான நூல்களின் தாயகம்

விருட்சம் வெளியீட்டகம் விடுதலை விருட்ச

ரமான நூல்களின் தாயகம் தரமான நூல்க

விருட்சம் வெளியீட்டகம் விடுதலை விருட்ச

ரமான நூல்களின் தாயகம் தரமான நூல்க

விருட்சம் வெளியீட்டகம் விடுதலை விருட்ச

ரமான நூல்களின் தாயகம் தரமான நூல்க

விருட்சம் வெளியீட்டகம் விடுதலை விருட்ச

ரமான நூல்களின் தாயகம் தரமான நூல்க

விருட்சம் வெளியீட்டகம் விடுதலை விருட்ச

ரமான நூல்களின் தாயகம் தரமான நூல்க

விருட்சம் வெளியீட்டகம் விடுதலை விருட்ச

ரமான நூல்களின் தாயகம் தரமான நூல்க

விருட்சம் வெளியீட்டகம் விடுதலை விருட்ச

ரமான நூல்களின் தாயகம் தரமான நூல்க

விருட்சம் வெளியீட்டகம் விடுதலை விருட்ச

ரமான நூல்களின் தாயகம் தரமான நூல்க

விருட்சம் வெளியீட்டகம் விடுதலை விருட்ச

ரமான நூல்களின் தாயகம் தரமான நூல்க

விருட்சம் வெளியீட்டகம் விடுதலை விருட்ச

ரமான நூல்களின் தாயகம் தரமான நூல்க

விருட்சம் வெளியீட்டகம் விடுதலை விருட்ச

ரமான நூல்களின் தாயகம் தரமான நூல்க

— மருதமுனை உதயன் —

# சந்தனப்பேட்டகமும் 'கிலாபத்' கப்பலும்

( குறுங்காவியங்கள் )

Prof-S.MAUNAGURU
Theatr Lab
Batticaloa.

மருதூர்க்கனி

விடுதலை விருட்சம் வெளியீட்டகம்
தரமான நூல்களின் தாயகம்

Title : SANTHANAPPETTAKAMUM KILAPATH KAPPALUM

Subject : Poems

First Edition : June, 2013

Author : U.L.M. Haniffa


Copy right : Mrs. Kamila Haniffa


No of Pages : 129

Cover Photo Selection : Mrs. Rozana Shaifullah

Cover design & Printing : AJ Prints (Pvt) Ltd
Station Road, Dehiwela.
Tel : 0094 112 72 32 05

Published By : VIDUTHALAI VIRUTCHAM PUBLICATIONS
NO : 11, 4TH LANE,
Kawdana Broadway,
Dehiwela.
Sri Lanka.
T.P. : 0094 112 73 05 25

Price : 300/=
AUD 5

நான் இறந்தாலும், இறக்காமல் இருக்க என் எழுத்துக்களுக்கு உயிர் கொடுக்கும் என்னுயிர் புதல்விகள் வஜ்னா, றொஸானா, அரீஸா, லயானா அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்.

----------வாப்பா----------

# உள்ளடக்கம்


1. முதற் புள்ளி
-மருதூர்க்கனி- 00I - 0IV

2. மருதூர்க்கனியின் சந்தனப்பெட்டகமும்
கிலாபத் கப்பலும்
-பேராசிரியர் அமீர் அலி- 00V-0XI

3. கவிஞர் மருதூர்க்கனியின் தெளிவான
இலட்சிய வெளிப்பாடுகள்
-பேராசிரியர் எம்.ஏ.எம். சுக்ரி- XII-XXIII

4. புதல்விகளிடமிருந்து ஒரு செய்தி
Dr. வஜ்னா றபீக் (MBBS(SL), FRACGP)
றொஸானா ஷைபுல்லாஹ் (English Trained)
அரீஸா நஜிமுன் நியாஸ் (BSc IT)
Dr. லயானா ஆஸிப் நிம்றி (BDS) XXIV-XXV

5. திருக்குர்ஆனே 001-018

6. பிரகடனம் 019-028

7. தங்கப் பேனை 029-035

8. ஐந்தாவது விதி 036-039

9. யாத்திரை 054-076

10. சந்தனப் பெட்டகமும் "கிலாபத்" கப்பலும் 077-100

# ....முதற் புள்ளி

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக எழுதிக் கொண்டுவரும் நான், அடிக்கடி எனது எழுத்தை மறுபரிசீலனை செய்து கொண்டிருப்பதை வழக்கமாகக் கொண்டவன். இது என்னை, 'செம்மையும் செழுமையும் பெற்றிடச் செய்யும்' என்பது, என் நம்பிக்கை.

தொகுதிக்காக எனது எழுத்துக்களை ஒழுங்கு படுத்துகின்ற பொழுதில், இப்பரிசீலனையை இன்னொருமுறை மேற்கொண்டேன். அப்போது எனது, படைப்புகள், என் வாழ்வின் அனுபவசாரம் உருவான காலப்பகுதியையும் தெளிவாகப் பதிவு செய்து வைத்திருப்பதை உணர முடிந்தது.

எனது மார்க்கத்தில் நான் மிகவும் நம்பிக்கை கொண்டவன். 'இடதுசாரி சித்தாந்தத்தின் மானிட நேயக் கருத்துக்களின் வேரும் என் நம்பிக்கைகளும் ஒன்றுபட்டவையே' என்பதை, மகாகவி இக்பால் எனக்கு கற்றுத் தந்தார். 'குர்ஆன் என்றால் என்ன?' என்ற, கேள்வியை

எழுப்பி, 'அது பாட்டாளி வர்க்கத்தின் தோழன்! முதலாளி வர்க்கத்திற்கு சாவுமணி!' என்று, அல்லாமா இக்பால் சொன்ன பதில் இன்னும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது!

நபிகள் நாயகம் (ஸல்-லம்) என்ற, மேன்மை வாய்ந்த மானிட நேயரை, மானிட விடுதலை வேண்டிய அனைவரிலும் நான் அடையாளம் காணுகின்றேன். இவர்கள் அனைவரும் நேசித்த மானிடத்தை சீர்மிக்கதாக நான் ஏற்று, இவர்களின் ஏற்றத்திற்காக என் எழுத்தினை கவித்துவ இழைமிலே கோர்த்து ஆக்கங்கள் உருவாக்குகின்றேன்.

தீட்சண்ணியமான தூரநோக்கோடு நான் எப்போதும் என்னை சரியான நிலைப்பாட்டில் உறுதிப்படுத்தி வந்திருக்கிறேன். அவ்வகையில் நான் முன்னோக்கிப் பெருகும் ஆறெனப் பிரவாகம் கொண்டு வருகிறேன். எனவே, என் எழுத்து எல்லா அணுகுதலிலும் பிற்போக்குத்தனங்களை என் பின்னே புறந்தள்ளி விட்டிருக்கின்றது. இத்தொகுதியின் 'யாத்திரை' 'சந்தனப் பெட்டகமும் கிலாபத் கப்பலும்' என்பனவற்றின் தோற்றம், இந்தக் குணதிசயத்தில் சூல்கொண்டவையே.

இன்றைய இஸ்லாமிய விழிப்புணர்வை எல்லாப் பரிமாணங்களிலும் நான் அவதானித்து வருகின்றேன். எண்ணெய் வளம் கொண்ட அறபு நாடுகள் இன்றிருக்கும் நிலை, என் நெஞ்சை நோகவைத்து வலிக்க வைக்கின்றது. குடும்ப ஆட்சியும் சர்வாதிகாரப் போக்குகளும் முஸ்லிம்நாடுகளை வளரவிடாது தடுப்பதை கண்ணெதிரே காண்கின்ற வேளையில் மனம் புண்ணுகி விடுகின்றது.

உலக முஸ்லிம்கள் 'இப் போக்குகள் மாறவேண்டும்' என்ற, கருத்தில் ஒன்றுபட்டு நிற்கின்றனர். இவர்களில் ஒருவனாக, சர்வதேச மனிதனாக நின்று இவர்களோடு சேர்ந்து நான் ஒலிக்கும் உலகு தழுவிய பேரோசையாக என் மேற்கூறிய இரு கவிதைகளையும் எடுத்துக் கொள்ளலாம்.

1999இல் நான், ஹஜ் யாத்திரை மேற்கொண்டிருந்தேன். இலட்சக்கணக்கான ஹஜ்ஜாஜிகளின் நடுவே உலக இன மனிதர்கள் யாவரையும் ஒரே சமூகமாகக் கண்டு, மகிழ்ந்து சிலரோடு பேசி, அறிந்து, அளவளாவிய போது இந்த எனது கவிதைகளின் அடிவேர்கள் அவர்களின் வார்த்தைகளில், சைகைகளில், புன்னகையில், பெருமூச்சில் தளிர் கொண்டிருந்ததைக் கண்டேன். அவர்களோடு பேசுகையில் பாலைவனக் காற்றிடையே நுழைந்து கேட்கும் 'செனாய்' (குழல்) ஓசையாய் என் கவிதைகள் காதோடு ஒலிக்கக் கேட்டேன்.

நட்சத்திரப் புள்ளித் தணல்கள் கொட்டிக் கிடக்கின்ற துல்லியமான நீலவானம் என் பிரியமான இயற்கை. மருதமுனை ஆயினுமென்ன, மக்காவெனும் மகிமை ஆயினுமென்ன இந்தப் புள்ளித் தணல்களும் பெருகும் வான நீலமும் எவருக்கும் ஒரே காட்சிப் பதிவினைத்தானே கண்ணுக்கும் மனதுக்கும் அள்ளித் தருகின்றன. இது போலவேதான் என் இன்னொரு பிரியமான கவிதையும். நட்சத்திரப் புள்ளியாய், வானப் பரப்பாய் நல்ல கவிதைகள் சர்வதேசத்துக்கும் பொதுவானவை.

'சுட்டும் விழிச் சுடர்தான் கண்ணம்மா சூரிய சந்திரரோ?' என்று, நெகிழ்ந்து கேட்டான் பாரதி. இக்குரல் நைல் நதிக்கரையிலும் தேம்ஸ் நதி ஓரத்திலும் கங்கை விழிம்பிலும் அமேசன் அருகிலும் அந்தந்த மனிதன் குரலிலே கேட்டிருக்கும்; இப்போதும் கேட்டுக் கொண்டேயிருக்கும்.

என் கவிதாவனத்தில் செழித்து வளர்ந்த ஐந்தருக்களில் (பஞ்சதரு) ஒன்றுதான், இந்த அரிச்சந்தனம்! அது தான் இந்த, 'சந்தனப் பெட்டகமும் கிலாபத் கப்பலும்!' இது, என் நான்காவது தரு. இதன் நறுமணத்துடன்தான் என் 'யாத்திரை' ஆரம்பமாகின்றது. அதை, 'திருக்குர்ஆனே!' என்று விழித்து 'பிரகடனம்' செய்துவிட்டு 'தங்கப் பேனை'யால் 'ஐந்தாவது விதி'யை எழுதியபடி....'துருவிலைக் குத்திகளை'யும் சுமந்துகொண்டு 'நந்தவனப் பூங்காவில்' நுழைந்திருக்கிறேன். அதன், மணத்தை நுகர உங்களையும் அழைக்கிறேன்.

என் வாழ்வில் என்றுமே பேராசை இருந்ததில்லை. ஆனால் என் படைப்புப் பற்றி நிறையப் பேராசை இருக்கிறது. அது, பாரதியை நெருங்கி நெருங்கிப் போய்க் கொண்டிருப்பதால் வந்த பேராசை! மகாகவி இக்பாலை மனதார நேசிப்பதால் வந்த பேராசை! கம்பனையும் வள்ளுவனையும் இளங்கோவையும் பார்த்துப் பேராசைப்பட்ட பாரதி, அவர்களின் தோள் தொட்டு தகுதிவாய்ந்த நண்பன் ஆனான். சர்வதேசக் கவிஞனாய் உயர்ந்தான்.

நான், பாரதியின் விரல் பற்றி, இக்பாலின் நெறி தொட்டு கவி சொல்லும் குழந்தை. இக்கவிதைகளில் அவர்களோடு தொடர நான் முதற்புள்ளி வைத்திருக்கின்றேன்.

11, 4வது லேன்,
கவுடான புரோட்வே,
தெஹிவலை,
இலங்கை.
0094 112 730 525

## மருதூர்க்கனியின் சந்தனப் பெட்டகமும் கிலாபத் கப்பலும்

பேராசிரியர் அமீர் அலி

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் முஸ்லிம்களுக்கு ஒரு தனி இடமுண்டு. 1950 களில் பேராசிரியர் முகம்மது உவைஸ் ஆங்கிலத்தில் வெளியிட்ட The Muslim Contribution to Tamil Literature என்னும் ஆய்வு நூலைத் தொடர்ந்து பலர் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் மலேசியாவிலும் முஸ்லிம்களின் தமிழ் இலக்கியத் தொண்டினை மிக விரிவாகவும் ஆழமாகவும் ஆராய்ந்ததன் விளைவாக இன்று அது தனிப்பட்ட இலக்கியத் துறையாகவே மிளிர்கின்றது. இதுவரை முஸ்லிம் தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளே ஐந்து நடைபெற்றுள்ளன.

இந்தத் தொண்டின் சுமார் இருநூறு ஆண்டுகால வரலாற்றில் இலங்கை முஸ்லிம்களின் பணியும் மகத்தானது. கவிதைத் துறையிலும் கட்டுரை வளர்ச்சியிலும் நாவல் இலக்கியத்திலும் சிறுகதை எழுத்திலும் பத்திரிகை வளர்ச்சியிலும் பாவிசையிலுமென்று பல்வேறு துறைகளில் இலங்கை முஸ்லிம்கள் தமிழின் வளர்ச்சிக்காகத் தொண்டுசெய்துள்ளனர். இதனைப் பட்டியல் போட்டு இங்கே விளக்கத் தேவையில்லை. ஆனால் 1950 களுக்குப் பின்னர்

இலங்கையிலேற்பட்ட அரசியல் மாற்றங்களும் 1960 களுக்குப் பின்னர் தமிழ் இலக்கியத்திலே ஏற்பட்ட புதுக்கவிதை வளர்ச்சியும் இலங்கை முஸ்லிம்களின் இலக்கியப்பணியை ஒரு படி மேலோங்கச் செய்து விட்டன.

1950களுக்குப் பின்னர் இலங்கை அரசியலினுட் புகுந்த சிங்கள-தமிழ் இனத் துவேஷத்தின் பரிணாம வளர்ச்சியாக முஸ்லிம்களின் தமிழ் இலக்கியப்பணி புதியதோர் உத்வேகத்தை அடைந்துள்ளமையை ஆய்வாளர்கள் அவதானிக்கலாம். அகில இலங்கையிலும் தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட தமிழர்கள் இனவாத ஒடுக்கலின் விளைவாக அப்பணியைத் தமது தாயகமெனக் கருதப்படும் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குள்ளேயே பெரிதும் முடக்க ஏனைய ஏழு சிங்கள மாகாணங்களிலும் முஸ்லிம்களே தமிழ் வளர்ச்சிப் பணியை முன்னின்று நடத்தலாயினர்.

முஸ்லிம்களின் நாடளாவிய சனத்தொகைப் பரவலும் அவர்களில் மிகப் பெரும்பாலோனோர் தமிழ் மொழியையே தாய் மொழியாகக் கொண்டிருப்பதுவுமே இதற்கான காரணங்களாகும். முஸ்லிம் தமிழ் பாடசாலைகள், முஸ்லிம் தமிழ் வானொலி நிகழ்ச்சிகள், தினகரன் நாளிதழ், எழுபதுகளில் வெளிவந்த தினபதிப் பத்திரிகை ஆகியன இப்பணிக்கு ஊன்று கோல்களாய் அமைந்தன.

சிங்கள மாகாணங்களில் இன்று தமிழ் மொழியில் உரையரங்குகளும் விவாத மேடைகளும் கவியரங்குகளும் நாடக மேடைகளும் நடைபெறுகின்றனவென்றால் அதற்குக் காரணம் முஸ்லிம்களே என்ற உண்மையைத் தமிழ் உலகம் ஏற்கத்தான் வேண்டும்.

1960களுக்குப் பின்னர் உதயமாகிய புதுக் கவிதையென்னும் நவ இலக்கிய வார்ப்பு, மரபுக் கவிதையின் இலக்கண வரம்புகளுக்குட் சிக்கி இதயத்திற் பொங்கியெழும் எண்ணக் கருத்துகளை உணர்ச்சிக் கவிதைகளாக வெளிப்படுத்த முடியாது தவித்த எத்தனையோ இளம் உள்ளங்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். புதுக் கவிதை புனைவோருக்கு மரபுக் கவிதை எழுதத்தெரியாதென்பது இதன் கருத்தல்ல.

ஆனால் மரபுக் கவிதை இறுக்கமான ஒரு இலக்கணக் கட்டுக்கோப்பினுக்குள் அமையவேண்டி இருப்பதால் அவ்விலக்கண வரம்புகளைக் கடக்கும்போது கவிதையின் உட்பொருள் வலுவாய் இருப்பினும் அதன் வெளி அமைப்பு மாசுபடுவதால் கவிஞனே தரக் குறைவானவனெனக் கணிக்கப்படும் ஆபத்து ஏற்படுகிறது. புதுக் கவிதை வழங்கும் ஆக்கச் சக்தி வெளிப்பாடும் சுதந்திரமும் மரபுக் கவிதைக்குள் மட்டுப்படுகின்றதென்பது உண்மையே.

இன்றையப் புதுக் கவிதை யுகத்திலே கவிக்கோ அப்துல் ரகுமானும் மு. மேத்தாவும் தமிழ் நாட்டிற் கொடி கட்டிப் பறக்கும் இரு தலை சிறந்த முஸ்லிம் கவிஞர்கள். இவர்களைப் போன்று இன்னும் எத்தனையோ கவிஞர்கள் அங்குளர். அதேபோன்று இலங்கையிலும் நூற்றுக் கணக்கான முஸ்லிம் கவிஞர்கள் இன்று புதுக் கவிதை வார்க்கின்றனர். அவர்களுள் முதல் வரிசையிலே வைத்து எண்ணப்படுபவர் இக்கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் மருதூர்க் கனி.

சாதாரண தொழிலாளியாக- ஆசிரியனாக- வியாபாரியாக-இஸ்லாமிய இயக்கங்கள் சார்ந்தவனாக- தொழிற் சங்க ஊழியனாக- மார்க்ஸியவாதியாக-அரசியற்கட்சி ஊழியனாக-'முஸ்லிம் காங்கிரஸ்' என்ற, அரசியல் தனித்துவத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராக அதன் மூத்த துணைத் தலைவராக- ஜனாதிபதி விருது பெற்ற "லங்கா திலகராக" வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் பங்குகொண்டு அவற்றின் சோதனைகளிலும் வேதனைகளிலும் சாதனைகளிலும் ஊறி, உழன்று அவற்றின் விளைவாகப்பெற்ற அனுபவங்களை உணர்ச்சியோடும் அழகோடும் அவர் வடித்துள்ளதே அவரது கவிதைகள்-குறிப்பாக, 'சந்தனப் பெட்டகமும் கிலாபத் கப்பலும்' என்ற, இக்கவிதைத் தொகுப்பு.

இதில், 'திருக்குர் ஆனே!' என்னும் கவிதைகள் மருதூர்க் கனியின் மரபுக் கவிதைத் திறமைக்கோர் எடுத்துக்காட்டு.

தாமரை இலையில் தண்ணீர்த்
துளிகளைப் போன்று வாழ்ந்து
பூமியில் ஆணும் பெண்ணும்
போய்விட வேண்டுமென்ற
சாமிமார் கூறும் வாழ்வுத்
தத்துவம் செயற்கை! 'சேர்ந்து

பூமியில் வாழ்க!' என்றே
புகன்றிடும் திருக்குர்ஆனே!"

என்னும் பாடலில் வரும் கருத்தினை இன்றைய 'தப்லீக்' இயக்கத்தினா உன்னிப்பாக பார்க்கவேண்டும். இக்கவிதையில் வரும் 'வெள்ளரிப்பழம்', 'பூவல்' போன்ற வார்த்தைகள் கவிஞரின் கிழக்கு மாகாண மண்வாசனையைத் துல்லியமாக வெளிப்படுத்துகின்றன.

'பிரகடனம்', 'ஐந்தாவது விதி' ஆகிய கவிதைகள், சமுதாய வர்க்க வேறுபாட்டினைச் சாடும் பாடல்களாகும். கவிஞரின் மார்க்சியவாத உணர்வும் தொழிற் சங்க அனுபவங்களும் இங்கே வெளிப்படுகின்றன.

"புதிய கணக்கைப் போடுங்கள்!
போட்டால் செய்து காட்டுவேன்!
ஆனால்...நீங்கள் போடும்...
அந்தப் புதிய கணக்குகள்
புதிய மனிதத் தராசில்
நிறுக்கத் தக்கதாய்
இருக்கவும் வேண்டும்!"

என்ற, பாடல் மார்க்ஸின் அருமையான ஒரு புதிரை ஞாபகப்படுத்துகின்றது. ஒருவன், ஒரு பொருளைப் பத்து ரூபாவுக்கு வாங்கி இன்னொருவனுக்குப் பதினைந்து ரூபாவுக்கு விற்றால் விற்றவனுக்கு என்ன இலாபம்? அல்லது என்ன நட்டம்? என்பதுதான் பரம்பரையான கணக்கு. முதலாளித்துவக் கணக்குகள் எப்போதுமே விற்பவனை மையமாகக் கொண்டே அமைவன.

மார்க்ஸிய தத்துவம் இதே கணக்கை, 'வாங்குபவனை மையமாகக் கொண்டு அமைக்க வேண்டும்' என்றது. அப்படியாயின் மேற்கூறப்பட்ட கணக்கில் விற்றவனுக்கு, ஐந்து ரூபா இலாபம் கிடைக்கும். வாங்கியவனுக்கு...என்ன கிடைக்கும்? இலாபமா? நட்டமா? முதலாளித்துவ கணக்கிலும் மரபிலும் இதற்கான வார்த்தையே இல்லை. மருதூர்க்கனி கூறும் 'புதிய மனிதத் தராசில்' இக்கணக்கையே மாற்றி எழுத வேண்டும்.

'யாத்திரை', 'சந்தனப் பெட்டகமும் கிலாபத் கப்பலும்' ஆகிய, இரு கவிதைகளும் இன்றைய இஸ்லாமிய விழிப் புணர்வைப் பிரதிபலிப்பன. முஸ்லிம் நாடுகள் அதிலும்

குறிப்பாக, எண்ணெய் வளம்கொண்ட அரபு நாடுகள் இன்றிருக்கும் அவல நிலையை எண்ணித் துடிக்கும் இஸ்லாமிய இதயமொன்றின் ஆக்ரோஷ வெளிப்பாடே இக்கவிதைகளெனலாம்.

ஒரு குடும்பத்தின் பெயரையே நாட்டின் பெயராகக் கொண்ட ஒரேயொரு நாடு சவூதி அரேபியா. குடும்ப ஆட்சியும் சர்வாதிகாரமும் இராணுவ ஆட்சியும் செல்வந்தர் அதிகாரமும் இன்றைய முஸ்லிம் நாடுகளை வளர விடாது தடுத்து வைத்துள்ளன. இந்த நிலைமைக்கு ஆதரவு வழங்குகின்றன மேற்கு வல்லரசுகள்.

'இஸ்லாம்' என்ற பெயரினில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அட்டூழியங்களையும் அதர்மங்களையும் ஒழித்து, உண்மையான இஸ்லாமிய ஆட்சியை நிலைபெறச் செய்யவேண்டும் என்பதே உலக முஸ்லிம்களின் ஒன்றுபட்ட அபிலாஷையாகும். அந்த மாற்றத்தை வேண்டி சங்க நாதம் எழுப்புகின்றன மேற்கூறிய இரு கவிதைகளும். எனினும் அந்த மாற்றங்களைக் கிலாபத் ஆட்சி முறை கொண்டு வருமா? என்பது, விவாதிக்க வேண்டிய விடயம்.

'அந்த மழை நாட்களுக்காக' என்ற, மற்றொரு தொகுதியில் காணப்படும் அவரின் 'பனை மரமும் குருவிக் கூடுகளும்' என்ற, உணர்ச்சி பொங்கும் குறுங்காவியங்கள் இன்றையத் தமிழ் இனவாதத்தால் முஸ்லிம்கள் பட்ட, படும் இன்னல்களையும் தமிழ் விடுதலைப் போராட்டத் தலைமைத்துவத்தின் குறுகியதும் கொடூரமானதுமான போக்கினையும் அப்பட்டமாகச் சுட்டிக்காட்டும் முத்துக்களாகும். அவற்றைப் பற்றியும் சில குறிப்புகளை என்னால் இங்கு எழுதாமலிருக்க முடியவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் இரவோடிரவாக 'தொண்ணூறு ஐப்பசியில்' வெளியேற்றப்பட்டபோது எந்தத் தமிழரும் அதைத் தவறென்று பகிரங்கமாகச் சுட்டிக் காட்டவில்லை. அந்நேரம் மௌனிகளாகஇருந்த அதே தமிழர்

'தொண்ணூற்றைந்து ஐப்பசியில்' இதே யாழ்ப் பாணத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்டனர். இந்த மௌனம் தமிழருக்குப் புதியதல்ல.

இதற்கு முன்னர், மேயர் துரையப்பாவைக் கொலை செய்தபோதும் தமிழ்த் தலைவர்கள் மௌனம் சாதிக்கவில்லையா? பின்னர் துரையப்பாவைக் கொன்ற அதே துப்பாக்கி தமிழ்த் தலைவர்களை வெள்ளவத்தையிற் கொல்லவில்லையா? இவையெல்லாம் இறைவனின் பழிவாங்கலா? வரலாறு கொடுத்த தண்டனையா?

'வரலாறென்பது தெய்வத்தின் உலக நடமாட்டம்' என்று, கூறினான் ஹேகல். 'தெய்வம் நின்று கொல்லும்' என்பது, பழந்தமிழ் கூறும் பாடம். இருப்பினும் வரலாறு மக்களுக்கோர் வழிகாட்டி. அது போதிக்கும் பாடங்களைப் படிக்க மறுத்தால் அது வழங்கும் தண்டனையிலிருந்து சமூகம் தப்ப முடியாது.

'போராட்டம்' என்ற, பெயரில் உடன் பிறப்புக்களையே கொன்று குவிக்கும் கொலை பாதகர்களைக் கண்டு பயந்து மௌனிகளாக மக்கள் வாழும்வரை இலங்கையைப் பிடித்து ஆட்டும் இந்த இனவாதப் பேய் என்றுமே போகாது.

**"பனை மரமே! பனை மரமே!**
**ஏன் அழுதாய் பனை மரமே!**
**நீ அழுத காரணத்தை நாமறிவோம்!**
**என்றாலும் நீ ஏன்,**
**எங்களைச் சந்தித்து கதைத்து**
**வழியனுப்ப வரவில்லை?**
**கிடுகு வேலிகள்தானே உன் எல்லை!**
**அவை இரும்பு வேலிகளானது**
**எப்போது?"**

என்ற, வரிகளைப் படிக்கும்போது யாழ் நகர் முஸ்லிம்களின் ஏக்கத்தையும் மன ஈறல்களையும் உணர்ச்சி பொங்கக் கொட்டுகிறார் கவிஞர் கனி.

'பனை மரமும் குருவிக் கூடுகளும்' கவிதைகள் கறை படிந்த ஒரு வரலாற்றின் கதறல். இந்த வரலாற்றிலே கவிஞரும் தனிப்பட்ட முறையிற் பாதிக்கப்பட்டுள்ளார் போலும்...!

'சந்தனப்பெட்டகமும் கிலாபத் கப்பலும்' என்ற, இந்த தொகுப்பிலுள்ள 'திருக்குர் ஆனே!' 60'களிலும் 'பிரகடனம்' 70'களிலும் 'தங்கப் பேனை', 'ஐந்தாவது விதி' 'யாத்திரை' 'சந்தனப்பெட்டகமும் கிலாபத் கப்பலும்' 'நாடு தழுவிய நந்தவனப் பூங்கொத்து' கவிதைகள் 90'களிலும் எழுதப்பட்டுள்ளன.

இவற்றுள் இரண்டு கவிதைகள் 60'களிலும் 70'களிலும் எழுதப்பட்டபோதும் அக்கவிதைகளும் நிகழ் காலச் சம்பவங்களோடு தொடர்புற்று, சமூக மாற்றத்திற்கு உந்து சக்தியாக நிற்பதால் உயிர்த்துடிப்புள்ள கவிதைகளாகவே திகழ்கின்றன.

இக்கவிதைகளில் உலவும் வார்த்தைப் பிரயோகங்கள் ஒவ்வோர் இடத்திலும் உணர்ச்சி நரம்புகளைக் கிள்ளி விடுவதை படிப்போர் உணர்வர். இக்கவிதைகள் தமிழ் இலக்கிய உலகின் வரவேற்பினை நிச்சயம் பெறும் என்ற நம்பிக்கையுடன் கவிஞரின் தமிழ்ப் பணியும் சமூகப் பணியும் அரசியற் பணியும் தொடர வேண்டுமென வாழ்த்துகிறேன்.

கலாநிதி (முனைவர்) அமீர் அலி,
பொருளியற்றுறை,
மேற்கு ஆஸ்திரேலியப் பல்கலைக் கழகம்,
மேற்கு ஆஸ்திரேலியா. 14 ஜனவரி 1999.

# கவிஞர் மருதூர்க்கனியின் தெளிவான இலட்சிய வெளிப்பாடுகள்

## பேராசிரியர் எம். ஏ. எம். சுக்ரி

1963ல் 'நினைவு' என்ற, கன்னிக் கவிதையுடன் அறிமுகமாகி, 1965ல், தான் முதன்முதலாக எழுதிய "பசி" என்ற சிறுகதைக்குப் பரிசு பெற்று, படைப்பிலக்கியத்தில் பிரவேசித்தவர் கவிஞர் மருதூர்க்கனி. மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கவிதை, சிறுகதை, உருவகக்கதை, ஆகிய துறைகளில் தடம் பதித்து, மிகக் காத்திரமான பங்களிப்பைச் செய்துவருபவர் கனி. அனுபவ முதிர்ச்சியும் ஆற்றலும் மிக்க படைப்பிலக்கியவாதி.

ஈழத்துத் தமிழ் இலக்கியத் துறையில் ஓர் எழுச்சி மிக்க காலப் பிரிவாகக் கருதப்படும் காலப் பிரிவில் இலக்கியப் பிரவேசம் செய்த, அவரது முப்பது ஆண்டுகால அவரது

படைப்புக்களின் ஊடாக, அவரது ஆளுமை வளர்ச்சியையும் அவரது சிந்தனை வீச்சையும் பரந்த நோக்கு, கருத்துக்கள், அணுகுமுறையில் ஏற்பட்டுவந்துள்ள மாற்றங்களையும் நாம் அவதானிக்க முடிகின்றது. அத்துடன் இவற்றை இப்படைப்புகள் மூலம் ஆவணப்படுத்தியுள்ளார்.

மருதூர்க்கனியின் வளர்ச்சிப் பருவத்தின் மிக முதிர்ந்த நிலையில், கவிதையின் உருவம், உள்ளடக்கம் பற்றி மிகத் தெளிவான, உறுதியான கருத்துக்களை அவர் கொண்டிருப்பதை 'ஓடும் நதியைப் பாடும் மலர்கள்' என்ற கவிதைத் தொகுதிக்கு வழங்கியுள்ள முன்னுரையில் மிகத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார்.

"பூனை....
குட்டியைக் கவ்விக்கொண்டு
குடுகுடென்று ஓடுவதுபோல் அல்லாமல்
கொம்பன் யானை....
குட்டியைக் கூட்டுக்கொண்டு
கம்பீரமாய் நடந்து செல்வதுபோல்
கவிதையில்
'கரு' நடந்து செல்ல வேண்டும்!
அத்தோடு....
கூடவே....
அங்குசத்தைக் கொண்டு செல்லும்
பாகனைப் போல்
'உரு'வும் நடைபோடவேண்டும்!
'நிமிர்ந்த நடையும்
நேர்கொண்ட பார்வையும்'
கவிதைக்கும் இருக்க வேண்டும்!
அதில்,
'பிறர் ஈனநிலை கண்டு துள்ளும்'
சுடர் தெறிக்க வேண்டும்!

**அச் சுடர்,**
**சுரண்டலைத் தகர்த்து**
**வறுமையை எரிக்க வேண்டும்!"**

கவிதையில் உருவத்துக்கும் உள்ளடக்கத்திற்கு மிடையேயுள்ள இறுக்கமான பிணைப்பு பற்றியும் கவிஞரின் சமூகப் பங்களிப்பு பற்றியும் இக்கவிதையடிகள் மிகச் சிறப்பாக விளக்குகின்றன. இலக்கியத்தின் தளம் அதன் சமூகப் பங்களிப்பு பற்றி மிகத் தெளிவான கருத்துக்களை வரித்துக்கொண்ட படைப்பிலக்கியவாதியாக மருதூர்க்கனி இங்கு தோற்றமளிக்கின்றார்.

**"சந்தனப் பெட்டகமும் கிலாபத் கப்பலும்"** என்ற, கவிதைத் தொகுப்பில், **திருக்குர் ஆனே!** 1967, 68. **பிரகடனம்** 1975, **தங்கப் பேனை** 1991. **ஐந்தாவது விதி** 1992. **யாத்திரை** 1993. **நாடு தழுவிய நந்தவன பூங்கொத்து** 1998. ஆகிய கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

இக்கவிதைகள் அனைத்தும் கவிஞர் மருதூர்க்கனியின் மனித நேயம், விசாலமான பார்வை, சமூக அவலங்களைக் கண்டு நொந்து வேதனையுறும் உணர்ச்சி பூர்வமான உள்ளம், ஆழ்ந்த இஸ்லாமிய உணர்வு ஆகியவற்றைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. வெறும் உணர்ச்சியினால் தூண்டப்பட்ட வார்த்தைக் கோவைகளாக அன்றி, தெளிவான ஓர் இலட்சியத்தின் வெளிப்பாடுகளாக இக்கவிதைகள் விளங்குகின்றன.

**திருக்குர் ஆனே!** என்ற, கவிதைகள் அல் குர் ஆனை விளிக்கும் வகையில் குர் ஆனின் சிறப்பு, சொல்லாழம், கருத்து வளம், மனித சமுதாயத்துக்கு அது விடுக்கும் செய்தி ஆகியன பற்றி, உணர்ச்சியும் உயிரோட்டமும் உள்ளஅழகிய நடையில் விளக்குகின்றது. அல்குர் ஆனில் காணப்படும்

கருத்துக்களை, ஆழ்கடலில் மறைந்துள்ள ஒளியும் பெறுமதியும் மிக்க முத்துக்களுக்கு உவமிப்பது இஸ்லாமிய அறிவுப் பாரம்பரியத்தில் காணப்படும் ஒரு மரபாகும்.

இமாம் கஸ்ஸாலியின் 'ஜவாஹிருல் குர்ஆன்' இதற்குச் சிறந்த உதாரணமாக உள்ளது. 'கஸீததுல் புர்தா' என்ற நபி புகழ் கவிதை நூலின் ஆசிரியரான இமாம் பூஸரி, குர்ஆனின். வார்த்தையில் பொதிந்துள்ள அழகும் வளமும் மிக்க சொற்களை, அழகும் ஒளியும் பொருந்திய வெண்முத்துக்களுக்கு உவமிப்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

மருதூர்க்கனி, 'திருக்குர் ஆனே!' என்ற, கவிதையில் மரபுரீதியான இந்த உவமை, பின்வரும் வகையில் மிகச் சிறப்பான முறையில் கையாளப்பட்டுள்ளது.

**"ஆழ்கடல் ஆனி முத்தை**
**அவனியோர் வியக்கும் வண்ணம்**
**நாள்தொறும் அள்ளி அள்ளி**
**நிறைவுறக் குவித்தல் கூடும்**
**வாழ்வியல் விளக்கும் அந்த**
**வேதத்தில் விளைந்த முத்தை**
**வாழ்தொறும் அள்ளினாலும்**
**முடியுமோ...? திருக் குர்ஆனே!"**

அல்-குர்ஆனில் பொதிந்துள்ள ஆழமான கருத்துக்களின் சிறப்பை, அல் குர்ஆன் ஸூரா அல் கஹ்பின் 109 ஆம் திருவசனத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

"நபியே! நீர் கூறும்! 'சமுத்திரத்திலுள்ள நீர் யாவும் மையாக இருந்து, என் இறைவனின் வாக்கியங்களை எழுத

ஆரம்பித்தால் என் இறைவனின் வாக்கியங்கள் முடிவதற்கு முன்னதாகவே இந்த, சமுத்திரம் யாவும் செலவாகிவிடும். அதைப்போல் இன்னொரு சமுத்திரத்தைப் பாவித்துக் கொண்டபோதிலும் கூட"

அல்–குர்ஆன் கூறும் இக்கருத்தை, கவிஞர் அழகிய உயிரோட்டமுள்ள கவிதையாக வடித்துள்ளார்.

"ஆழ்கடல் நீரையெல்லாம்
அழகிய மைகளாக்கி
சூழ்ந்திடும் மரத்தையெல்லாம்
சீரிய பேனாவாக்கி
வாழ்ந்திடும் வண்ணம், வாய்மை
விரிவுரை எழுதினாலும்
'ஆழ்ந்திட' முடியா தென்னும்
ஏதுவே திருக்குர்ஆனே!"

அல்–குர்ஆன், மனித இன ஒருமைப்பாட்டை வலியுறுத்துகின்றது. இனம், நிறம், குலம், வர்க்கம் ஆகிய பேதங்களின் அடிப்படையில் மனித இனத்தைக் கூறுபோடுவதற்கு எதிராகக் குரல் கொடுத்து, மனித சமத்துவத்திற்கு அது அழுத்தம் கொடுக்கும் பான்மை, கவிஞரால் மிகச் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது.

மனித இனத்தை இந்தக் குறுகிய பிரிவுகளின் அடிப்படையில் பாகுபாடு செய்த கூறுபோடுபவர்களை

"சாதியைக் குலத்தைப் பேசி
சத்தியக் கொலைகள் செய்து
நீதியை நூர்த்துவிட்டு
நெருப்பினை அள்ளி வீசும்
பாதகர்..."

என, அவர் வர்ணிக்கின்றார்.

மனித இன ஒருமைப்பாடு பற்றிய கருத்தை வலியுறுத்தும் குர்ஆன், மனித இனத்தை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணில்

இருந்தும் தோற்றமெடுத்து பல்வேறு இனங்களாக, சமுகங்களாகப் பரந்ததைக் குறிப்பிடுகின்றது. குர் ஆனின் இக்கருத்தைப் பொருட் செறிவும் சொல்லாட்சியும் மிக்க கவிதைவடிவில் கவிஞர் பின்வரும் வகையில் படைத்துள்ளார்;

"ஒரு விதை வளர்ந்து.... வாகாய்
அரும்புகள் மலர்ந்து பூத்து....'
பெருமையாய்க் காய்த்தல் போல
பாரினில் 'ஆதம்' என்ற
ஒரு விதை விழுந்து....மனித
அரும்புகள் பூத்துக் காய்த்ததே...!"

"பிரகடனம்" என்ற, கவிதையில் (1975) கவிஞரின் ஆரம்பகால சிந்தனையின் பாதிப்புகள் தென்படுகின்றன. சமுகத்தில் மக்களை ஒடுக்கி, நசுக்கி வாழுகின்ற வர்க்கத்திற்கு எதிரான போர்ப் பிரகடனமாக இக் கவிதை உள்ளது.

'உலகத்தின் வரலாறே வர்க்கப் போராட்ட வரலாறு' என்ற, கவிதையடிகள் என்னைப் பொறுத்தளவில் அவ்வளவு உடன்பாடானதாக இல்லை. மனித இன வரலாற்றை வர்க்கப் போராட்ட வரலாறாக நோக்குவது, மார்க்ஸிய அணுகுமுறையாகும்.

கவிஞர் மார்க்ஸிய சிந்தனையினால் கவரப்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட கவிதையாக இது இருக்கலாம். இந்தக் கவிதை சமுக அநியாயங்கள், அக்கிரமங்கள், மதத்தின் பெயரால் சமுக அநீதிகளை நியாயப்படுத்தும் போலிகளுக்கு எதிரான புரட்சிக் குரலாக ஒலிக்கின்றது:

"எனவேதான், சந்தர்ப்பம் பார்த்து
உங்களின் வர்க்க வசதிக்காக
அல்லாஹ்வின் திருநாமங்களை

சாட்சிக்கு இழுக்கவேண்டாம்!"

என்று, அறைகூவல் விடுக்கின்றோம்!

இவை அனைத்தும்

உதட்டால் உதிர்கின்ற

உலர்ந்த கோஷங்களல்ல!

ஏங்கும் இதயத்திலிருந்து

எழுகின்ற இரத்த புஷ்பங்கள்!

இழப்பதற்கு எதுவுமே இலாத

இளைய தலைமுறையின்

இன்றைய பிரகடனம்!"

இத்தொகுப்பில் அடங்கியுள்ள **"யாத்திரை"** என்ற, கவிதை கவிஞர் வரித்துக்கொண்ட இலட்சியப் பயணத்தை யாத்திரையாகக் கற்பனை செய்கின்றது. அந்த இலட்சியப் பயணத்தில் ஏற்படும் சோதனைகள், சிரமங்கள் குறுக்கீடுகள், தடைக்கற்கள் அனைத்தையும் வெற்றிகொண்டு இறுதி இலட்சியத்தை அடையப் பூண்டுள்ள உறுதியை அது பிரதிபலிக்கின்றது.

அக்கவிதையில் இஸ்லாமிய மரபு வழிச் சொற்களைப் பயன்படுத்தி உருவகரீதியாக தனது கருத்துக்களை கவிஞர் வெளிப்படுத்தியுள்ள பான்மை மிகச் சிறப்பாக உள்ளது!

"................

இதற்கு மத்தியில்....

இராக் குளத்தில் 'இஷா' பூக்கும்!
முஃமீன்கள் அள்ளி நுகர்வார்கள்!"

"விடிவெள்ளி காலிக்கும்!
பாலைக் கோழி கூவும்!
'சுப்பஹுப் பூ மலரும்...."

"தூர்மலை முகட்டில்
தெய்வநீதி வேண்டி
அவன் தியானம் செய்யலாம்!
திரும்பும்போது,
மூஸாவின் ஆஸாக் கோலில்
பேனை செய்து வரவும் ஆசைப்படலாம்...."

போன்ற, கவிதைவரிகள் இதற்கு மிகச் சிறந்த உதாரணங்களாகும்.

இக்கவிதைத் தொகுதியில் உள்ள "சந்தனப் பெட்டகமும் கிலாபத் கப்பலும்" என்ற கவிதை இலங்கை ரூபவாஹினியில் 'கவிஞர் திலகம்' எம்.எச்.எம். அஷ்ரஃப் தலைமையில் நடைபெற்ற கவியரங்கிலும் அட்டாளைச்சேனையில், 'கவிக்கோ' அப்துல் றஹ்மானின் தலைமையில் நடைபெற்ற தேசிய மீலாத் விழா கவியரங்கிலும் வாசிக்கப்பட்டு, 1997ல் தினகரனில் பிரசுரிக்கப்பட்டது.

கவிஞரின் மொழிப் பிரயோகத்திலேயே கூறின், "முத்தமிழ் ஈன்ற இளைய புதுக்கவிதை"யின் அமைப்பில் உள்ள இக் கவிதைகள், மிகச் சிறப்பான பொருத்தமான உருவ உத்தியைக் கையாண்டு முஸ்லிம் 'உம்மத்'தின் வரலாற்றுப்

பயணத்தின் நெளிவு சுழிவுகளையும் ஏற்ற இறக்கங்களையும் மிக உயிரோட்டத்துடன் உணர்ச்சி பூர்வமாக விளக்குகின்றது.

உலகளாவிய முஸ்லிம் சமூகத்தை ஒரு கப்பலுக்கும் அதனை வழிநடத்தும் ஆட்சியாளர்கள், தலைவர்களை மாலுமிகளாகவும் முஸ்லிம் மக்கள் சமூகத்தை அதில் பயணம் செய்யும் பிரயாணிகளாகவும் கற்பனை செய்து இக்கவிதை பாடப்பட்டுள்ளது.

மனித சமூகத்தை உன்னதமான, உயர்ந்த இலட்சியத்தை நோக்கி வழிநடத்த இறைவனால் அருளப்பட்ட அல்-குர்ஆன், ஒரு சந்தனப் பெட்டகத்திற்கு உவமிக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் ஆண்டுகளாக உயர்ந்த ஒரு குறிக்கோளை நோக்கிப் பயணம் செய்து வந்த 'கிலாபத் கப்பல்' இப்போது, எங்கு செல்வது என்று தெரியாமல் தட்டுத்தடுமாறுகிறது.

கிலாபத் கப்பலில் பெறற்கரிய பேறாக பயபக்தியுடன் ஏற்றி வந்த சந்தனப் பெட்டகம், கப்பலின் ஒரு மூலையில் போடப்பட்டு தூசி படிந்துள்ளது.

மக்கள், அதனைப் பயன்படுத்த விடாமல் கப்பலின் மாலுமிகள், அதன் சாவியை தமது இடுப்பு வாருக்குள் சொருகி ஒளித்து வைத்துவிட்டு கிலாபத் ஆட்சியை மன்னராட்சியாக மாற்றினார்கள். அதனால் எற்பட்ட தீய விளைவுகள், அதனடியாக ஏற்பட்ட இழப்புகள் மிகச் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன.

கிலாபத் கப்பலை ஆக்கிரமித்துள்ள சக்திகளை ஒழித்து, அதன் பயணத்தில் மேடுதட்டியுள்ள கப்பலை மக்கள் இனி... பொறுப்பேற்று வழிநடாத்துவார்கள்! என்ற, நம்பிக்கையை கவிஞர் பின்வருமாறு புலப்படுத்துகின்றார்:

"மக்களே திரண்டு கப்பலை மீட்பார்கள்!
மீட்ட கப்பலை,
கிலாபத் மாலுமிகள்
கொண்டு செலுத்துவார்கள்!
கப்பலில் ஓட்டை, உடைசல்களிருந்தால்....
மக்களே அவற்றை மாற்றி அமைப்பார்கள்!

கப்பலை,
நம்பிக்கையாளரின்
துறைமுகங்களில் நிறுத்துவார்கள்!
கப்பல் மீண்டும் கவனமாய் புறப்படும்...!"

"தொட்ட இடம் பட்ட இடம்....
எல்லாம் மணக்கின்ற சந்தனப் பெட்டகத்தை
பக்குவமாய்த் திறந்து....
அதற்குள், அழகாக அடுக்கி வைத்திருக்கும்
அத்தர், ஜவ்வாது, புனுகு....எனும்
முப்பது வகையான மூல மணங்களையும்
மீண்டும் எடுத்து
மூவுலகிலும் முறையாகப் பரப்புவார்கள்!"
"கிலாபத் வாரிசுகள்-
அவர்களுக்கு மட்டுமல்ல
அல்லாஹ்வின் உம்மத் அனைவருக்கும்
ஒளியும் வழியும்
இனி....
எந்த அமாவாசை இருட்டிலும் தெரியும்!"

கவிஞர் மருதூர்க்கனியின் 'சந்தனப் பெட்டகமும் கிலாபத் கப்பலும்' என்ற, கவிதைத் தொகுதியில் உள்ள அத்தனை கவிதைகளிலும் அனுபவ முதிர்ச்சியும் அறிவு முதிர்ச்சியும் கவித்துவ ஆற்றலும் செறிந்து, அவரது ஆளுமையின் முக்கிய காலகட்டங்களைப் பிரதிபலிக்கின்றன.

அவரது சிந்தனை வளர்ச்சியின் முக்கிய பரிமாணத்தின் வெளிப்பாடுகளாகவும் அவை உள்ளன. இலக்கியத்தின் சமூகப் பங்களிப்பு பற்றிய மிகத் தெளிவான கண்ணோட்டத்துடன் அவரது ஆக்கங்கள் அமைந்துள்ளன.

'கவிதை' என்பது ஒருவனின் ஆளுமையின் உணர்வுபூர்வமான வெளிப்பாடாகும். 'கலை கலைக்காகவே' என்ற கனவுலகக் கோட்பாட்டிலிருந்து மீட்சிபெற்று, அவற்றை சமூக வாழ்வின் பிரதிபலிப்பாகக் காணும் கவிஞனின் ஆக்கங்கள், அவனது அனுபவங்களாகவும் உணர்வுகளாகவும் பிறக்கின்றன.

அவன் அங்கமாக வாழும் சமூகத்தின் அவலங்களும் அதில் பிரதிபலிக்கின்றன. அவற்றை மாற்றவேண்டமென்று போர் முழக்கம் செய்கின்றன.

கவிஞர் மருதூர்க்கனி, இந்தப் பிரிவைச் சார்ந்த கவிஞர். அவரது கவிதைகள் அவரது அனுபவங்களின் வெளிப்பாடாக அமைந்து, சமூகத்திற்கு ஒரு செய்தியையும் விடுக்கின்றன.

இக்பால் தனது "ஸாகி நாமாவில்" பின்வருமாறு பாடுகின்றார்;

"என் இயற்கை
காலத்தைப் பிரதிபலிக்கின்றது!
அது
கருத்துக்கள், சிந்தனைகள்
என்ற,
மான்களின் மேய்ச்சல் தரையாகும்!
என் உள்ளம்,
சந்தேகங்கள்
என்னும் ராணுவங்களால்
நிரப்பப்பட்ட
ஆனால்...
ஆழமான நம்பிக்கையின்
உறுதியைப் பெற்ற
என்
வாழ்க்கையின் போர்க்களமாகும்!"

கலாநிதி (முனைவர்) எம். ஏ. எம். சுக்ரி
பணிப்பாளர் நாயகம்
ஜாமிஆ நழீமியா, வேர்வலை, இலங்கை

## புதல்விகளிடமிருந்து ஒரு செய்தி

எமது தந்தை விட்டுச்சென்ற பெரும் சொத்துக்கள் அவரது அறங்கள் மட்டுமல்ல மேலாக அவரது எண்ணங்களும் கூட. அந்த எண்ணங்கள் வர்க்க முரண்பாடுகளைக் கண்டபோது அவற்றிற்கு எதிராக கவிதைகளாகவும், கதைகளாகவும் வெளிப்பட்டன. கவிஞன் ஒருவன் இறந்த பின்பும், உலகில் வாழ்ந்தான் என்பதற்கு அவனது எழுத்துக்கள் நூலுருப்பெற்றிருக்க வேண்டும் என்பதில் அவர் ஆணித்தரமான நம்பிக்கை வைத்திருந்தார். எனவே அவரது எழுத்துருப் பெற்ற எண்ணங்கள் காலத்தை கடந்து நிற்க, அவற்றைத் தொகுத்து நூலுருவாக்க எண்ணி அதற்கான முயற்சிகளில் முழுமையாக இறங்கினார்.

அறுபதுகளில் தொடங்கிய அவரது நீண்ட எழுத்துப் பயணத்தில் உருவான கவிதைகளையும் கதைகளையும் ஐந்து தொகுதிகளாக வகுத்து, அவை நூல் அச்சு ஏற ஆன அத்தனை வேலைகளையும் செவ்வனே செய்து முடித்தார், அவற்றில் “மண்பூனைகளும் எலி பிடிக்கும்” மற்றும் “அந்த மழை நாட்களுக்காக” என்ற இரண்டு நூல்களை மாத்திரமே மக்கள் அவைக்கு 2002ஆம் ஆண்டு சமர்ப்பிக்க முடிந்தது.

சற்று இளைப்பாறிய பின் தனது அடுத்த மூன்று படைப்புக்களையும் வெளியிட எண்ணியிருந்தார். தான் தொடங்கிய பயணத்தை முடித்து வைக்க அவர் உடல்நிலை ஒத்துழைக்கவில்லை. 2004ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ம் திகதி இறைவன் தனது நல்லடியானை தன்னடி சேர்த்துக் கொண்டான்.

அன்று அவர் தொடக்கிய அந்த இலக்கியப் பயணம், இடைநின்றாலும் அது தற்காலிகமே என்பதை நாங்கள் எல்லோரும் உணர்ந்திருந்தோம். அப்பயணத்தை இனிதே முற்றுர எமக்கு இன்று சந்தர்ப்பம் சாத்தியமானதையிட்டு இறைவனுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்..

இந்த "சந்தனப்பெட்டகமும் கிலாபத் கப்பலும" என்ற கவிதைத் தொகுப்பிற்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் அமீர் அலி, பேராசிரியர் எம்.ஏ.எம். சுக்ரி, பொறியியலாளர் நியாஸ் ஏ. ஸமத் மற்றும் இந்த கவிதை நூல் வெளிவருவதற்கு உதவிய உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

**புதல்விகள்**

Dr. வஜ்னா றபீக் (MBBS(SL), FRACGP)
றொஸானா ஷைபுல்லாஹ் (English Trained)
அரீஸா நஜிமுன் நியாஸ் (BSc IT)
Dr. லயானா ஆஸிப் நிம்றி (BDS)

## திருக்குர் ஆனே!

1
ஒளியினி லுறைந்து வாழும்
உண்மையின் உருவே அல்லாஹ்!
தெளிவினிற் தெளிந்த உன்றன்
தெளிவினைக் 'குர்ஆன்' என்னும்
மழையெனப் பொழிந்தாய்! அந்த
மருந்தினைத் தமிழாம் என்ற
கழையினிற் பிழிந்து கட்டிக்
கவிதை யாய்த் தருவேன் காப்பாய்!

2
பாலையில் மாரி பெய்து
பசுந்தரை செழித்தல் போன்றும்
சோலையில் குயில்கள் கூவிச்
சொரிகின்ற கானம் போன்றும்
மாலையிற் தழுவிக் கொஞ்சும்
மாருத மங்கை போன்றும்
காலையின் இளமை போன்றும்
கனிந்திடும் திருக்குர் ஆனே!

3

'பொருளினை' இழந்து, மக்கள்
பரிதவித் தலைந்த காலை....
இருளினில் ஒளியைப் போன்றும்
இடரினில் துணையைப் போன்றும்
பெரும் பொருள் செல்வமெல்லாம்
பேருரு எடுத்தாற் போன்றும்
அரும் பெரும் அருளாய் வந்த
அமுதமே திருக்குர் ஆனே!

4

ஆழ் கடல் ஆணி முத்தை
அவனியோர் வியக்கும் வண்ணம்
நாள்தொறும் அள்ளி அள்ளி
நிறைவுறக் குவித்தல் கூடும்!
வாழ்வியல் விளக்கம் தந்த
வேதத்தில் விளைந்த முத்தை
வாழ்தொறும் அள்ளினாலும்
முடியுமோ! திருக்குர் ஆனே!

5

அவிந்திடும் உலகி னோரின்
அகத்தினைத் திறந்து வைத்து....
புவியினைப் புரக்க வந்த
பொன்னொளிப் பருதி போன்ற
சிவிகையாம் நபிகள் நாவில்
சிறப்புடன் உலவி வந்த
கவிந்திடும் முகிலே! வாய்மைக்
கவிதையே! திருக்குர் ஆனே!

6

ஆண்டுகள் பலவாய் இந்த
அவனியில் மனிதன் என்பான்
பாண்டு நோய் போலும் பொல்லாப்
பாவ நோய் பிடித்து வாட்டி....

மாண்டு போய் மடிதல் கண்டு
மனுக்குலம் மீள வென்று
ஈண்டு நாள் வரையும் 'நோய்கள்'
அகற்றிடும் திருக்குர் ஆனே!

7
காற்றையும் சுவாசிக்காமல்
'கூற்றையும்' கவனிக்காமல்
வேற்றெனத் தள்ளி விட்டு
விலகியும் வாழ்தல் கூடும்!
போற்றுவர் எல்லாம் போற்றும்
பூம்புனற் புனித ஊற்றை....
வேற்றெனத் தள்ளி விட்டு
வாழ்வரோ திருக்குர் ஆனே!

8
ஆழ்கடல் நீரை யெல்லாம்
அழகிய மைகளாக்கி
சூழ்ந்திடும் மரத்தை யெல்லாம்
சீரிய பேனா வாக்கி
வாழ்ந்திடும் வண்ணம், வாய்மை
விரிவுரை எழுதி னாலும்....
'ஆழ்ந்திட' முடியா தென்னும்
ஏதுவே திருக்குர் ஆனே!

9
கோடையி னிரவிற் தோன்றும்
குளிர் நிலா சொரிந்த பாலின்
ஆடையாய்ப் பனியின் போர்வை
அழகுறப் படிந்தாற் போன்று
நாடுகள் தோறும் எங்கள்
நறை மிகு 'குர்ஆன்' என்ற
ஏடுகள் படிந்து நாளும்
இலங்குமோ திருக்குர் ஆனே!

⑩
பற்றைப் பறட்டை மேய்ந்து
பருகவும் நீரில் லாமல்
பற்றியே பதறி, ஓடிப்
பரிதவித் தலறி மாயும்
சற்றுமே அறிவில் லாத
சின்ன மான் குட்டி போன்ற
தற்பரின் தாகம் எல்லாம்
தணித்திடும் திருக்குர் ஆனே!

⑪
'என்னிலே ஐயம் உண்டா...?
உண்டெனில், இதுபோல் வாழும்
பொன்னிழை பூண்டிழைத்த
புதுமையாம் வசனம் ஒன்றை -
கன்னலைப் பிழிந்த சாற்றை -
கடலினை - கவிதை ஊற்றைப்
பின்னியே தருவீர்!' என்ற,
புதுமையே! திருக்குர் ஆனே!

⑫
ஒரு கணம், கோடி மாற்றம்
உலகெலாம் நிகழும் போது
இரு ஏழு நூற் றாண்டாக
இலங்கிடும் 'குர்ஆன்' மட்டும்
பொருளிலோ அன்றி, ஒற்றைப்
பதத்திலோ மாற்றம் இன்றி
தருவென வளர்ந்து நிற்கும்
தர்மமே! திருக்குர் ஆனே!

⑬
காரணத் தோடு வாய்மைக்
கால்களை நாட்டி, நெஞ்சில்
பூரண நிலவைப் போன்ற,
'பெருந்திரு' முழுதும் கூட்டித்

தோரண மெல்லாம் போட்டுத்
துலங்கிடும் தூய வீட்டில்
யாரெவர் என்றில் லாமல்
எவருமே புகும் குர்ஆனே!

14

மனிதனின் உணர்வை யெல்லாம்
மதித்திட வேண்டும்! வையப்
புனிதனாய் அவனை, என்றன்
வாரிசாய்ப் படைத்தேன்! வாகாய்ப்
பணிவுடன் ஏற்பீர்! பாவப்
பகைகளை துடைப்பீர்! மண்ணில்
துணிவுடன் வாழ்வீர்! என்ற,
தூய்மையே திருக்குர் ஆனே!

15

'தாமரை இலையில் தண்ணீர்த்
துளிகளைப் போன்று வாழ்ந்து
பூமியில்.... ஆணும் பெண்ணும்
போய்விட வேண்டும்' என்ற,
'சாமிமார்' கூறும் வாழ்வுத்
தத்துவம் செயற்கை! 'சேர்ந்து'
பூமியில் வாழ்க! என்றே....
புகன்றிடும் திருக்குர் ஆனே!

16

ஆண்களைப் போன்று பெண்கள்
அவனியில் உரிமை யோடு
தூண்களாய் வாழ, தூய
சட்டங்கள் தொகுத்து வைத்து
மாண்புகள் அழிந்திடாமல்
மாதரை மதித்துக் காத்த
வான்புகழ் கொண்ட எங்கள்
வண்மையே திருக்குர் ஆனே!

17
அகிலமே போற்று கின்ற
அரசியற் திட்டம் ஒன்று
முகிலெனப் பொழிந்த போது....
முஹம்மது நபி(ஸல்) அள்ளி
அகிலெனச் செயல் கலந்து....
அழகுறும் வாழ்வு கூறும்
தகையினைத் தந்த தியாக
தீபமே! திருக்குர் ஆனே!

18
'சந்திரன் மட்டும் அல்ல
சகத்தினில் படைத்த யாவும்
சிந்தனை செய்வார் யார்க்கும்
சிறப்புடன் பணியும்' என்று,
முந்தியே அறிவின் ஊற்றைத்
திறந்ததும் நவீன காலச்
சிந்தனைக் கெல்லாம் பாதை
வகுத்ததும் திருக்குர் ஆனே!

19
சாதியை குலத்தைப் பேசி
சத்தியக் கொலைகள் செய்து
நீதியை நூர்த்து விட்டு
நெருப்பினை அள்ளி வீசும்
பாதகர் நெஞ்சமெல்லாம்
பாலினை அள்ளி ஊற்றி
ஓதியே உயர்ந்து நிற்கும்
ஜோதியே! திருக்குர் ஆனே!

20
இடியப்பம் சுட்டு விற்கும்
ஏழையாம் பாத்தும்மாவும்
கொடிகட்டிப் பறக்கும் செல்வக்
கோமகன் 'ஆகா காலும்'

'முடிவினில் எழும்பும் போது....'
'மனத்தினில் சேர்த்து வைத்த
வடிவையே கேட்பேன்!' என்ற
வாய்மையே! திருக்குர் ஆனே!

௩
'பொன் பொருள் செல்வமெல்லாம்
பொதுவுட மைகள்!' என்றே
இன்னரும் திட்டம் தீட்டி
இலகுவாய் வகுத்து வைத்து....
பொன்றிடும் மனித ஆத்மா
புரந்திட 'ஸக்காத்' என்ற
குன்றிடா விளக்கை ஏற்றி
குதிர்ந்திடும் திருக்குர் ஆனே!

௪
பசியினால் உலக மாந்தர்
படுகின்ற பாட்டை யெல்லாம்
புசிப்பதும் போக வாழ்விற்
துய்ப்பது மாக இங்கு
வசித்திடும் குபேர ரெல்லாம்
வறுமையை உணர, உள்ளங்
கசிந்திடும் நோன்பைத் தந்த
கவிதையே! திருக்குர் ஆனே!

௫
ஆண்டுகள் தோறும் அந்த
"அறபா"மைதானில் கூடி
"ஆண்டியும் ஆளுகின்ற
அரசனும் சமமே" என்று.
ஆண்டவன் ஆணை ஏற்று
அவனடி பணிந்து ஹஜ்ஜை
பூண்டும் கடமை கூறி ...
பொலிந்திடும் திருக்குர் ஆனே!

24
ஆண்டிடும் உரிமை யெல்லாம்
ஆண்களை அடுத்த பின்பும்
'ஆண்களின் ஆடை பெண்கள்
பெண்களின் ஆடை ஆண்கள்!
காண்பதே கடமை!' என்று,
கலை நயம் வழியக் கூறி....
மாண்புறும் முழுமை வாழ்வை
முகிழ்த்திடும் திருக்குர் ஆனே!

25
தொலலைகள் யாவும் சூழ்நது
துவண்டிடு வோர்கள் எல்லாம்
'இல்லையே!' என்று, இங்கு
ஏங்கிடத் தேவை யில்லை!
நல்லவர், நயங்கள் நல்கும்
நித்திய மரமாய் நின்று....
கொல்லெனப் பூத்துக் காய்த்து
கனியுவார் எனும் குர் ஆனே!

26
விண்ணெலாம் வெள்ளி சூழ
வீறுடன் எழுந்து வந்த
தண்மதி சொரிந்த நெய்யில்
துய்த்திட வைத்த எங்கள்
எண்ணமே! செயலே! எம்முள்
இயைந்திடும் அன்பின் பாசக்
கிண்ணமே! பார்வை தந்த
கண்களே! திருக்குர் ஆனே!

27
நாவினுக் கடிமை யாகி
நானில மக்க ளெல்லாம்
நோவினை கொண்டார்! பின்பு,
நெஞ்சினாற் சலித்துப போனார்!

ஆவியும் சேர்ந்து ஓர்நாள்
அலுப்பினில் மாயும்! ஆனால்,
சாவிலுந் தெவிட்டி டாத
சுகந்தமே! திருக்குர் ஆனே!

௮
மண்ணெலாம் கமழ்ந்து வீசும்
மணங்களும் மற்றும் உள்ள
விண்ணெலாம் வாழும் வான
வர்களின் வாழ்த்தும் சேர்ந்து
தண்டலை உலகில் வீசும்
'தனித்துவ' ஒருமைப் பாட்டைக்
கண்டிடக் கண்கள் தந்த
காவியம் திருக்குர் ஆனே!

௯
கழுதைகள் கத்தும் பொல்லாக்
கடுமையும் கூகை கூடி
அழுவதால் எழுந்த ஓலம்
அவலமாய் காதிற் கேட்டும்
அழிவதால்.... 'எழுந்து நிற்க
விழைகிறோம் துயர்கள் நீங்க
நுழைகிறோம்! ஞான வீட்டின்
நாதமே! திருக்குர் ஆனே!

௰
கடு வெயில் பட்டுக் காய்ந்து
கனன்றிடும் பாறை போன்ற
கடு மனம் பூண்ட நெஞ்சக்
கசடரின் மீது, வாய்மைக்
கொடுமுடி பூண்ட வேதக்
குளிர் நிழல் விழுந்தாற் போதும்
கடுமனம் கரைந்து.... வாழக்
காரணம் திருக்குர் ஆனே!

31
பகைவரே எனினும் செய்த
        பிழைகளைப் பொறுத்தார் வாழ்வில்
தகமைகள் கூடும்! உள்ளம்
        தூய்மையும் அடையும்! ஏகன்
மகிமையும் வாய்த்து, வான
        வர்களும் வாழ்த்துப் பாடி
பகைகளும் நீங்கும்! என்றே
        பகர்ந்திடும் திருக்குர் ஆனே!

32
நெற்றியின் வியர்வை சிந்தி
        நெடும் பகல் முழுதும் காய்ந்து
பற்றிடும் வயிற்றை எண்ணிப்
        பாடுபட் டுழைக்கும் ஏழை
உற்றிடும் துன்ப மெல்லாம்
        உணர்ந்திடச் செய்த, வாழ்வின்
வெற்றியே! வையம் போற்றும்
        வேதமே! திருக்குர் ஆனே!

33
நாடுகள் தோறும் ஊறும்
        நறும் புனல் நதியாய் ஓடி....
காடுகள், வயல்கள், பாய்ச்சி
        கடலையே அடைதல் போல
நாடுகள் தோறும் ஏக
        நாயனின் நெறியைக் கூறும்
பீடுடை மதங்கள் யாவும்
        போற்றிடும் திருக்குர் ஆனே!

34
மனிதனின் ஒருமை யெல்லாம்
        மொழியினால் நிறத்தால் நாட்டின்
தனித் தனிப் பிளவால் மோதி
        தகர்ந்து போய்ச் சிதைந்த போதும்

தனித்தனி வணங்க எந்தத்
தெய்வமும் கண்டாருண்டோ?
மனிதமா குலத்தின் ஏகன்
ஒன்றெனும் திருக்குர் ஆனே!

35
உண்மையின் மார்க்க மென்றால்
ஏகனை 'ஈமான்' கொண்டு
எண்ணத்திற் கூட எந்த
'இணைவைத்தும்' வாழ்ந்திடாமல்
எண்ணமும் செயலும் தூய
தாகவே இருக்க வேண்டி....
வண்ணமும் வாழ்வும் ஓதும்
வண்மையே! திருக்குர் ஆனே!

36
பொருப்பினை - அதனைப் பூந்து
பிளக்குமே இரும்பை - காய்ச்சும்
நெருப்பினை - நூர வைக்கும்
நீரினை - காற்றை - எல்லாம்
ஒருமுகப் படுத்தி னாலும்....
உண்மையில் 'தருமம்' என்ற,
பெருமையே உயரும்! என்ற
போதமே திருக்குர் ஆனே!

37
ஒருவிதை வளர்ந்து.... வாகாய்
அரும்புகள் மலர்ந்து பூத்து....
பெருமையாய் காய்த்தல் போல
'பாரினில் 'ஆதம்' என்ற
ஒருவிதை விழுந்து.... மனித
அரும்புகள் பூத்துக் காயத்த
இருபேருலகம்' என்றே....
இயம்பிடும் திருக்குர் ஆனே!

38
தன்னலம் இழந்த தூய
        தியாகமே இஸ்லாம்! அந்த
பொன்மனம் பூண்டார் நெஞ்சே
        பொன்னுல கடையும்! வாழ்வில்
வன்மனம் பூண்டார் நெஞ்சம்
        வெம்பியே அழியும்! வாய்மைப் .
புன்னகை பூத்த வாழ்வே
        பொலிந்திடும் திருக்குர் ஆனே!

39
திரைகடல் ஓடித் தேடும்
        திரவியம் யாவும் ஏகன்
இறையருள்! இதயத் தோடு
        இனிமைகள் சேர்ந்து செய்யும்
வரையறை பூண்ட வாணி
        பங்களும் வணக்கம்! என்று,
கரையிலா விளக்கம் கூறும்
        கருணையே! திருக்குர் ஆனே!

40
பொறையுடன் நீண்ட பாசக்
        கயிற்றினைப் பற்றி னோர்கள்
குறைகளே காணுங் காலக்
        குவலயக் கடலில் ஆழ்ந்து....
மறைந்திட மாட்டார்! என்றும்
        மிளிர்ந்திடு வார்கள்! வாழ்வில்
நிறைந்திடு வார்கள்! நெஞ்சின்
        நாதமே! திருக்குர் ஆனே!

41
காய்ச்சிய பாலில். பாகு
        கலந்து. அதில் பழமும் சேர்த்து
வாய்ப்புடன் வழங்கும் போது....
        வெறுப்பினில் பறித்து வீசும்

நோய்மனம் பூண்டார் வாழும்
　　நாட்டினில்.... பலவந் தத்தால்
தூய்மையின் மார்க்கம் கூறல்....
　　தவிர்த்திடும் திருக்குர் ஆனே!

12
தருவென வளர்ந்து.... தூய்மை
　　துலங்கிடும் இதயந் தானும்....
நெருப்பினில் கிடந்த பூக்கள்
　　நீறெனப் பூத்தல் போல -
இரும்புமே மண்ணில் ஈரக்
　　கறள் பிடித்(து) அழிதல் போல
எரிச்சலால் அழிந்தே போகும்!
　　என்றதும் திருக்குர் ஆனே!

13
புவியினில் உயர்ந்தோர் போற்றும்
　　பெண்மையை - அன்பின் ஊற்றை -
கவிந்திடும் முகிலை - காதற்
　　கோட்டையை - கவிஞர் 'கூடும்'
கவிதையை - கோடை காலக்
　　குளிர்ந்த பால் நிலவை - கோலச்
சிவிகையை - செறிந்து கூறிச்
　　செழித்திடும் திருக்குர் ஆனே!

14
அத்தர் வியாபாரி உன்றன்
　　ஆருயிர்த் தோழன் என்றால்
அத்தரும் கிடைக்கும்! அன்றேல்
　　அதன் மண மேனும் வாய்க்கும்!
இத்தகு உவமை போன்று....
　　ஈடிலா துயர்ந்து, மேன்மை
தந்திடும் தோழர் நட்பைத
　　தேர்ந்திடும் திருக்குர் ஆனே!

15
வையமும் அதிலுண்டான
வளங்களும் வாய்ப்பும் வாகாய்
துய்யவன் படைத்து, தேர்ந்து
திளைத்திட வைத்தான்! ஆனால்,
ஐயகோ! ஏனோ இன்னும்
அவனருள் உணர்ந்திடாமல்
நைகிறார்! நலிந்து போனார்!
நீதியே! திருக்குர் ஆனே!

16
இறைவனே அழகு! ஏதம்
எதுவுமே கலந்திடாத
மறையவன் படைப்பு எல்லாம்
மாபெரும் அழகு! அந்த
நிறைதரும் அழகில் நெஞ்சம்
நீந்திடு வோர்கள், என்றும்
நிறைவுடன் நீடு வாழ
நேர்ந்திடும் திருக்குர் ஆனே!

17
தண்ணிலா சொரியும் பாலில்
தரணியே முழுகுதல் போல்
உண்மையின் நெஞ்ச மென்றால்....
உலகிலோர் முடுக்கில்.... வாழும்
எண்ணமே இன்றி, ஏங்கி
அழிந்திடும் மனிதன் மீது....
எண்ணியே இரங்கக் கூறும்
இதயமே! திருக்குர் ஆனே!

18
தத்துவம், தர்க்கம், மார்க்கம்
தார்மீகக் கலைகள் யாவும்
நித்தமும் ஆய்ந்து, மேதை
முத்திரை குத்தி னோரும்....

நித்தியன் அன்பே கண்டார்!
நாயனுக்(கு) உவமை காணார்!
சத்தியப் பண்பைக் கூறிச்
செழித்திடும் திருக்குர் ஆனே!

49
இறைவனின் அன்பை யெல்லாம்
அடைந்திட விரும்பு வோர்கள்,
இறைவனின் அடியார் மீது
'இவர் அவர்' என்றில்லாமல்
கறையிலா அன்பை அள்ளி
கனிவுடன் சொரிவார்! என்று,
மறை நிகர் மனிதர் மேன்மை
மொழிந்திடும் திருக்குர் ஆனே!

50
நோயினால் அழுந்தி, நாளும்
நலிந்திடு வோர்கள் தம்மை
தாய்மையின் தாபத் தோடு
தேற்றிடும் மருத்துவர் போல்
மாய்மையின் பவத்தால் நாளும்
மயங்கிடு வோர்கள் மீது....
தூய்மையின் தாபம் கூர்ந்து
துலங்கிடும் திருக்குர் ஆனே!

51
வெள்ளரிப் பழத்தைப் பீட்டு
வைத்ததைப் போன்றும் ஆழித்
துள்ளலில் தோன்று கின்ற
தூய வெண்ணுரையப் போன்றும்
அள்ளி அள்ளியே முடிந்திடாத
அழகிய பூவல் போன்றும்
தெள்ளிய இதயம் தந்த
தேவையே திருக்குர் ஆனே!

52
புதியதோர் கொள்கை ஒன்றை
போதனை புரிந் திடாமல்
பதி உரு வான நாளாய்....
புரிந்த நல் 'சமாஜோ'டும்
'அதிபதி அல்லாஹ்!' கூறும்
அழகிய 'அமல்களோ'டும்
'கதியினை' அடைவதற்கு
காட்டிய திருக்குர் ஆனே!

53
'செயல்' எனும் ஆயுதத்தால
செம்மையாய்ப் புண்ணைக் கீறி
துயரெலாம் நீங்க, தூய்மைச்
சிகிச்சைகள் செய்தல் போல....
செயல்களைப் பொறுத்தே வாழ்வின்
செம்மையும் அமையும்! என்று,
உயர் திரு வழியை ஓதும்
ஓர்மையே திருக்குர் ஆனே!

54
விடத்தினை அருந்தி னோர்கள்....
வெள்ளையோ? கறுப்போ? மாண்டு
மடியுவர்! ஆனால் பாலைப்
பருகினோர் எவர் என்றாலும்
உடல் நலம் பெற்று, ஊட்டம்
உயர்ச்சியை அடைவர்! ஈது
நடைமுறை! என்று, வாழ்வின்....
நெறி தரும் திருக்குர் ஆனே!

55
முதலைகள் எல்லாம் சேர்ந்து
மீன்களைப் பிடித்துத் தின்று
மதர்த்திடல் போல, நாட்டின்
முதலைகள், வட்டி ஊத்தை

குதப்பியே கொழுத்து வாழும்
கேடரை வெறுத்து 'வாய்மைக்
கதுப்பினில்' முத்தம் தந்து....
களித்திடும் திருக்குர் ஆனே!

௭

பாரெலாம் ஒளியை வீசும்
பகலவன் சுடரைப் போன்று,
பாரிலோர் முடுக்கில் வாழும்
பேதையின் நெஞ்சிற் கூட
பேரொளி பரவி வாய்மைப்
பிளம்புகள் தோன்றக் கூடும்!
ஆரிதை அறிவார்? அவனே....
அறிந்தவன்! திருக்குர் ஆனே!

௮

மண்ணினால் படைக்கப்பட்ட
மனிதனே.... 'மறுத்த போது....'
'மண்ணெனில்.... அதிலே தோன்றும்
தாவரம், மற்றும்.... பொருளினை
உண்டதால்.... விளைந்த சத்தே
இரத்தமாய் ஊறி.... 'கலவிக்
கொண்டதால்' உயிர்கள் இங்கு
பிறந்தன!' எனும் குர்ஆனே!

௯

எழுதப் படிக்கத் தெரியாத
'இறைவன் தூதை' உலகிற்கு
எழுதப் படிக்க அறிவிக்க
அனுப்பி வைத்த அதிசயத்தை....
பழுதே இல்லாப் பெருவாழ்வை
படைத்துத் தந்த அற்புதத்தை....
முழுவே தங்களும் முக்திபெற
முதிர்ந்த வேதம் குர்ஆனே!

59
பொருளினைப் பதுக்கி வைத்து
பாதகம் செய்து, ஏழை
இருளிலே இடரச் செய்யும்
இரு நிதி படைத்த செல்வர்
'சுரியினை' அள்ளி நாளும்
சுகந்தமாய்ப் பூசிப் பூசித்
திரிகிறார்! ஐயோ! என்று....
திருந்துவார்?' எனும் திருக்குர் ஆனே!

60
அழகிய மனிதர் - தூய
ஆதமே தவறு செய்து
விழுந்தனர் உலகில்! வேத
விளக்கமும் அதுவே! என்றால்....
பிழைகளைப் புரிந்திடாதார்
புவியினில் உண்டோ? பாவக்
களைகளை அகற்ற 'தௌபா'
கூர்ந்திடும் திருக்குர் ஆனே!

●

**1967,68 ஆம் ஆண்டுகளில்**
**நோன்புமாதம் முப்பது நாட்களும்**
**தினம் ஒரு கவிதையாக**
**வீரகேசரியில் பிரசுரமாகியது.**
**'ஹிஜ்ரி 1400' ஆண்டு நிறைவாக**
**மருதமுனை,**
**'லுஜ்னதுல் உலமா' சபையினர்**
**நடத்திய**
**கவிதைப் போட்டியில்**
**இக்கவிதை முதற் பரிசைப் பெற்றது.**

## ....பிரகடனம்!

தலைமுறை தலைமுறையாய்
எங்கள் கண்களில் கொட்டிய
இரத்தத் துளிகளையும்....
பாழ் வயிற்றில் மூண்டெழுந்த
பார நெருப்பையும்....
நீங்களும் உங்கள் வர்க்கமும்
நினைத்துப் பார்த்ததே கிடையாது!

அப்படி..., 'நீங்களாகவே....
எங்களை.... நினைத்துப் பார்ப்பீர்கள்!'
என்று, எதிர்பார்ப்பதற்கு
நாங்கள்.... கருத்துக் குருடர்களுமல்ல!

கண்களில் கொட்டிய இரத்தத் துளிகளையும்
பாழ் வயிற்றில் மூண்டெழும் பாரநெருப்பையும்....
நெஞ்சின் நெடுமூச்சுகளையும்....
'இலாபம்' என்ற, பெயரிலும்
'வட்டி' என்ற, மறுபெயரிலும் சுரண்டி....
தோட்டம் துரவுகளாகவும்

தொழிற் சாலைகளாகவும்
காணி பூமிகளாகவும் கார் பங்களாக்களாகவும்
குவித்து வைத்துக் கொண்டு....
போதாமல்.... மேலும் எங்களை....
கர்ணகடூரமாக சுரண்டுகின்றீர்கள்!

போதாக்குறைக்கு....
நீங்கள், எங்களிடம்....
'அழகும்' 'எடுப்பும்' காட்டுகின்றீர்கள்!
இந்த யுகத்தின் இயல்பை உணராமல்....

'எங்களுக்கும்
எங்கள் அடுத்த தலைமுறைக்கும்
தேடி வைத்திருக்கிறோம்!
எங்களை.... ஆருமே அசைக்க முடியாது!'

என்று,
எந்த உத்தரவாதமும் இல்லாமல்
'அழியும்' எங்களைப் பார்த்து....
இறுமாப்பும் பெருமையும் பேசுகின்றீர்கள்!

நீங்களோ....
'பசி இல்லையே...!' என்று....
'மருந்து' தேடுகின்றீர்கள்!
நாங்களோ....
'பசிக்கிறதே!' என்று....
'பாண்' தேடுகின்றோம்!
நீங்கள் ருசிக்கு சாப்பிடுகின்றீர்கள்!
நாங்கள் பசிக்கு சாப்பிடுகின்றோம்!
இந்த லட்சணத்தில்....
நீங்களும் நாங்களும்....
'ஒரே இனம்' 'ஒரே சமூகம்' என்றும்....

'நாம் சகோதரர்கள்!'
'ஒரே உம்மத்'* என்றும்....
எங்களை ஏமாற்றுகின்றீர்கள்!
இதை நம்ப வேண்டுமென்று....
நிர்ப்பந்தமும் செய்கின்றீர்கள்!
அதனாற்தான்....
"நீங்கள் எங்களைச் சுரண்டுவதற்காக
வேஷம் போடுகின்றீர்கள்!"
என்று, உலகறிய
பிரகடனம் செய்ய விரும்புகின்றோம்!

நீங்கள் முதலாளிகள்! நாங்கள் தொழிலாளிகள்!
நீங்கள் போடிமார்கள்! நாங்கள் செய்பக்காரர்கள்!
நீங்கள் உள்ளவர்கள்! நாங்கள் இல்லாதவர்கள்!
நீங்கள் சுரண்டுபவர்கள்!
நாங்கள் சுரண்டப்படுபவர்கள்!
நீங்கள் ஆளுகின்றவர்கள்!
நாங்கள் ஆளப்படுகின்றவர்கள்!
நீங்கள் 'காகிதப் புலிகளின்' வாரிசுகள்!
நாங்கள் 'சூடுபட்ட'
பூனைக் குட்டிகளின் வாரிசுகள்!

நீங்கள்....
வீரம் விளையும் வியட்நாம் மண்ணில்
விலா எலும்புகள் முறிக்கப்படுவீர்கள்!
'பாடல் பெற்ற' பலஸ்தீன் மண்ணில்
தலைகள் நொறுக்கப்படுவீர்கள்!
ஜோர்தானின் மேற்குக் கரையிலிருந்து
நீங்கள் துரத்தப்படுவீர்கள்!
நீங்கள் ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகள்!

* உம்மத் - சமுதாயம்.

அதன்.... கடைவாயில் வழியும்
எச்சிலை நக்கும் ஏவல் நாய்கள்!
எங்கள் இரத்தத்தில் உருவான
உழைப்புச் சக்தியின் உபரி மதிப்புகளை
நீங்கள்
சுரண்டி சொந்தமாக்கிக் கொண்டதாற்றான்....
மலையாக வளர்ந்தீர்கள்!
அதனாற்றான்.... நாங்கள்
குழிகளுக்கும், குப்பைத் தொட்டிகளுக்கும்
தள்ளப்பட்டோம்!

'மேடும் பள்ளமும் வாழ்வின் நியதிதான்'
'கல்வியும் செல்வமும் அவனின் அருட்கொடை!
அதை, அவன்....
விரும்பியவர்களுக்கே அளிப்பான்!"
என்றெல்லாம்....
உங்கள் 'பந்தாக்கள்' நீட்டி முழங்குகிறார்கள்!
அதற்கு விளக்கமும் தருகிறார்கள்!
அந்த விடிவில்லாத விளக்கங்களால்....
எங்கள் நெஞ்சில் மிஞ்சிக் கிடந்த ஈரமும்....
அறவே வற்றிவிட்டது!

அதனால்....
'ஏழைகளின் தலையில் ஏழ்மையை....
இறைவனே எழுதி வைத்தானா...?
அல்லது
இவர்களில் 'சிலர்...' எழுதி வைத்தார்களா?'

என்ற, நியாயமான சந்தேகம்
எங்களை ஆட்கொள்ளத் தொடங்கியிருக்கிறது!
எங்கள் விதியை
நாங்கள் மாற்றவே முடியாதா...?

எங்கள் விதியை
நாங்கள் மாற்றவே கூடாதா?
அதுதான்.... 'தலை எழுத்து' என்றால்....
அதற்கு மாற்றெழுத்து கிடையாதா...?
'அர்றஹ்மான்'* என்றும்....
'அர்றஹீம்'* என்றும்....
அவனையே நம்பியுள்ள
கோடானகோடி அடியார்களின் கதி என்ன?

'ஏழைகளாகிய நாங்கள்....
தலைமுறை தலைமுறையாக
அல்லாஹ்வுக்கு.... அப்படி....
என்ன அனியாயம் செய்து விட்டோம்?
அவனை அடிபணியவில்லையா?
அல்லது
அவன் தூதரை விசுவாசிக்க வில்லையா?'
என்று கேட்டால்....

'அவனுடைய.... நல்லடியார்களையே
அவன் சோதிக்கிறான்!'
என்று, கூறுகிறீர்கள்! போதும் போதும்....
இந்தச் சோதனையும் வேதனையும்!
இந்த 'பாலைவனத்திலும்....' நாங்கள்
'பசுந்தரைகளை' பார்க்க விரும்புகிறோம்!
பார்க்கக் கூடாதா? இது பாவமா?
இதனால் 'ஈமானைக்'* கொன்றவராவோமா....?
ஏன், எங்களை
'தேய்மானங்களாக்குகின்றீர்கள்?'

---

* அர்றஹ்மான் - கிருபையாளன்.
* அர்றஹீம் - அன்புடையோன்.
* ஈமான் - விசுவாசம். - நம்பிக்கை.

நீங்கள் போடும் வெளிச்சங்களால்....
எங்கள் இதயங்கள்
ஒளி பெறுவதற்குப் பதிலாக
இருண்டு விடுகின்றன!
சுக்குநூறாகி தகர்ந்து விடுகின்றன!
அதனால்....
ஆவேசம் கொண்ட நாங்கள்....
எங்கள் உழைப்பின் உபரி மதிப்பாக
உங்களிடம் குவிந்து கிடக்கின்ற
உடைமைகளில்....
எங்களுக்கும் பாக்கியதை உண்டென்று
பிரகடனம் செய்கின்றோம்!

எனவேதான்
நீங்கள் சுரண்டுவதற்கு
வசதியாய் இருக்கின்ற
இந்த சுரண்டும் அமைப்புக்கு....
ஆருதான் வந்து
எந்த முட்டைத்தான் கொடுத்தாலும்....
அதை தகர்த்தெறிய விரும்புகிறோம்!

'எங்கள் தாத்தாவுக்கும்
ஓர் ஆனை இருந்தது...!
அதுவும்....
அது கொம்பன்.... வெள்ளை ஆனை!'
என்று, நீங்கள்.... இல்லாத கதைகளை....
இருந்த கதைகளாக.... பேசினாலும்....
அதை நாங்கள் நம்ப மாட்டோம்!
ஏனெனில்....
எங்கள் தாத்தாவுக்கு....
ஓர் ஆனை இருந்ததாகப்
பேசப்பட்ட காலத்திலும்....

எங்கள் சகோதரர்கள்
ஒரு பூனைக்குட்டிக்கும்.... வழியில்லாமல்
அலைந்து திரிந்த கதைகளையும்
அதே வரலாற்றில்தான்
நாங்கள் படித்து வைத்திருக்கிறோம்!

நீங்கள்
என்ன சொன்னாலும் சரிதான்....
'வரலாற்றில்....
இரண்டு வர்க்கங்கள் இருந்து வந்ததும்
அவற்றிடையே
போராட்டம் நடந்து வந்ததும்.... வருவதும்....
வலியது வென்றதும்....
நலிந்தது தோற்றதும்....
'யாருக்கு அதிகாரம்?' என்பதில்
'கர்பலாக்களில்'*
இரத்தம் ஆறாக ஓடியதும்....
ஆட்சிகள் கவிழ்ந்தும்.... அமைத்ததும்....
உலகத்தின் வரலாறு
'வர்க்கப் போராட்ட வரலாறே!'
என்பதும்.... அழிக்கவே முடியாத
சத்தியச் சுவடுகள்தான்!'

எனவேதான்
இந்த சமூக அமைப்பில்
வசதியாய் வாழ்ந்து கொண்டு
தங்கள் வர்க்க நலன்களை வளர்க்கவும்
அதைக் காப்பாற்றவும்

---

* கர்பலா - ஈராக்கில் உள்ள ஒரு நகரம். இங்கு இமாம் ஹுசைன் (றலி) அவர்கள் வீர மரணம் அடைந்தார்கள்.

இரட்டை நாக்குகளால் பேசும்
எந்தச் சக்தியும்....
எங்களைச் சுரண்டவும்
என்ன நியாயம் பேசவும் அனுமதியோம்!

காலம் வரும்போது உங்களின்....
முதுகெலும்புகளை முறிப்போம்!
உங்களின் கொடிய நகங்களையும்
கோரப் பற்களையும் உடைத்தெறிவோம்!
அதற்காகவே
நாங்கள் எங்களைப் புடம் போடுகிறோம்!

உங்களின் வேஷத்தை....
அம்பலப்படுத்துவோம்!
அதை விளங்க முடியாமல்....
இன்னும் 'மயக்கத்தில்' கிடக்கும்
அவர்கள்....
விரைவில் வெகுண்டெழுவார்கள்!
எங்கள் கரங்களைப் பலப்படுத்துவார்கள்!
எல்லாப் பாவங்களுக்கும்
காரணமாயிருக்கின்ற....
தனிவுடைமைப் பூதத்தை தகர்த்தெறிவார்கள்!
'கோடிக்கால் பூதங்கள்'
கொதித்தெழுவார்கள்!

நீங்களும் உங்கள் வர்க்கமும்....
எங்கள் மீது
எந்தச் சாயத்தைப் பூசினாலும் சரிதான்
அல்லது
எங்களை.... எந்த 'ஸ்ட்' என்றாலும் சரிதான்
அதைப்பற்றி
எங்களுக்கு எந்தக் கவலையுமே இல்லை!

அதே வேளையில்....
நீங்களும் உங்கள் வர்க்கமும்
ஏதோ ஓர்
'சாயத்தைப் பூசிக்கொண்டுதான்
இதைப் பேசுகின்றீர்கள்! என்பதையும்....
அதை மறைக்க
'தீக்கோழிச் சாகஸங்கள்!' செய்கிறீர்கள்!
என்பதையும்.... நாமறிவோம்!

எனவேதான்
'சந்தர்ப்பம் பார்த்து'
உங்களின் 'வர்க்க வசதிக்காக'
அல்லாஹ்வின் திருநாமங்களை
சாட்சிக்கு இழுக்க வேண்டாம்!
என்று, அறை கூவல் விடுக்கின்றோம்!
ஏனென்றால்....
எல்லாவற்றையும்
அறிந்தோனும் ஞானமுடையோனுமாக
அல்லாஹ் இருக்கின்றான்!

அவனது பெயர் சொல்லி
நீங்கள் செய்கின்ற....
சுரண்டல்கள், மோசடிகள், திருட்டுகள்....
அத்தனையும்
சந்தியிலே இங்கு.... நாறிக் கிடக்கிறது!

எனவேதான்....
அல்லாஹ்வின் திருநாமத்தையும்
அவனது தூதரையும்
சொல்லிக்கொண்டு....
இனியும் உங்களின்.... வர்க்க நலன்களை
காப்பாற்ற முடியவே முடியாது!

ஏனென்றால்.... அவன் 'அர்றஹ்மான்!' -
எல்லார்க்கும் ஒன்றுபோல் கிருபை செய்பவன்!
அவன்.... எங்கள் தலையில் மாத்திரம்
இரும்பு உலக்கையால்
எழுதியிருக்கவே மாட்டான்!

எனவேதான்.... நீங்களாகவே
எங்கள் தலையில் எழுதி வைத்துள்ள
அந்த 'எழுத்தை' அழித்து
மாற்றி எழுதப் புறப்பட்டோம்!
இந்தச் சரண்டும் அமைப்பை
தகர்த்தெறிந்து விட்டு
வர்க்க பேதங்கள் இல்லாத
'ஒரு புதிய உலகத்தை'
ஆக்கப் புறப்பட்டோம்!

அதன்மூலம்
எங்கள் விதியை
நாங்களே மாற்றுவோம்!
எங்கள் விதியை
நாங்களே எழுதுவோம்!

இவை.... அனைத்தும்
உதட்டால் உதிர்கின்ற
உலர்ந்த கோஷங்களல்ல!
ஏங்கும் இதயத்திலிருந்து
எழுகின்ற இரத்த புஷ்பங்கள்!
இழப்பதற்கு எதுவுமே இல்லாத
இளைய தலைமுறையின்
இன்றையப் பிரகடனம்!

● **தினகரன், அக்டோபர் 1975.**

## தங்கப் பேனை

மகளே! கவிதை எழுதுவது சரிதான்....

எழுதி முடிந்தபின்
பேனையை பத்திரமாய் மூடி
பையில் குத்திக்கொள்!
மேசையில் வைக்காதே!

ஏனென்றால்...,
பேனையை திறந்து வைத்தால்...,
மை காய்ந்து மீண்டும் எழுத முடியாமல்
இடர் தரவும் கூடும்!
அதன் பின்பு
அடைப்பை உதறி, எழுதுவதற் கிடையில்....
எழுதும் 'மூடே' போனாலும் போகலாம்!
அல்லது
சின்னவள் வந்து..., மேசையில் ஏறி....
'பிக்காஸோ'வின் ஓவியங்கள் தீட்டவும் கூடும்!

அத்துடன்
அந்தப் பேனையின்

இறுதி ஊர்வலம் முடியவும் கூடும்!
ஆகவே மகளே! கவிதை எழுதுவது சரிதான்
எழுதி முடிந்தபின்
பேனையை பத்திரமாய் மூடி
பையில் குத்திக்கொள்!
மேசையில் வைக்காதே!

ஜன்னல் கதவை மட்டுமல்ல...,
அறைக் கதவையும் திறந்து வை!
ஆரோக்கியத்திற்கு அது மிகவும் நல்லது!
வாடைக்காற்றும்
கச்சான்காற்றும் வந்து வீசட்டும்!
நாய் பூனைகளும் வந்து போகட்டும்!
அவை
உனது ஆத்மாவைப் படம் போடும்!

ஆனால் மகளே! பேனையை மட்டும்
திறந்து வைக்காதே! ஏனெனில்....
அழகான பேனையைக் கண்டால்....
'எடுத்து' எழுதிப் பார்ப்பதற்கு
ஆருக்கும் ஆசைவருமோ வராதோ....
'எழுத்துக் கலைஞன்' ஒருவனுக்கு
ஆசைவரும்! அப்போது...,

உன்னைப் போல்....
பேனையை லாவகமாய் எடுத்துப் பிடித்து....
அழகாக குண்டு குண்டாய்
எழுதும் அந்த 'சொல்லேர் உழவனுக்கு'
எழுதக் கொடுக்கலாம்!
அனுபவித்து.... அவனெழுதும்
அழகான கவிதைகளில் நீயும் முழுகலாம்!
நானும் மகிழலாம்!

ஆனால்....
'உன்னைப் போல்
அவனும் அழகாக எழுதுவான்'
என்று, ஏற்கனவே....
அறிந்திருந்தால் மாத்திரமே
அது உனக்குச் சாத்தியம்!
அல்லாமல்.... எழுதக் கொடுத்தால்....
உன்னுடைய பேனை....
'பிளாட்டின' முனை பதித்த
தங்கப் பேனையாய் இருந்தாலும்....
மீண்டும் அதை வாங்கி எழுதும் போது
கிறுக்கத் தொடங்கிவிடும்!

அதனாற்தான்,
ஆரும் உன்னிடத்தில் வந்து
பேனையை எழுதக் கேட்டால்....
'இல்லை' என்று, கூறி இதயத்தை நோகாமல்
எழுதக் கொடுப்பதற்கு
'போல்ட் பொயின்ட்'
பேனாவில் ஒன்றை வாங்கி வைத்துக்கொள்!

எனவே மகளே!
நீ கவிதை எழுதுவது சரிதான்....
எழுதி முடிந்த பின் உன்னுடைய பேனையை
பத்திரமாய் மூடி பையில் குத்திக் கொள்!
மேசையில் வைக்காதே!

ஏனென்றால்.... இப்படித்தான் ஒருநாள்....
நல்ல விலை கொடுத்து வாங்கிய
என்னுடைய
'பிளாட்டின' முனை பதித்த
தங்கப் பேனையை

மேசையில் திறந்து வைத்துவிட்டு
மறந்து.... போய்விட்டேன்!
வழக்கத்தில்.... என்னுடைய அறைக்கதவு
ஜன்னல்கள்.... பூட்டுவதுமில்லை!
'பூட்டுவதால்தானே
திறந்து பார்பதற்கு எண்ணம் வருகிறது!'
என்ற, நினைப்பில்
அறைக் கதவை.... எப்போதும்
திறந்தே வைத்திருந்தேன்! ஆனால்....
ஒரு நாள்.... பூட்டாமலே போய்....
திரும்பி வந்து பார்த்தபோது....
என்னுடைய 'பிளாட்டின' முனை பதித்த
தங்கப் பேனையையும் காணவில்லை!
மேசையில்....
எழுதி முடிக்காமல் கிடந்த
'கவிதை' யையும் காணவில்லை!
கூட இருந்த 'அவனையும்' காணவில்லை!

'அவன்' எங்கிருந்தோ வந்தான்....!
பாரதியின் 'இடைச்சாதி நான்' என்றான்!
பால் போல ஓடிப் பழகினான்!

'இங்கிவ்னை யான்பெறவே
என்ன தவம் செய்துவிட்டேன்!'
என்று, இரங்கி.... எங்கும் எதிலும்....
என்னோடு அவனும் அவனோடு நானும்
பாலில் படிந்த வெண்மையாய்
ஒன்றிக் கலந்திருந்தோம்!

இவ்வளவுக்கும்.... நான் அன்று...
அவனிடத்தில்
விடைபெற்றுக் கொண்டுதான் போயிருந்தேன்!

ஆனால்.... நான்....
திரும்பி வந்து பார்த்த போது...?
என்னுடைய 'பிளாட்டின' முளைபதித்த
தங்கப் பேனையையும் காணவில்லை!
மேசையில்....
எழுதி முடிக்காமல் கிடந்த
கவிதையையும் காணவில்லை?
அவனையும் காணவில்லை?

எங்கும் எதிலும் இருட்டே தெரிந்தது!
வீட்டுக் கூரையின்
ஓட்டையினூடாக ஒழுகி விழுகின்ற
ஒளிக் கீற்றைக்கூட பார்க்க விடாமல்
'சொத்திக்கை'யினால் பொத்தி மறைத்து
'புதினம்' காட்டினார்கள்!
எங்கும் எதிலும் இருட்டே தெரிந்தது...!

ஒரு நாள்!
அண்டை வீட்டில் குடியிருந்த
அந்த மனிதர்
அவசர அவசரமாய் ஓடிவந்தார்!

'உங்களுடன் இருந்தானே....
அவன் - கண்ணன்!
நீங்கள போன அடுத்த தினமே
அவனும் போய் விட்டான்!
எங்களுடன் அவனுக்கு....
இருந்த 'உறவுகளும்'
அப்படி அப்படியே இருக்கத் தக்கதாக....
எங்களிடத்திலும்
எதுவும் சொல்லாமற் கொள்ளாமல்
இரவோடிரவாகப்.போய்விட்டான்!

'அவன்.... என்ன.... கண்ணனவன்...?'
என்று, அந்த மனிதரும்
நொந்து....
தனது கவலையைத் தெரிவித்தார்!

என் நெற்றிப் பொட்டிலொரு
மின்னல் வெட்டியது!

ஆனாலும் என்ன...?
என்னோடு.... பால் போல ஓடிப்பழகிய
அந்தப் 'பாரதியின் கண்ணன்'
மீண்டும் வருவான்!
அவனுக்காக என்....
ஜன்னல் கதவுகளை மட்டுமல்ல
அறைக் கதவையும் திறந்து வைத்து....
காலமெல்லாம் காத்திருப்பேன்!
என்று,
நெஞ்சிலோர் நெறி பூண்டேன்!

ஆனால் அவன் போனதுதான் போனான்....
என் பேனையை எடுத்தே....
என் தலை விதியை
எழுதிவிட்டுப் போய்விட்டான்!
ஆயினும் அதை அழித்து....
என் தலை விதியை நானே எழுதுவேன்!
எழுதி முடிக்காமல் கிடக்கும்
என் கவிதையையும் எழுதி முடித்து....
அதைத் தொடர்ந்து....
எழுத்தெண்ணிப் படிக்கத்தக்கதாக
அமரகாவியமும் படைப்பேன்!
புதிய 'பிளட்டின' முனை பதித்த
தங்கப் பேனையும் தேடி வாங்குவேன!

பூட்டாமலே கிடக்கும்
கதவுகள், ஜன்னல்கள் மட்டுமல்ல
அறைக் கதவும் சேர்ந்து....
நெற்றிக்கு நேரே நிமிர்ந்து
என்னை ஒருதரம் பார்த்தது!
எக்காளமிட்டு
'ஐயோ பாவமே...!' என்று சிரித்தது!

ஆயினும் என்ன...? ஆயினும் என்ன...?
எழுத
புதிய பேனையும் புதிய தாள்களும்
தேடி வாங்குவேன்!
அதற்கு கொஞ்சம் காலம் ஆகலாம்!
அதற்காக
ஜன்னல் கதவுகளை மட்டுமல்ல
அறைக் கதவையும்..... மூடிவிட்டு
திறப்புகளை....
நான்
கையோடு
கொண்டு செல்லப் போவதில்லை!

மகளே! நீ கவிதை எழுதுவது சரிதான்...!
எழுதி முடிந்த பின்
உன்னுடைய பேனையை
பத்திரமாய் மூடி
பையில் குத்திக் கொள்!
மேசையில் வைக்காதே!

●

**வீரகேசரி, மே 1991.**

## ஐந்தாவது விதி

வாத்தியார் வந்தார்
கணக்கு ஒன்றைத் தந்து
விடைகாணச் சொன்னார்!
என்னைத் தவிர,... எல்லாரும்....
கணக்கைச் செய்து
கொண்டு போய்க் காட்டினர்.
'விடைசரி'
என்று வாத்தியார் சொன்னார்!

வாத்தியார்,
வினாத்தாள் தயாரிப்பதில் வல்லவர்!
இதற்கு முன்பு....
வாத்தியார் தயாரித் தளித்த
வினாக்களுக் கெல்லாம்
விடைகள் எழுதி
ஆகக் கூடிய மதிப்பெண் பெற்று
அவரால் பலமுறை விதந்துரைத்து
விருதுகள் பெற்று
வாத்தியாருக்கும் 'வளாகத்திற்கும்'

பெருமைகள் சேர்த்துக் கொடுத்த
அவரின் அன்புக்குரிய மாணவன்தான்....
இன்று... கணக்கொன்றுக்கு
விடைவராமல் முழிக்கிறேன்!

'என்ன இன்னும்.... விடை வரவில்லையா?'
என்றார். நானும் "இல்லையே!" என்றேன்.

'என்ன நடந்தது...! உனக்கு...
மிகவும் பிரியமான கணக்குகள்தானே...?'
தலையைப் போட்டு உடைக்க வேண்டிய
அவசியம் இல்லையே...!' என்றார்.

'ஐயா! 'உங்கள்' அடிப்படை விதிகள்
தரவுகள்.... அனைத்தையும் கொண்டு....
'கூட்டிப்' பார்த்தேன்! விடை வரவில்லை!

அறவே எனக்கு விருப்பமில்லாத
'கழித்தல்' விதியைக் கொண்டும்....
கணக்கைச் செய்து பார்த்தேன்
அதுவோ.... ஆகவும் மோசம்!

பிரியத்தோடு 'பெருக்கிப்' பார்த்தேன்!
பரவாயில்லை, ஆயினும்....
'அந்த' விடைதான் எனக்கு வரவேயில்லை!

பிரியமே இல்லை! என்ன செய்வது?
உங்களின் 'அந்த விதியை' வைத்து....
'பிரித்துப்' பார்த்தேன்! அது ஆகவும் மோசம்!
கேட்கவும் வேண்டுமா...?
'கூட்டல்' விதியைக் கொண்டு
கணக்கைச் செய்து பார்தேன்!

ஆகா அற்புதம்! விடை பளிச்சென்றது!
ஆனால்.... ஐயா....
'உங்கள்' விடைதான் கிடைக்க வில்லை!

'அதனால்....
அன்புக்குரிய வாத்தியார் அவர்களே!
உங்களின் அடிப்படைக் கேள்வியில்....
எங்கோ தவறு.... இருக்கவும் கூடுமே...!
ஆதலால்,
நான்கு விதிகளைத் தவிரவும்
ஐந்தாவதாகவும்.... புதியதோர் விதியை
புனைய நினைக்கிறேன்!' என்றேன்.

'என்ன...? புதியதோர் விதியா!?' என்றார்.
'ஆமாம் ஐயா புதியதோர் விதிதான்!' என்றேன்.

வாத்தியார் எனக்கு அருகில் வந்தார்.
தன்னிடமிருந்த விடையைக் காட்டினார்.
அதை வைத்து.... கணக்கைச் செய்து
முடிக்கும் படிக்கு என்னிடம் கேட்டார்.

'ஐயா.... உங்களின் விடையை வைத்து
கணக்கைச் செய்தால்....
நிச்சயம் உங்களின் விடைவரும்!
அதில் எனக்கு.... ஐயம் இல்லையே!' என்றேன்.

'எனது விடையை வைத்து
கணக்கை செய்து முடிப்பதைத் தவிர
உனக்கு வேறு வழியே இல்லை!' என்றார்!
'அதனாற்தானே.... ஐயா....
ஐந்தாவதாகவும் புதியதோர் விதியை
புனைய நினைக்கின்றேன்' என்றேன்.

' புதியதோர் விதியைப்
புனையும் அனுபவம், ஆற்றல், அறிவு,
திறமை.... அனைத்தும்
உனக்கு வந்ததா?' என்றார்.

' ஐயா....! எனக்கு அந்த அனுபவம்,
ஆற்றல், அறிவு, திறமை.... அனைத்தும்
வந்ததோ இல்லையோ....
தயவுசெய்து.... உங்களின்
' அந்த விடையை' மாத்திரம் வைத்து
இந்தக் கணக்கை மாத்திரமல்ல....
எந்தக் கணக்கையும் செய்யும் படிக்கு
என்னிடம் நீங்கள் கேட்கவே வேண்டாம்!

புதிய கணக்கைப் போடுங்கள்!
போட்டால்.... செய்து காட்டுவேன்!
ஆனால்.... நீங்கள் போடும்....
அந்தப் புதிய கணக்குகள்
'புதிய மனிதத் தராசில்'
நிறுக்கத் தக்கதாய் இருக்கவும் வேண்டும்!

ஐயா,
சரியான விடை வந்து கிடைப்பதற்கு
சரியாகக் கணக்கையும் போடுங்கள்!
கேள்விக்கு சரியான
விடை வந்து கிடைப்பதற்கு
கேள்வியும் சரியாக அமையவேண்டும்!
ஐயா,
என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும்!

● வீரகேசரி, பெப்ரவரி 1992.

## யாத்திரை!

செங்கடலுள் தங்கத் தட்டொன்று தாழும்!
வெம் பாலை வனத்தில் வீசும் அனற் காற்று
வேகமாய் மகுடி ஊதும்!
புழுதியும் மண்ணும் சர்ப்பமாய்ச் சீறும்!
ஆயினும்....
அதன் விஷ நாக்குகள்
எங்களைத் தீண்டவே முடியாது!
ஏனெனில்....
நாங்கள் அணிந்திருக்கும்
உலகளாவிய மனிதாபிமானக் கவசமும்
பூண்டிருக்கும் சகோதரத்துவச் சங்கிலியும்
அவற்றை முறியடிக்கும்!

நாங்கள் மீண்டும் நனவாக்க நினைக்கும்
அபூபக்கரின்* சத்திய ஒளியும்
உமரின்* ஓங்கிய நீதியும்

---

* அபூபக்கர் (றலி) - 1வது ஆட்சித் தலைவர்
* உமர் (றலி) - 2வது ஆட்சித் தலைவர்

உதுமானின்*
பூமியை மிகைத்த பொறுமையும்
அறிவின் தலைவாசல் அலியின்* வீரமும்
அவற்றை தடுத்து நிறுத்தும்!

மாலை மசண்டையாகும்!
பாலைவனத்தில்
புதையும் ஒட்டகக் கால்கள்
பாரத்தை.... சற்று இறக்க இடம் தேடும்!
காய்ந்து வறண்ட ஈச்சந் தோப்பு
கண்ணில் தென்படும்!
அங்கு.... செம்மறிகள் தரையை நக்கும்!
கழுதைகள் கற்களை மேயும்!
ஆயினும்....
ஆங்கோர் சுனையில்
வெள்ளாடுகள் தண்ணீர் தேடும்!

கரடு முரடான தரையில்
நாம் கூடார மிடுவோம்!
பகலில் பெய்யும் நெருப்பு மழைக்கு
இரவில் பிறக்கும் பனிப் பேய்
உடலைக் குலுக்கி உயிரைக் கருவறுக்கும்!
பாலைவனப் புயல்....
மூட்டியிருக்கும் கணப்புச் சட்டிகளை
தூக்கி வெளியில் வீசப்பார்க்கும்!

கூடாரத்துள்.... முடங்கிக் கிடக்கும்
முரட்டுக் கம்பளிகள் முணுமுணுக்கும்!
கூடாரம் குடை கவிழ்ந்து விழப்பார்க்கும்!

---

* உதுமான் (றலி) - 3வது ஆட்சித் தலைவர்.
* அலி (றலி) - 4வது ஆட்சித் தலைவர்.

ஆயினும்.... வாசலில் கட்டியிருக்கும்
'ஹரிக்கேன் லாம்பு'
அமைதியாக எரிந்து கொண்டிருக்கும்!

துடுப்புகளில்லாத பிறைத் தோணி
ஆகாயக் கடலில் துறை தேடும்!
அதற்கு.... தாரகைத் தேவதைகள் வழிகாட்டும்!

ஆட்காட்டிப் புள்ளொன்று....
ஆளரவம் காட்டும்! அர்த்த ராத்திரியில்....
திடீரென்று.... ஒரு 'வள்ளா'*....
அவரோகணம் இசைக்கும்!
அது.... அடிமைப் பட்டயமாய் எதிரொலிக்கும்!

இதற்கு மத்தியில்
இராக்குளத்தில் 'இஷா'* பூக்கும்!
'மு.'.மீன்கள்'* அள்ளி நுகர்வார்கள்!

வயிற்று நெருப்பணைக்க
செம்மறிகள் தீயில் கருகும்!
தீச்சுவாலைகள் அதற்குத் தூபமிடும்!
வகைந்ததை.... வட்டக் களரி போட்டிருந்து
பகிர்ந்து உண்ணுவோம்!

ஈச்சம் பாய் மெத்தையாகும்!
வல்லுவம் தலையணையாகும்!
நித்திரைக் கண்ணிலும்
இராக்குருவிகள் இரங்குவது கேட்கும்!

---

*வள்ளா - 'பீள்ளா' என்ற சிங்களச் சொல்லின் திரிபு. மட்டக்களப்பு வழக்கு - நாய்.
*இஷா - இரவு நேரத் தொழுகை.
*மு.'.மீன்கள் - பூரணமான இறை விசுவாசிகள்.

அலுப்புக் கன்னியின் ஆலிங்களத்திலும்
இறையச்சமும் ஏந்தல் நபியின்
இலட்சியமும் சுடர்விடும்!
மெள்ள எழுந்து.... 'தயம்மம்'* செய்தபின்
'தஹஜ்ஜத்'* நடக்கும்!
மீண்டும் கொஞ்ச நேரம்....
ஈச்சம் பாய் மெத்தையாகும்!
வல்லுவம் தலையணையாகும்!
கோழித் தூக்கமும் நடக்கும்!

அந்த ஆட்காட்டிப் புள்.... மீண்டும் மீண்டும்
சுற்றி வளைத்து தாழப்பறந்து
ஆளரவம் காட்டும்!
யாத்திரையில்.... கூடவந்த ஒட்டகத்திலொன்று....
நாயாக உரு மாறிக் குரைக்கும்!
இனி.... அந்த 'நடையன்'* விசர் பிடித்து
ஆரையும் கடிக்கும்!
அதற்காக.... 'கச்சைத்தோடையில்
காய்ச்சிய எண்ணையை*
கையோடு.... கொண்டுவரவில்லையே!'
என்று, நாம் கவலைப்படப் போவதில்லை!
ஏனெனில்.... விசர்நாயை வழியில் யாரும்....
விட்டு வைக்கப் போவதில்லை!

---

* தயம்மம் - தண்ணீர் கிடைக்காத போதும் தண்ணீரை பாவிக்கக் கூடாத சந்தர்ப்பத்திலும் தொழுகையை நிறைவேற்றுவதற்காக மண்புழுதியைக் கொண்டு சுத்திகரித்துக் கொள்ளும் ஒரு முறை.

* தஹஜ்ஜத் - இரவு நித்திரைக்குச் சென்று, பின் எழுந்து நடுநிசியில் நிறைவேற்றப்படும் தொழுகை.

* நடையன் - நாய்.

அர்த்த ராத்திரியில் அந்த விசர்நாய்....
பிலாக்கணம் வைக்கும்! பித்தம் தலைக்கேறி
கண்கள் சிவந்து, நாக்கு இழுபட்டு....
இரவும் பகலும் அலைந்து திரியும்!

ஊளையிட்டும்.... உரத்துக் குரைத்தும்....
ஊரை உசுப்ப நினைக்கும்!
எதிரிகளின் எலும்புக்காக எங்கள் யாத்திரையை
காட்டிக்கொடுக்கவும் கனவு காணும்!
ஆனால்.... அதற்குமுன்....
ஆருமே அந்த விசர்நாயை
விட்டுவைக்கப் போவதில்லை!

எந்த வேளையிலும்....
'அபூஜஹ்ஹில்'* களின் அம்புகள்....
எங்கள் கூடாரத்தைப் பொத்துக்கொண்டு
வந்து விழலாம்! அப்போது....
அம்பறாத் தூணியை சுமந்தபடி
வில்லை ஏந்திக்கொண்டே விழித்தெழுவோம்!

நாங்கள் தொடுக்கும்.... சத்திய அஸ்திரங்கள்
எதிரிகளைச் சல்லடைபோடும்!
நாங்கள் விடுக்கும் நீதிக் கணைகள்
நயவஞ்சகர்களை நடுங்கவைக்கும்!
நாங்கள் சரிக்கும் அறிவின் அம்புகள்
அறிவிலிகளை அம்பலப்படுத்தும்!
நாங்கள் பூண்டிருக்கும்
பொறுமையின் கவசங்கள்

---

*அபூஜஹ்ஹில் - 'மடத்தனத்தின் தந்தை' என்று, நாமகரணம் சூட்டப்பட்ட, இஸ்லாத்தினதும் நபிகள் நாயகம் (ஸல்-லம்) அவர்களினதும் பரம வைரி.

பொய்மையையும்
பொய்த் தீவிரத்தையும் பொசுக்கும்!

அகம்பாவமும்
மூடநம்பிக்கையும் ஆட்சி செய்யும்
'ஷைத்தானின்'* உலகத்தை
அடித்து நொறுக்குவோம்!
விடுதலை உலகத்தை விதியாக்குவோம்!
ஷைத்தானை மடக்கிப் பிடித்து
'குத்தியில் போட்டு'
கால்களிலும் கைகளிலும் விலங்கிடுவோம்!

விடிவெள்ளி காலிக்கும்! பாலைக் கோழி கூவும்!
'சுப்பஹு'*ப்பூ மலரும்! 'சொல்லும் செயலும்'
'துஆ'* ப் பிரார்த்தனையும்
இலட்சிய யாத்திரைக்கு ஏணிப் படிகளாகும்!
தீர்க்கதரிசனமும் திடமான வழிகாட்டலும்
தியாக யாத்திரைக்கு நேத்திரமாகும்!

இருண்ட எழுவானத் திரை விலகும்!
அறுபுக்கடலில் தங்கத் தாம்பாளம் மிதக்கும்!

கோதுமை றொட்டியும ஒட்டகப் பாலும்
காலைப் பொழுதைக 'கபனிடும்'*

---

* ஷைத்தான் - சாத்தான்.
* சுப்பஹு - விடியற் காலைத் தொழுகை.
* துஆ - நற் காரியங்களுக்காக பிரார்த்தித்தல்.
*கபனிடுதல் - மையித்தை அடக்கம் செய்வதற்கு வெள்ளைப் பிடவையால் உடுத்தல் என்பது இதன் அர்த்தம். ஆனால், இங்கே காலை உணவை நிறைவு செய்ததைக் குறிக்கும்.

எங்கள் யாத்திரை மீண்டும் தொடரும்!
யாத்திரையில் கூடவந்த ஒட்டகத்திலொன்று
தொடர்ந்து....
நாயாக மாறிக் குரைத்துக் கொண்டேயிருக்கும்!
அதற்காக யாத்திரை நிற்கப் போவதில்லை!
ஒட்டகத்தின் உடம்புக்குள் புகுந்து
நாயாக உரு மாறிய ஷைத்தான்....
மீண்டும் கூடு விட்டு கூடு பாயலாம்!
விசர் நாயாகி வெறி பிடித்து அலையலாம்!
அந்த வெறிக்கு.... சிலர் வாலாயமாகலாம்!

நாக்கில் வடியும் நச்சுத் திராவகத்தில்
அவன் ஒரு விதி செய்யலாம்!
அதை சபிக்கப்பட்டவர்கள் ஏற்றுக்கொள்ளலாம்!
அதர்மத் தேர் அவனின் வாகனமாகலாம்!
அதில் அவன் வலம் வரலாம்!
மாரீசத்தனம் அவனுக்கு மலர் மெத்தையாகலாம்!
அதில் கிடந்து அற்புதங்களும் நிகழ்த்தலாம்!

ஆனால்....
புனித யாத்திரையில் புறப்பட்டு வந்தவர்கள்
புவியைப் புரக்குமோர்
புதியதோர் விதிக்கு பூபாளம் இசைப்போம்!
அந்த இராகத்தில் பரவசமாவோம்!
அதை உலகம் முழுவதும் எதிரொலிப்போம்!
அதற்கு மனிதர்கள் வாழ்த்துப் பாடுவார்கள்!
'மலக்குகள்'* சோபனம் கூறி
சுபராகம் பாடுவார்கள்!
ஆண்டவனும் ஆசீர்வதிப்பான்!

---

* மலக்குகள் - இறைவனின் சிருஷ்டிகளில்
ஒரு பிரிவினர்.

இது எங்களின் நம்பிக்கை!
ஆனால்.... நம்பிக்கை வறட்சியில்
ஷைத்தான் 'வேறு வேதம்' ஓதலாம்!
அது ஊளையாக எதிரொலிக்கலாம்!
அந்த 'கழுதையின் குரல்'
'குயிலோசை' ஆகலாம்!
சபிக்கப்பட்டவர்கள் அதில் மயங்கலாம்!
ஆடலாம்! பாடலாம்! அதில்.... மனிதர்களுக்கும்
மலக்குகளுக்கும் அக்கறையில்லை!

புனித யாத்திரைக்கு
'அமானித'* மாக்கப்பட்ட ஒட்டகத்திலொன்றை
பாலைவனப் புயலில் பறிகொடுத்து விட்டதாக
முழு ஒட்டகத்தையே அவன்....
'சஹனுக்குள்'* புதைக்க நினைக்கலாம்!
ஆனால்.... அந்த ஒட்டகத்தைப் பறித்தெடுத்து
மீண்டும் யாத்திரைக்கு ஒப்படைக்கவும்
அவனை.... பாலைவனச் சுடு மணலினூடாக
இழுத்துச் செல்லவும் மலக்குகள் வருவார்கள்!

அவதந்திரம் செய்து
அமானிதத்தை அபகரித்துக் கொண்டு ஓடிய
அவனுக்கு.... 'நரகத்தில்....'
இரும்புச் சம்மட்டியால் அடி கிடைக்கும்!
அப்போது.... வேதனை தாங்க முடியாமல்
அவன் கத்துகிற சத்தம், நரகத்தில் உழல்கின்ற
அவன் கூட்டாளிகளுக்குக் கேட்கும்!
நஷ்டவாளிகளான அவர்களால்

---

* அமானிதம் - 'அமானத்' என்ற அறபுச் சொல்லின் திரிபு - அடைக்கலப் பொருள்.
* சஹன் - சமத்துவமாக ஒன்றாயிருந்து உண்ணுகின்ற பாத்திரம்.

அவனுக்கு எதுவுமே செய்யமுடியாது!
ஜெயம் பெற்றவர்களை
அவன் நெருங்கவும் முடியாது!
ஜெயம் பெற்றவர்கள்
அவனை நெருங்கவும் மாட்டார்கள்!
'தூர்'* மலை முகட்டில் தெய்வ நீதி வேண்டி
அவன் தியானம் செய்யலாம்!
திரும்பும் போது
'மூசா'* வின் 'ஆஸாக்கோலில்'*....
பேனை செய்து வரவும் ஆசைப்படலாம்!'
ஆனால்.... 'பொய்ஞான மூலிகை'யில்
பொடி சூரணம் செய்யும்
ஷைத்தான்களுக்கு
மூசாவின் ஆஸாக்கோல் மகிமை அளிக்காது!

பொய் ஞானப் புல்லில்
புல்லாங்குழல் செய்து புவியை மாசாக்கும்
'பிர்அவ்ன்'* களுக்கு
மூசாவின் ஆஸாக்கோல் முக்தி அளிக்காது!

ஆகவே.... அவனுக்கு....
இனி ஆகப்போவது எதுவுமே இல்லை!
அடையப் போவதும் ஒன்றுமே இல்லை!
ஏனெனில், அருளாளனும் அன்புடையோனுமாகி
அனைத்தையும் மன்னித்து....
அருள் பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வை,

---

*தூர் - மூசாநபி (அலை) தியானம் செய்த மலை.
*மூசா - ஓர் இறைதூதர்.
*பிர்அவ்ன் - மூசாநபியை எதிர்த்து நின்ற
அசத்திய மன்னன்.
*ஆஸாக்கோல் - சுக்குமாந்தடி.

அடி தொழ மறுத்து,
கர்வ நெருப்பைக்
கிரீடமாக சூடிக்கொண்ட அவனுக்கு....
அல்லாஹ்வின் கோபப் பார்வை
அனுவாதமாகி விட்டது!
சபிக்கப் பட்டவர்களுக்கு
சத்தியக் கதவுகள் மூடப்பட்டுவிட்டன!
ஏழு நரகமும் எழுதப்பட்டு விட்டன!
எந்த நல்லடியாரும் இனி.... அவனுக்கு
எதுவுமே செய்ய முடியாது!

நயவஞ்சகத்திற்கு முக்காடு போடும்
அவனின் பொய் முகமும்
எதையோ.... அடிக்கடி முணுமுணுக்கும்
அவனின் உதடுகளும்
நரக நெருப்புக்கு இரையாகி விட்டன!

உலகப் பிரசித்தி பெற்ற
'சின்ன மீனும் பெரிய மீனும்'
என்னும் உருவகக்கதை....
அவனது பேராசைக்கு உருவகமாகிவிட்டது!

அவனுடைய சாக்கடைக் காதலுக்கு....
கலீல் ஜிப்ரானின்
'முறிந்த சிறகுகளும் அதன் முன்னுரையும்'
நரக வேதனையை நெருப்பாகச் சொரியும்!
வழி தவறிய அந்த ஒட்டகம் போன்று.
பலஹீனமானவர்கள்.... அவனுக்கு பந்தாகலாம்!
பலமானவர்கள் அவனைப் பந்தாடலாம்!
அவன் வேதம் ஓதலாம்?
பொய் புரட்டில் புது வேதமும் ஆக்கலாம்?
அதைச் சுமந்து கொண்டே.....

'க.'பத்துல்லா'* வை தரிசிக்க
'இஹ்றாமும்'* கட்டலாம்!
க.'பத்துல்லாவையும் வலம் வரலாம்!
ஏன்..., 'மினா'* வில்....
அவனே அவனுக்கு கல்லெடுத்தும் வீசலாம்!
அதற்காக
'அவன்' புனித யாத்திரையை....
நிறை வேற்றி விட்டதாக அர்த்தமேயில்லை!
ஞானம் நிறைந்தவர்கள்
அவ்வாறு கூறியதுமில்லை!

எங்கள் புனித யாத்திரை தொடரும்!
வழியில் செங்கடல் குறுக்கிடும்!
அதைப் பிளந்து.... வழி சமைத்த
'மூசா' வின் பாதச்சுவடுகள்.... அங்கு தெரியும்!
அதன் ஒளியில்
அதை ஒரு நொடியில் கடப்போம்!
மீண்டும்....
'பிர்அவ்னின்' உடம்புக்குள் புகுந்து கொண்டு
எங்களை....
துரத்த நினைக்கும் ஷைத்தானே!
உன்னைச் செங்கடல் விழுங்கும்!
அங்கு புதையும் உன் சடலம்
எகிப்தின் நூதன சாலையில்
மீண்டுமோர் சரித்திரமாகும்!

---

*க.'பத்துல்லா - புனித மக்காவின் பள்ளிவாசல்.
*இஹ்றாம் - புனித ஹஜ்ஜுக்கு புறப்பட எண்ணம் கொண்டவர்கள் அதற்கு ஆயத்தமாகும் போது அணிந்து கொள்ளும் வெண்ணிற ஆடை.
*மினா - ஹஜ்ஜுக்கு செல்பவர்கள் தரிசிக்கும் ஓர் இடம்.

தியாகமும் வீரமும் விளைந்த
'பத்று' *ப் போர்க்களம்
நெஞ்சில் வெஞ்சமர் பூணும்!
சோதனையும் வேதனையும் தந்த
'உஹுதின்'* படிப்பினைகள்....
உயர் படிக்கட்டுகளாகும்!

'ஆதம்' ஆசைத்தீயில் அகப்பட்டதற்கும்
சொர்க்கத்திலிருந்து
சுரிக்குள் விழுந்ததற்கும்
பூமி இன்று போர்க்களமாய்க் கிடப்பதற்கும்
படுகுழிகள் தோண்டிய
பெருமையும் கர்வமும்....
என்றும் அவனுக்கே உண்டு, உண்மைதான்!
அதனாற்தான் அவன் சபிக்கப்பட்டான்!
அதனாற்தான் அவனது இருப்பிடம்
'ஜஹன்னம்'* ஆயிற்று!

எனவேதான் அவனால்....
இனி ஆகப் போவது எதுவுமே இல்லை!
அடையப் போவது ஒன்றுமே இல்லை!
அவனது பொய் முகங்கள் அத்தனையும்
ஏனைய,
எல்லா.... ஒட்டகங்களின் கால்களின் கீழும்
புதைக்கப்பட்டு விட்டன!

---

* பத்று - இஸ்லாமிய வரலாற்றில் முதலாவது
புனிதப் போர் நடந்த இடம்.
* உஹுது -இது ஒரு மலை. இதன் அடிவாரத்திற்தான்
இரண்டாவது புனிதப் போர் நடந்தது.
*ஜஹன்னம் - ஒரு கொடிய நரகத்தின் பெயர்.

அவளது நாய் முகமும் பேய்த் தலையும்
அந்த பாலைவனப் புயலில்
கிழித்து வீசப்பட்டு விட்டன!

சாத்தானின் சாம்ராஜ்யத்தில்....
நின்றும் நடந்தும்
நெடுஞ்சாண் கிடையில் கிடந்தும்
அங்கப் பிரதட்சணை செய்து
உருண்டு வலம் வந்து 'கப்றை'* வணங்கும்
'ஷிர்க்'* உலகத்தில்....
அவன் போடும் வேஷங்கள்
அடித்து நொறுக்கப்படும்!
அவனது வழி கேட்டிலிருந்து
உலகம் விடிவு பெறும்!

தினமும்
சூரிய உளிகள்
எங்கள் தலைகளைத் துளைக்கலாம்!
கால் பாதங்கள்
கொல்லன் உலைப் பட்டறை ஆகலாம்!

வெயிற் பாலும் வியர்வைச் சோறும்
பகல் உணவாகலாம்!
பாலைப் பனிப் புயல் போர்வையாகலாம்!
பனிக்கட்டிகள் பஞ்சணையாகலாம்!
ஆயினும்
புனித யாத்திரையில் புறப்பட்டு வந்தவர்கள்
புவியைப் புரக்கின்ற புதியதோர் விதிக்கு
பூபாளம் இசைப்போம்!

---

* கப்று - புதைகுழி.
* ஷிர்க் - இறைவனுக்கு இணைவைத்தல்.

அந்த ராகத்தில் பரவசமாவோம்!
அந்த ஜீவகானத்தில்
மனசைப் பறி கொடுத்தவர்கள்
எவராக இருந்தாலும் அவர்களை....
எங்கள் இதயத்தில் வைத்து
ஆராதனை செய்வோம்!
அவர்களில் எவரும் எவரையும்
ஏறி மிதிக்க நினைக்காத வரையில்....
அவர்களுக்காக
எங்களோடு மலக்குகளும் சேர்ந்து
சோபனம் கூறுவார்கள்! சுபராகம் பாடுவார்கள்!
ஆண்டவனும் ஆசீர்வதிப்பான்!

யாத்திரையில்.... கூடவந்த ஒட்டகத்தில் ஒன்று
மீண்டும் நாயாக மாறிக் குரைக்கலாம்!
அதற்காக யாத்திரை நிற்கப் போவதில்லை!
அந்த 'நடையன்'
விசர் பிடித்து.... ஆரையும் கடிக்கலாம்!
அதற்காக, நாங்கள்....
அதன் காலைக் கடிக்கப்போவதில்லை!
'கச்சைத் தோடையில் காய்ச்சிய எண்ணையை*
கையோடு கொண்டு வர வில்லையே!'
என்று, கவலைப்படப் போவதுமில்லை!
ஏனெனில்.... விசர் நாயை வழியில் யாரும்
விட்டுவைக்கப் போவதில்லை!

---

'கச்சைத் தோடையில் காய்ச்சிய எண்ணை'* - மனநோயாளிகளுக்கு தலையில் வைப்பதற்கு கச்சைத் தோடையில் காய்ச்சும் எண்ணை.

●

**வீரகேசரி, வாரவெளியீடு மே 1993.**

# சந்தனப் பெட்டகமும் 'கிலாபத்' கப்பலும்

அகிலம் முழுதும் அருள் மாரி பொழிந்ததும்
அதில் அகிலம் மகிழ்ந்து அள்ளி முழுகியதும்
ஆனால், அதற்கிடையில்....
போட்ட சவர்க்காரம் கழுவுவதற் கிடையில்
துலாந்து துலாக்காலின்
பத்திக்கை முறிந்து
வாளி,
கிணத்துள் கவிண்டு விழுந்ததையும்....
அதை எடுக்க
கொக்கியைத் தேடி அலைந்து திரிந்ததையும்....
எப்போதோ போட்ட
துலாந்தும் துலாக்காலும்
இப்போது....
இற்றுப் போய் நிற்பதையும்....
எண்ணி....
மிகக் கவலைக் கடலில் அமிழ்ந்தவனாய்....

மூழ்கி எடுத்த சில முத்துக்களை....
முத்தாரமாய் தொடுத்து
மூத்த தமிழ் ஈன்ற
இளய புதுக்கவிதைக்கு....
அச்சாரமாய் கொடுக்க அடியேன் வந்துள்ளேன்!
பெருமானார் என்னுமோர் அருள்மாரி....
அகிலமெலாம் பெய்யுமே!

அடாது.... மின்னல், இடி....
முழக்கங்கள் கேட்டாலும்
விடாது....
'பெருமானார்' என்னுமோர்
அருள் மாரி பெய்யும்
அதிசயத்தை - அற்புதத்தை
அழகு தமிழ் கவிதைகளில்
ஆக்கித் தர வந்திருக்கும் கவிஞர்களே!
'மீலாதுன் நபி' பேரில் மேவும் கவியரங்கை,
கோலாகலம் செய்யக்
குவிந்திருக்கும் அவையோரே!
அனைவருக்கும் அன்பின் ஸலாம்.

'முஹம்மது' (ஸல் - லம்) என்னுமோர்
முழுமதி பிறந்ததால்....
மண்ணும் விண்ணும் மனம் குளிர்ந்தது!
நாடும் செழித்தது! காடும் செழித்தது!
'றஸூல்' என்னுமோர் ஜோதி எழுந்ததால்....
இருள் அகன்றது! ஒளி வந்தது!
ஏகத்துவம் எங்கும் பரவியது!
'இறைக்கு இணை துணை இல்லை'
என்றாகியது!
'அரசனும் ஆண்டியும் சமம்' என்றோதியது!
ஓதியது போலவே அது, செயலானது!

சூரியனும்கூட சூடு தணிந்தது!
சந்திரனும் ஒரு சங்கை செய்தது!
நட்சத்திரங்களும் நகை செய்தன!
பாலை வனமெல்லாம் சோலை வனமாகியது!
வற்றிய நதிகளும் பெருக்கெடுத்து ஓடின!
இந்திய மண்ணில் எழு நூறும்....
ஸ்பெயின் மண்ணில் அறு நூறும்....
ஆண்டுகள் ஆட்சி நடந்தது!'

என்ற,
அந்த பழைய 'பொன்னாடைகளால்'
உங்களைப் போர்த்தவும்....
அந்த பட்டயம் பெற்ற பழைய விருதுகளை
உங்களுக்குச் சாத்தவும்....
அந்த பதக்கங்களைச் சூடி
உங்களை மகிழ்விக்கவும்....
நான் இங்கு வரவில்லை!
சத்தியமாய் அதற்கு நாம் வரவேயில்லை!!

ஆரோ அனுபவித்த
அந்த பழைய மாளிகைகள்
இன்று மியூசியமாய்
இருந்தென்ன...? அழிந்தென்ன...?
பார்த்துப் பார்த்து.... அர்த்தமேயற்ற
பெருமூச்செறியவும்
முன்னைப் பெருமைகளைப் பேசிப் பேசியே....
முச்சுத்தட்டவும் நாம் தயாரில்லை!

அதெல்லாம்.... உண்மைதான்!
'இல்லை' என்று சொல்லவில்லை!
ஆனால், அவர்கள் யார்?

அவர்களுக்கும் எங்களுக்கும்
என்ன உறவு முறை?
'மாளிகைக்' காலமும் மலர்ந்த வாழ்வும்
இருந்த போதுதான்....
'மண்குடில்' காலமும்
உலர்ந்த வாழ்வும் இருந்தது!
அதுதான் இன்றும் தொடர்கிறது!

'அகிலத்தைப் பாலித்த அந்த அருள்மாரி....
அன்று எந்த வயல் செழிக்கப் பெய்தது?
இன்று எந்த வயல் செழிக்கப் பெய்கிறது?
இதயங்கள்....
அதில் 'ஒழு'* ச்செய்து கொள்கிறதா?
அந்த
ஒளி வெள்ளம் எதற்காகப் பெருகியது?
மூளைகள்....
அதில் முழுக்கு இறுத்துக் கொள்கிறதா?

அடாது.... மின்னல், இடி....,
முழக்கங்கள் கேட்டாலும்
விடாது
பெருமானார் அருள்மாரி பொழிகிறதே!
ஆயினும்....
எப்படி இந்த அருங்கோடை வந்தது?
'நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடி
புல்லுக்கும் ஆங்கே பொசிந்ததை'
இன்று....
நெல்லுக்கும் இல்லாமல்
புல்லுக்கும் இல்லாமல் - வீணில்

---

* 'ஒழு' ச்செய்தல் - சுத்திகரித்தல்.

'மல்லுக்கு' இறைத்தவர் யார்?
மடத்தனமாய் தமக்கிடையில்....
மல்லுக்கு நின்றாலும்
மாற்றானை....
'வீட்டுக்குள்' அழைத்தவர் யார்?

மண்ணும் விண்ணும் மனம் சலித்ததேன்?
நாடும் வீடும் நரகமானதேன்?
ஒளியிருந்த இடங்களில்
இருள் புகுந்தது எப்படி?
ஏகத்துவம் ஏன் எதிர்ப்புக்குள்ளாகியது?

'அரசர்கள்' என்றால் ஆளப் பிறந்தவர்கள்!
'ஆண்டிகள்' என்றால் மாளப் பிறந்தவர்கள்!
என்ற பேதம் எப்படி வந்தது?
சூரியனின் சூடும் சந்திரனின் குளிரும்
சம நிலை இழந்ததேன்?
தென்றல் காற்று ஏன் தீப்பிளம்பாய் மாறியது?
கனிகள் மீண்டும் ஏன் கற்பாறையானது?
மீண்டும் நதிகள் வற்றியது எப்படி?'

என்றெல்லாம்....
என் நெஞ்சில் எழுகின்ற ஆயிரம் கேள்விகளை
தூண்டிலாய்.... வலைகளாய்....
ஆழ் கடலில் வீசி, பிடிக்கின்ற 'மீன்களை'....
ஜாடிகளில் அடைத்து
நாடுகள் தோறும் ஏற்றுமதி செய்வதற்கும்
ஊர்கள் தோறும் விற்பனை செய்வதற்கும்
நாடி நான் வந்துள்ளேன்!
வந்திருக்கும் உங்களுக்கும்
கறிக்கு மீன்கிடைக்கும்! ஆயினும்....

விரைவில்....
நீங்களும் தூண்டில் போட்டு....
வலைகள் வீசி....
மீன்களைப் பிடிக்க கற்றுக் கொள்வீர்கள்!

அருட்சுடரும் ஒளிச்சுடரும்
ஒன்றிக்கலந்து
அருவிகள் ஆறாகி ஆறுகள் நதியாகி
நதிகள் மாநதியாய் பெருக்கெடுத்து....
பாரைப் புரந்து.... 'பல்லுயிரை ஓம்பி
பகுத்துண்டு வாழ்ந்ததையும்...'

தியாகமே வாழ்வின்
திருமறையாய் திகழ்ந்ததையும்
மனித மகத்துவமே மலைபோல் வளர்ந்ததையும்
மறந்து.... மதி கெட்டு நடந்து....
தடுமாறித் தொலைத்துவிட்டு
அந்த மாநதி.... இன்று எங்கு செல்கிறது?
இதற்குக் காரணம் யார்?

அது.... எந்தத் துறைமுகத்தில்
சங்கமிக்கச் செல்கிறது?
மாதவத்தால் பெற்றெடுத்து....
மாநதியில் ஓடிவந்த
அந்த. 'கிலாபத்' கப்பலுக்கும்....
அதன் மாலுமிகள், வாரிசுகள்....
அனைவருக்கும் என்ன நடந்தது?
அதைத்தான்
அடியேன் அரங்கில் கேட்கவநதேன்?

---

* கிலாபத் ஆட்சி - குர்ஆனின் ஒளியிலும்
நபி (ஸல்-லம்) வழியிலும் நடத்தும் மக்களாட்சி.

அந்த
'கிலாபத்' கப்பலில்....
பாரைப் புரந்து பாலித்து அருள்வதற்கும்
பஞ்ச பூதங்களைப் பணிய வைப்பதற்கும்
பெறற்கரிய பெரும்பேறாய்
பெற்ற அருட்கொடையை....
பக்குவமாய் பத்திரமாய்
பக்தியுடன் ஏற்றிவந்த
அந்த 'சந்தனப் பெட்டகத்தை'
கப்பலுக்குள்
அடியில் ஓர் மூலையில்....
கொண்டு போய்ப் போட்டவர் யார்?
ஏனிந்த மாலுமிகள்
பெட்டகத்தின் சாவியை
தம்முடைய,
இடுப்பு வாருக்குள் ஒளித்து வைத்தனர்?

அந்த பெட்டகத்துள் அடுக்கி வைத்திருந்த
அத்தர், ஜவ்வாது, புனுகு.... என்ற....
அத்தனை மணங்களுக்கும் என்ன நடந்தது?
எல்லாப் புட்டிகளும் காலியாகி விட்டனவா?
அப்படித்தான் என்றாலும்....
ஏனிந்தப் பெட்டகம் பூட்டிக் கிடக்கிறது?

'சந்தனப் பெட்டகத்தின்
வாசனையே வேண்டாம்!'
என்றா.... அதைக் கப்பலின் அடியில்
கொண்டுபோய்ப் போட்டனர்?
யார்? அந்த....
அவிவேக குருக்களும் சிஷ்யர்களும்?
சந்தனப் பெட்டகத்தை
எங்குதான்.... கொண்டு போய்ப் போட்டாலும்

அது காற்றிருக்கும் இடமெல்லாம் கமழுமே!
அறியாமலா அதைச் செய்தார்கள்?
ஆயினும் அவர்கள்....
காற்றை, வீசாமற் செய்ய முடியுமெனில்
சந்தனத்தை மணக்காமற் செய்யலாம்!
முடியுமா இவர்களால்?

இந்தக் கப்பலுக்கு என்ன நடந்தது?
ஆனையைப்போல்
ஆடி அசைகிறதே அல்லாமல்
கப்பலேன் நகராமல் நிற்கிறது?
யாரிந்தப் புதிய மாலுமிகள்?
கப்பலைச் செலுத்திய
'கிலாபத்' வாரிசுள் எங்கே?

தனித்துவமாய் தன்பாட்டில்....
ஓடிவந்த கப்பலுக்கு என்ன நடந்தது?
யாருடைய எந்த.... எல்லைக் கோட்டையும்
அது தாண்டியது கிடையாதே!
எந்தத் துறைமுகத்திலும்
அத்து மீறி அது பிரவேசித்ததில்லையே!

மனித குலம் முழுவதுக்கும்
மாமருந்தை ஏற்றி வந்த
மாநபியின்....
அந்த மகத்தான கப்பலுக்கு என்ன நடந்தது?
மாநதியின் போக்கில் தான் கப்பல் போனாலும்
மாநதியைக்கூட
மடக்கித் திருப்புகின்ற மகாசக்தி
மாநபியின்
வாரிசுகள் தமக்கே இருந்தது!
ஏன் அவர்கள் இயங்கவில்லை?

கேண்மை தவறிய கொற்றம் நடத்தியும்
குலம் கோத்திரப் பெருமையில் நீந்தியும்
மூழ்கித் திளைத்த வேளையில்....
இவர்கள் - மாலுமிகள் சுழியில் அகப்பட்டனர்!
கூடிக் குதூகலம் கொண்டு
'கலந்து' 'ஆடிப்பாடி' அதில் அழிந்தனர்!
ஆள்பவர் உயர்ந்தும் ஆளப்படுபவர் தாழ்ந்தும்
பிரிவுகள் தோன்றின!

மாலுமிகள்...,
தம்மை மன்னராய் முடிசூட்டிக் கொண்டனர்!
மக்களை தமது அடிமைகளாக்கினர்!
வந்தது மாராயம்!
ஓடிவந்த கப்பல்
மண்திட்டி மீது மோதி நின்றது!
நல்லகாலம் பாறையில் அது மோதவில்லையே!

அகிலம் அனைத்திற்கும்
அருட்கொடையாய் அவதரித்த
அண்ணலார் - முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்
மாலுமியாய் - மக்கள் தலைவனாய்
தாயாய், தந்தையாய்.... எல்லாமாயிருந்து....
இயக்கிவந்த கப்பலை...,
'அமீருல்மு. ்மினீன்கள்'*
ஒருவர்பின் ஒருவராய் செலுத்தி வந்தனர்!
இடையிடையே வந்த
மின்னல், இடி, முழக்கம், புயற்காற்று....

---

* அமீருல்மு. ்மினீன்கள் - பூரண இறை விசுவாசிகளான 'நான்கு' ஆட்சித் தலைவர்கள்.

அத்தனைக்கும் நின்று பிடித்தனர்!
இலக்கை நோக்கியும் செலுத்தி வந்தனர்!
இறைவனின் ஆட்சி இனிது நடந்தது!
ஏகனின் தூதும் ஏந்தலின் வாழ்வும்
ஆட்சிக்கோர்,
நல்ல இலக்கணமானது!
அந்த நிறை ஆட்சிக்கு
அபூபக்கரின் (றலி) சத்திய ஓர்மையும்
உமரின் (றலி) ஓங்கிய நீதியும்
உதுமானின் (றலி)
பூமியை மிகைத்த பொறுமையும்
அறிவின் தலைவாசல் அலி (றலி)யின்
வீரமும் அடைக்கலம் தந்தன!

அதன் பின்பு
'கிலாபத்' ஆட்சிக்கு என்ன நடந்தது?
விஷ விருட்சங்களை
வேரொடும் வேரடிமண்ணொடும்
பிடுங்கி வீசாத காரணமா....?
மீண்டும் அது முளைத்தது....?
அருமைப் பெருமானார் (ஸல் - லம்)
அருங் கோடையில்....
பாலைப் பெரு வெளியில்....
அடர்ந்திருந்த காடுகளை
வெட்டிச் சரித்து.... வெளிசாக்கி....
காய்ந்த பின் சேர்த்து.... குவித்து....
அவற்றை எரித்தார்கள்!
அந்தச் சாம்பலில் விதைத்து....
காலபோகம் செய்தார்கள்!
வானம் பார்த்த பூமியே ஆனாலும்
அதில்,
நல்ல விளைச்சலும் கண்டார்கள்!

காட்டில் கிடந்த
கரடி, புலி, சிங்கம், காட்டானை, பன்றி....
அத்தனையும்
வேறு வேறு காடுளைத் தேடிப் போய்
ஒளித்துக் கொண்டன!
ஆனாலும்.... இடைக்கிடை
இடவைப் பார்த்து.... வந்து.... அழிவு செய்தன!
அதனால்,
அதிலிருந்து,
தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு
கடப்புகளில்
கட்டுத் துவக்குகளைப் பொறியேற்றி
வைக்கவேண்டிய அவசியம் நேர்ந்தது!

மீண்டும் முளைக்கும் விஷ விருட்சங்களை....
வேரொடும் வேரடி மண்ணொடும்
கிண்டி எடுத்து,
எரிக்கின்ற கடமையும் பொறுப்பும்
'கிலாபத்' வாரிசுகளுக்கே இருந்தது!
ஏன் அவர்கள் அதைச் செய்யவில்லை?
கண்மணி நாயகம் (ஸல் - லம்) அவர்கள்
விஷ விருட்சங்களை
வெட்டி வீழ்த்தும்
வேலைகளைச் செய்தார்கள்!

வீழ்த்திய பின்....
'நிழல்' மரங்களையும் 'பழ' மரங்களையும்
நாட்டுகின்ற கடமையை முடித்தார்கள்!
ஆயினும்.... அந்த.... விஷ விருட்சங்களை
வேரொடும் வேரடி மண்ணொடும்
பிடுங்கி எறியாத காரணமா...?
மீண்டும் அது.... முளைத்தது?

உயிருக்கும் மேலான
உத்தம நபி (ஸல் -லம்) அவர்கள்
காடு வெட்டி, வெளிசாக்கி....
காலபோகம் செய்தாலும்
அடிக்கட்டை பிடுங்கி எறியாத காரணமா...?
மீண்டும் அது தளைக்கிறது?
இது.... ஒரு கேள்வி மாத்திரம்தான்!
இதற்காக, ஆரும்.... ஆர்ரையும்....
மண்டையைப் போட்டு
உடைக்கத் தேவையில்லை!
முடிந்தால்.... சிந்தியுங்கள் அவ்வளவுதான்!

ஏந்தலின் வாரிசுகள் அனைவருக்கும்
இருக்கிறது பெருங் கடமை! பெரும் பொறுப்பு!
விஷ விருட்சங்களை
வேரொடும் வேரடி மண்ணொடும்
பிடிங்கி எறிந்த பின்....
நிழல் வாகை, வேம்பு, ஆல்....
போன்ற நிழல் மரங்களையும்....
மா, பலா, வாழையுடன்
வேறு பழ மரங்களையும்....
நாட்டி, வளர்த்து, நலம் கண்டு மகிழ்வார்கள்!

அவர்கள்.... தொடர்ந்தும்....
காடுகளை வெட்டி வெளிசாக்கி
அடிக் கட்டைகளைப் பிடிங்கி
அதைப் போட்டு எரித்து....
காலபோகம் மாரிப்போகம்
இரண்டுமே செய்தார்கள்!
ஆனால்.... இருந்த....
'கிலாபத்' ஆட்சிக்கு என்ன நடந்தது?
நிழல் மரங்களையும் பழ மரங்களையும்

வெட்டி வீழ்த்தியவர் யார்?
காலபோகமும் மாரிப்போகமும்
செய்ய விடாமல்
மீண்டும் காடுகளை முளைக்க விட்டவர் யார்?
'குலபாஉர் றாஷிதீன்' ஆட்சியைத் தொடர்ந்து....
'கிலாபத்' ஆட்சிக்கு என்ன நடந்தது?
இறைவனுக்கும் ஏந்தல் றஸூலுக்கும்
எதிரிகள் யார்?
மக்கள் ஆட்சியை மாற்றியமைத்த
மக்களின் விரோதிகள் யார்?

முஸ்லிம் பெயர் பூண்ட நாடுகளில்
இறைவனின் ஆட்சிக்கும்
ஏந்தலின் வாழ்வுக்கும் என்ன நடந்தது?
ஏன் இந்தக் கப்பல் திட்டியில் தட்டியது?
ஏன் இந்தக் கப்பல்
இருள் மண்டிக் கிடக்கின்ற
உலகத்தை நோக்கி போய்க்கொண்டிருக்கிறது?

மா நதியில் நீந்தி வந்த
மக்களின் கப்பலுக்கு என்ன நடந்தது?
குலபாஉர் றாஷிதீன்
வாரிசுகள் என்ன ஆனார்கள்?
அவர்களுக்கெல்லாம் என்ன நடந்தது?
குர்ஆனின் ஆட்சியை அபகரித்த மாலுமிகள்
மன்னராய் தம்மை முடிசூட்டிக் கொண்டனர்!
மக்களோ....
தலையில் முடை சூட்டிக்கொண்டனர்!
ஆட்சியை அபகரித்த அரசர்கள்....
அரியணையில் அமர்ந்தார்கள்!
ஆட்சியைப் பறிகொடுத்த மக்களோ
அமைதியை இழந்தார்கள்!

கப்பலுக்குள் கடும் பகை மூண்டது!
ஆயினும் அது....
நீறு பூத்த நெருப்பாய்க் கனன்றது!
சைக்கினை.... ஏதும் தெரிந்ததோ என்னவோ?
மன்னர் பெருமான்....
மந்திரிமார் புடைசூழ
கப்பலின் மேற்றளத்தில்....
'காற்றுவாங்கவும்' 'களித்திருக்கவும்'
எழுந்தருளினார்!
தூருதிருஷ்டிக் கண்ணாடியை
எடுத்து வைத்து சும்மா ஒருதரம்....
கரையை நோட்டம் விட்டார்!

ஆயிரம் ஆயிரம் வெள்ளை மனிதரும்
ஆயிரம் ஆயிரம் கறுப்பு மனிதரும்
கூட்டம் கூட்டமாய் கைகளை உயர்த்தி....
கத்திக் கத்திக் கோஷமிடுவதைக் கண்டு
உடனே திரும்பி அமைச்சரைப் பார்த்தார்!

'யார் இவர்? ஏன் இவர்....
இப்படிக் கத்துகிறார்...?' என்று. இரைந்தார்!

'அரசே! அவர்களுக்கு கடும் பசி...!
கஷ்டங்கள்.... அது வேறு.... இருக்கிறது!'
மெள்ள.... அமைச்சர் பதில் சொன்னார்.

'கடும் பசியா...? கஷ்டமா...? என்ன பேசுகிறீர்?
தாராளமாக உண்டு உடுத்து
உறங்க இருக்கையில்
ஏன் இவர்கள் இப்படி....
கத்திக் கத்தி எலும்பும் தோலுமாய்
அலைந்து திரிகிறார்?'

என்று, பிரான்ஸின்
'கில்லட்' கத்தியின் 'காதலன்'
பதினாறாம் லூயி மன்னனின் பாரியார்
மேரி அந்தனட் பாணியில்....
கேட்டுவைத்தார்.

'அவர்கள் அனைவரும்
ஆசிய, ஆபிரிக்க நாட்டுக் கறுத்தவர்கள்!
அவர்களுக்கு மத்தியில்
குற்றுயிராய்க் கிடப்பவர்கள்
பொஸ்னிய, செஸ்னிய, பலஸ்தீன,
சூடான்.... முஸ்லிம்கள்...!'
'கங்காளம் போல குந்தியிருப்பவர் யார்?'
'எதியோப்பியர்கள்! சோமாலியர்கள்!'
'அப்படியா...? உடனடியாய்
எட்டுக்கப்பலில் ஈச்சம் பழங்களும்
இரண்டு கப்பலில் 'குர்பான் இறைச்சியும்'*
ஏற்றி அனுப்புங்கள்! அத்துடன்....
உடு பிடவையும் அனுப்பி வையுங்கள்!'

மன்னர் உத்தரவை மனங்கொண்ட மந்திரி
மறுகணம் அவற்றை அனுப்பியும் வைத்தார்!

'ஆயினும்.... மன்னா...!
கரையில் நிற்பவர்கள்....
எதையுமே ஏற்காமல்....
தூக்கி எறிந்துவிட்டு
ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்!'

---

* குர்பான் இறைச்சி - அல்லாஹ்வுக்காக அர்ப்பணம் செய்யப்பட்ட ஆகுமாக்கப்பட்ட மாமிசம்.

மன்னர் ஒரு தரம் தாடியைத் தடவி....!
'ஏன் என்னவாம்...?' என்றார்.
'மன்னாதி மன்னா!
முதலில்.... உங்களை....
கப்பலில் இருந்து
இறங்கச் சொல்கிறார்கள்...!'

'என்ன...? கப்பலில் இருந்து....
நாங்கள்.... இறங்க வேண்டுமா...?
அவர்களுக்கென்ன பைத்தியமா?
இது எங்கள் கப்பல்!
அதுவும் இது எங்கள் பரம்பரைக் கப்பல்!
இதிலிருந்து....
எங்களை இறங்கச் சொல்வதற்கு
இவர்கள் யார்?
இதிலிருந்து....
நாங்கள் இறங்கவே முடியாது!!
அவர்களிடம் சொல்லு போ!'

'அரசர்க்கு அரசே! ஏற்கனவே....
அவர்களிடம் சொல்லி விட்டேன்!'

'என்ன பதில் சொன்னார்கள்?'

'ஏகனின் தூதையும் ஏந்தலின் வாழ்வையும்
மீண்டும்.... இந்தக் கப்பலில் ஏற்றி
'கிலாபத்' ஆட்சியை நிறுவ வேண்டுமாம்!'

'நடக்காது! நடக்கவே நடக்காது!
மன்னராட்சியை மாற்றவே முடியாது!!
வேண்டுமெனில்....
மன்னராட்சியின் கீழ் மறையாட்சி நிறுவட்டும்!'

'அரசே! அதை அவர்கள் ஏற்கவே மாட்டார்கள்!'

'ஏற்கவே மாட்டார்களா? என்ன செய்வார்களாம்?'

'கப்பலை பீரங்கி வைத்து தகர்ப்பார்களாம்!'

'அவர்களிடம் பீரங்கி இருக்கிறதா...?'

'இருக்கும் என்றுதான்.... நினைக்கிறேன்!'

'அப்படியா....?அதையும் பார்ப்போம்...!
அமைச்சரே! கப்பலேன்... தள்ளம் பாறிது...?
காற்று, புயல் எதுவும் வீசவில்லையே....!?
கப்பலேன் நடுங்கிது....?
கடல் கொந்தளிப்பும் இல்லையே....!?
கப்பலேன் ஆட்டம் போடிது....!?
ஏனிது!? ஏனிது!? என்ன இது!?
நாலு பக்கமும் நங்கூரமில்லையா!?
கால்களை ஊன்றி நிற்க முடியவில்லையே!?
ஏனிது!? ஏனிது!? என்ன இது!?'

மன்னர் பதறினார். மந்திரியைக் கேட்டார்!

'அரசே!
காற்றும் புயலும் கப்பலின் அடியில் வீசிது!!
கடல் கொந்தளிப்பும் அங்குதான் இருக்கிது!!'

'என்ன உளறுகிறீர்?
கப்பலுக்கடியில் காற்றும் புயலுமா?'

'அரசே! அதுமட்டுமல்ல!!
கரையிலிருந்து, கடலுக்குள் நீந்தி வந்த
கணக்கற்ற சுழி ஓடிகள்
கப்பலைச் சூழ்ந்து.... கிடக்கிறார்கள்!'
'இவர்களுக்கெல்லாம் என்ன.... பைத்தியமா?'

'ஆம் அரசே!
இதுவும் ஒருவகைப் பைத்தியம்தான்!
இப்படிச் சொல்வதற்காக....
என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும்!
அல்லாஹ்வின் மீதும்
அவனது றஸூலின் மீதும்
அவர்களுக்கிருப்பது பைத்தியம்தான்!'

'சரிசரி, என்ன கேட்கிறார்கள்?
அதைச் சொல்லு?'

'அவர்கள் சொன்னது சொன்னதுதானாம்!
அறுங்குப் பிடியில் நிற்கிறார்கள்!!
ஏகனின் தூதும்
ஏந்தலின் வாழ்வுமே வேண்டுமாம்!
கப்பலில் இறைவன் ஆட்சியை நிறுவி
கரையிலும் அதைத் தொடர வேண்டுமாம்!!'

'நடக்காது! ஒருபோதும் நடக்காது!
முதலில் கப்பலுக்குள் வீசும்
காற்றையும் புயலையும் அடக்குங்கள்!!
கொந்தளிக்கும் கூட்டத்தைக் கொண்டுபோய்
கூண்டுக்குள் தள்ளுங்கள்!!
திட்டியில் புதைந்துள்ள கப்பலை மீட்பதற்கு
இழுவைக் கப்பலுக்கு ஏற்பாடு செய்யுங்கள்!
இனி.... இந்தக் கப்பல்....
எந்தத் துறைமுகத்திலும்
நிற்கத் தேவையில்லை!!
கப்பலை நேரே 'நியூயோர்க்' துறைமுகத்தை
நோக்கிச் செலுத்துங்கள்!!
உடனடியாய்

மாநதியில் மட்டுமன்றி
அது போய்ச் சங்கமிக்கும்
எல்லா இடங்களிலும்
அரண்களை அமையுங்கள்!!
கடல் பாதுகாப்பை மட்டுமன்றி
தரை, வான் பகுதியிலும்
பாதுகாப்பைப் பலப்படுத்துங்கள்!!
நேச நாடுகட்கும் நிலமையை அறிவியுங்கள்!!
அமெரிக்கப் படைகளுக்கு....
அழைப்பை அனுப்புங்கள்!!
வரவேற்பை 'ஜோராக நடத்துங்கள்!!'
இதற்கு.... எத்தனை கோடி
'டொலர்கள்' தேவையோ ஒதுக்குங்கள்!!'

'மகாராசா! தங்கள் உத்தரவு!
அப்படியே செய்கின்றோம்!'
அமைச்சர் சொன்னார்.

ஆயினும் என்ன? ஆயினும் என்ன?
திட்டியில் புதைந்த கப்பலை எடுக்க
இழுவைக் கப்பல் இனி வரப்போவதில்லை!
ஏனெனில்.... அந்தக் கப்பலைச் சுற்றி
கடல் கண்ணிகள் விதைக்கப்பட்டுள்ளன!
மக்கள் விதைத்த கண்ணியை அகற்றி
மன்னரின் அந்த, கப்பலை மீட்க....
எந்த இழுவைக் கப்பலும்
இனி வரப் போவதில்லை!
மன்னருக்காக மக்களைப் பகைக்க
மேற்கு நாடும் கிழக்கு நாடும்
மதியை இழக்கும் நிலையிலும் இல்லை!
மக்களே திரண்டு கப்பலை மீட்பார்கள்!
மீட்ட கப்பலை

கிலாபத் மாலுமிகள்
கொண்டு செலுத்துவார்கள்!
கப்பலில் ஓட்டை, உடைசல்களிருந்தால்....
மக்களே அவற்றை மாற்றி அமைப்பார்கள்!
கப்பலை,
நம்பிக்கையாளரின்
துறைமுகங்களில் நிறுத்துவார்கள்!
கப்பல் மீண்டும் கவனமாய்ப் புறப்படும்!

பறட்டைத் தலையும் பாளடைந்த முகமுமாய்
ஒட்டிய வயிறும் உருக்குலைந்த உடலுமாய்
குப்பை மேட்டிலும் கொதிக்கும் மணலிலும்
'களன்று' திரிந்தவர்கள்....
இடுப்பில் மட்டுமோர் துண்டு தொங்கியதால்....
இவர்களும் மனிதராய்
இனம் காணப்பட்டவர்கள்....! இன்று....
இவர்களுக்கெல்லாம்.... என்ன நடந்தது?

அடித்தது புயற்காற்று! பெய்தது பெருமழை!
தடைபட்ட மின்சாரம் திரும்பி வந்ததைப்போல்
இரவில் சூரியன் எழுந்து வந்ததைப்போல்
ஆறுகள் பெருகி
அணையை உடைத்ததுபோல்....
அந்த மனிதர்கள்
அலையலையாய் எழுந்தார்கள்!
ஆவேசம் பூண்டு
அனல் உலையாய் கொதித்தார்கள்!
புழுவாய் கிடந்தவர்கள் புயலாய் வீசினார்கள்!
எப்படி எப்படியோ....
ஓடியும் பாய்ந்தும் கப்பலில் ஏறினார்கள்!
கப்பலுக்குள்ளொரு பிரளயம் நடந்தது!!

'இவர்களுக்கெல்லாம்.... இந்த வலிமை....
எப்படி, எங்கிருந்து வந்தது....?'

என்று, உலகம் அதிர்ந்து வியந்தது!
கப்பலுக்கடியில்.... குமுறிக் குமுறி
நீறுபூத்துக் கிடந்த நெருப்பு....,
காற்றைக் கண்டதும் களிப்படைந்தது!
நீறு பறந்தது! நெருப்புக் கனன்றது!
காற்றும் நெருப்பும் கட்டிப்பிடித்து
முத்தம் கொடுத்து கட்டிப் புரண்டன!

'கிலாபத்' வாரிசுகள்
கப்பலில் ஏறி.... உச்சிக்குச் சென்றனர்!
ஏகத்துவத்தின் கொடியை ஏற்றினர்!
ஏந்தல் நபியின் ஒளியைப் பாய்ச்சினர்!
மன்னராட்சியை மௌத்தாக்கிவிட்டு
கிலாபத் ஆட்சியை
'ஹயாத்தாக்கி'* வைத்தனர்!

எகிப்திய மன்னன் பாறூக்கும்
ஈரான் மன்னன் 'ஷா'வும் ஓடிய பாதையில்
இந்த மன்னரும் ஓடித் தப்பினர்!
அவர்களுக்கு
அமெரிக்க நேச நாட்டு அரசுகள்....
அடைக்கலம் கொடுத்தன!
எகிப்திய மன்னன் ஓடியபோது....
உதிர்த்த வார்த்தைகள்....
எனக்கு நினைவுக்கு வந்தன :

---

* ஹயாத்தாக்கி வைத்தல் - மீண்டும் உயிர்ப்பித்து வைத்தல்.

'சீட்டுக்கட்டில் இருக்கும் அரசனும் அரசியும்
இங்கிலாந்தில் இருக்கும் அரசனும் அரசியுமே
இனி... உலகில் மிஞ்சுவார்கள்!'

பாரைப் புரந்து பாலித்து அருள்வதற்கும்....
பெறற்கரிய பெரும் பேறாய்
பெற்றிருந்த பெருவாழ்வை....
மீண்டும் புவியில் மேவி மகிழ்வதற்கும்....

தொட்ட இடம் பட்ட இடம்....
எல்லாம் மணக்கின்ற சந்தனப் பெட்டகத்தை
பக்குவமாய்த் திறந்து....
அதற்குள் அழகாக அடுக்கி வைத்திருக்கும்
அத்தர், ஜவ்வாது, புனுகு.... என்னும்
'முப்பது வகையான' மூல மணங்களையும்
மீண்டும் எடுத்து....
மூவுலகிலும் முறையாகப் பரப்புவார்கள்!

அள்ள அள்ளக் குறையாத அமுத சுரபிக்கே
ஆதிபிதாவான அந்த அற்புத சக்தியினால்....
ஆகிப் பெருகும் அத்தனை மணங்களையும்
அகிலமெல்லாம் தெளிப்பதற்கு
அயராது உழைப்பார்கள்!

'கிலாபத்' வாரிசுகள்
அவர்களுக்கு மட்டுமல்ல
அல்லாஹ்வின் 'உம்மத்' அனைவருக்கும்
'ஒளியும் வழியும்'
இனி....
எந்த அமாவாசை இருட்டிலும் தெரியும்!

அடாது மின்னல், இடி....
முழக்கங்கள் கேட்டாலும்
விடாது பெருமானார் அருள்மாரி பெய்யும்!
அதில், அனைவரும் அள்ளிக் குளிப்பார்கள்!
அற நனைந்து
கூதல் குளிர் பறக்க முழுகுவார்கள்!

போட்ட சவர்க்காரம் கழுவுவதற்கிடையில்....
பத்திக்கை முறிந்து...
வாளி கிணத்துக்குள் இனி விழாது!

வாளியை எடுப்பதற்கு கொக்கியைத்தேடி....
அலைய வேண்டிய அவசியமும் இருக்காது!
ஏனெனில்.... இப்போது....
துலாந்து துலாக்கால்கள் இரும்பிலும்
பத்திக்கை இரும்புக் கம்பியிலும்
பத்திக்கையையும் வாளியையும்
இணைக்கின்ற 'எஸ்' கொளுக்கு
உருக்குக் கம்பியிலும் போடப்பட்டுள்ளது!!

●

தினகரன், ஜுலை 1997.

**இலங்கை ரூபாவாஹினியில் 'கவிஞர் திலகம்' எம்.எச்.எம். அஷ்ரஃப் தலைமையில் நடந்த கவியரங்கிலும் அட்டாளைச் சேனையில் 'கவிக்கோ' அப்துல் றஹ்மானின் தலைமையில் நடந்த தேசிய மீலாத் விழா கவியரங்கிலும் வாசிக்கப்பட்டது.**

## நாடு தழுவிய
## நந்தவன பூங்கொத்து!

மோகம் கொண்ட மேகம் தழுவிக்கொண்டது!
தாகம் கொண்ட மலை தாங்கிக் கொண்டது!
மின்னாமல் முழுங்காமல் மழை பெய்தது!
ஊனும் உயிரும் உருகி உலகம் நனைந்தது!

இது
தெளிந்து குளிர்ந்த நீர்!
தேங்கி
குட்டையில் சூடாகிக் கிடந்த நீரல்ல!
அருவியாய் ஊற்றெடுத்து
ஓடிவந்த ஆற்று நீர்!

வண்டல் மண் கொண்டுவந்த
வளமான நீர்!
கெண்டை, வரால், வாளை....
குதித்து, பாய்ந்து திரிந்து.... வாழும் நீர்!

அல்லியும் ஆம்பலும் ஆழகுத் தாமரையும்
ஆடிக் களிக்கும் நீர்!
ஓடிவரும் வேகத்தில்
உருண்டு, புரண்டு, எழுந்து, விழுந்து....
இதயம் கலங்கினாலும்....
தெளிந்து தாகம் தீர்க்கும் நீர்!

நடுவழியில் மறித்து திருப்பி
அணை போட்டுக் கட்டி, தேக்கி வைத்தாலும்
ஆபத்தில் உதவும் நீர்!
'தக்கார் தகவிலார்'
என்று, தாழ்ச்சி உயர்ச்சி சொல்லாமல்
தலை கொடுத்து காக்கும் நீர்!

சூரியன் ஆகாயக்கடலில் வீசிய
வலைகளுக்கிடையில்
சிக்கிய மீன்களாய்
ஆறும் குளமும் அகப்பட்டுத் துடித்தாலும்....
அதுவே.... சூல் கொண்டு இரங்கி....
மழை மழையாய்ப் பெய்து....
ஆக்கம் எதுவோ அதற்கே ஆகும் நீர்!

இந்த நதிக்கு....
'1998, ஐப்பசித் திங்கள் இருபத்திமூன்று.'
பிறந்த 'பொன் விழா!'
நதி பாயும் வயல்களுக்கும்
சமவெளிக்கும் திரு விழா!
கவிராஜர்களுக்கு கலை விழா!

இது
ஊற்றெடுத்துப் பெருகி ...
குன்று குழிகளிலும் காடு மேடுகளிலும்

ஆடிப்பாடி ஓடிவரும் போது....
மனிதாபிமானம் பாடும் மரகதக் கற்களையும்
தேசாபிமானம் பாடும் தியாக முத்துகளையும்
விடுதலை தேடும் விறல் கற்களையும்
மருவி, வருடி....
தழுவிக் கொண்டுதான் ஓடி வந்தது!
வானம் பார்த்த பூமிகளை
வளம் கொளிக்கச் செய்து கொண்டே
தேசச் சமவெளியைச் செழிப்பாக்கி வைத்தது!

இந்த, ஓடும் நதியை....
கவிப்பூங்காவின்
மலர்கள் மட்டும் பாடவில்லை!
அரும்புகள் ஆராதிக்கின்றன!
மொட்டுகள் மெட்டமைக்கின்றன!
முகைகள் தாளம் போடுகின்றன!
பூக்கள் புல்லாங் குழல் ஊதுகின்றன!
புஷ்பங்கள் புளகாங்கிதம் அடைகின்றன!
வீகள் வரலாறு கூறுகின்றன!
பூமி பூபாளம் இசைக்கின்றது!
வானம் வாழ்த்துப் பாடுகின்றது!

இதே.... கவிச் சோலைக்குள்ளேதான்
இடைக்கிடையே
சோகம் ததும்பும் 'குயிற்பாட்டும்' கேட்கிறது!
தாளம் போடும் பாட்டும் கேட்கிறது
வீரம் விளைந்த விறல் பாட்டும் கேட்கிறது
அந்தோடு.... 'ஆளரவம் காட்டும்'
ஆட்காட்டிப் புள்ளின் சத்தமும் கேட்கிறது!
இவற்றின் எதிரொலியாய்....
ஐம்பது கவிக்குரல் மாத்திரம்
இங்கு வசதிக்காய் ஒலிக்கிறது!

எல்லாக் குரலும் இனிய குரல்!
எல்லாம் நதியை பாடும் குரல்!
எல்லாக் குரலும் அழகுக் குரல்!
எல்லாம் நதியை வரையும் குரல்!
ஆனால்.... எல்லாம்....
அதனதன் தனித்துவம் மிளிரும் குரல்!
அதனதன் கவித்துவம் தொனிக்கும் குரல்!
அதனதன் கற்பனை செழிக்கும் குரல்!

தமிழில் இது ஒரு புதிய குரல்!
தமிழ் கூறும் உலகிலும் இது ஒரு புதுமுயற்சி!
தமிழ் நாட்டில்....
'அறிஞருக்கும்' 'கலைஞருக்கும்' கூட
இப்படியோர்.... 'நாடு தழுவிய
நந்தவனப் பூங்கொத்து' பூத்த துண்டா?
நாமறிந்த வரையில் இல்லை!
ஆயினும்,
மாவீரர் 'மண்டேலா....' தமிழ் நாட்டில்
'கருப்புச் சூரியனாய்' உதித்ததுண்டு!

'ஓடும் நதியை பாடும் மலர்களை'....
ஒவ்வொன்றாய் எடுத்து வைத்து
அதன்.... அழகு இதழ் விரித்து....
மகரந்தப் பொடி தடவி....
தேன் சுவைக்கச் செய்வதற்கும்
அதன், மணத்தை அனுபவித்து....
நலம் நுகரச் செய்வதற்கும்
அதன குணதலத
குன்றின் மேல் ஏற்றி வைபபதற்கும்
எனக்கு விருப்பந்தான்! என்றாலும்....
அதை, நீங்கள்... நேரடியாய்
சுவைப்பதும் நுகர்வதுமே தனிச் சிறப்பு!

என்றாலும்....
கவிக் காவில் பூத்திருக்கும்
றோஜாவை, மல்லிகையை, முல்லையை....
'சுவைத்து' சுட்டாமல் விட்டாலும்
மாதிரிக்கு....
பூவரசு, முள்முருக்கு, செம்பருத்தி....
போன்ற சில பூக்கள்....
சிந்தும் மணத்தை, நறுந் தேனை
சுவைத்து சுட்டி.... தொட்டு....
உங்கள்
நாக்குகளில் வைக்க விரும்புகிறேன்!

இந்த நதிக்கு
சமூகம் வேறு இலக்கியம் வேறல்ல!
சமயம் வேறு இலக்கியமும் வேறல்ல!
எல்லாம்....
'கடலிற்தான்' சங்கமிக்கும்!
சமூகம் - இலக்கியம் - சமயம் - மனிதன்....
வேறு வேறென்று
இந்த நதி
பிரித்துப் பார்க்கவில்லை!
இந்தப் பூங்காவில்....
பாடும் மலர்களும்
பிரித்துப் பார்க்கவில்லை!
அது
எங்கள் தலைமுறையின் ஆரோக்கியம்!

ஈழத்தில்
இன்று ஓடும் இந்த நதியிற்தான்
தமிழ் இலக்கியம்
ஏற்றுமதியாகின்றது!

'வெளியீட்டு விழா'
'அறிமுகக் கூட்டம்'
'பாராட்டு விழா'
என்ற, 'துறை' களில்....
அது
இறக்குமதி செய்யப்பட்டு
விநியோகிக்கப் படுகிறது!

இதை,
உறபவித்த அற்புதக் கவிஞர் சிலர்....
தம்,
தன்னேரில்லாத் தலைவனை
சொல்லோவியமாக்கி
சொட்டுச் சொட்டாக
இந்த
நூல் ஏனத்தில் வடித்து வைத்துள்ளனர்!
அத்தனையும் எடுத்து....
அருந்தத் தருவதற்கு....
என்னால் முடியாது!
நேரமும் போதாது!

புதுக் கவிதைப் பூங்காவில்
பூத்துக் காய்த்து
பழமும் தின்று
கொட்டையும் போட்டவர்
'கவிக்கோ' அப்துல் றஹ்மான்!

மரபுக் கவிதையை
மடிகாலில் நிற்கவைத்து
தனக்கு,
ஸலாம் போட வைத்தரும் அவர்தான்!

தமிழின் தலைப்பால் எடுத்து....
தமிழ் - முஸ்லிம் ஒற்றுமை,
தனித்துவம், மனித மகத்துவம்
என்னும்
'தெளிதேன்' 'பாகு' 'பருப்பு'
இவை கலந்து....
மானிட மேன்மைக்கு
'சர்க்கரைப் பொங்கல்' படைக்கும்
தமிழ் நாட்டின்
ஆஸ்தானக் கவிஞரும் அவரேதான்!

அவர்.... அவரேதான்...!
இலங்கையிலிருந்தோர் பாடலைக் கேட்கிறார்!
இலங்கும் அந்தப் பாடலில்
இதயம் மயங்குகிறார்!
அதில்.... அவருக்கு....
'சலங்கை கட்டிய சொற்களின் நடனமும்
சாந்தி நெறியின்
சத்திய வெளிச்சமும் தெரிகிறது!
விலங்கை ஒடிக்கும் வீர முழக்கமும்
வேத ஞான ஒளியின்
விலாசமும் விளங்குகிறது!

இலங்கையில் ஓடும் இந்த நதி....
சமூக, தேச, மனித.... விலங்கொடித்து
சத்திய வேங்கையாய்ப் பாய்ந்து
வீர முழக்கம் செய்கின்றது!
இதற்கு நாதமாக
வேத ஞான ஒளியின் விலாசம் விளங்குகிறது!
இது சர்வ ஞானத்தத்துவம்!
இதற்குள் கவிக்கோவும்
எங்கள் 'நதிக்கோவும்' அடக்கம்!

புதுக்கவிதைத் தாத்தா மு. மேத்தா
ஓடும் நதியை இப்படிப் பாடுகிறார் :

'முண்டாசு கட்டாத விவேகானந்தர்!
முக்காடு போடாத வடலூர் வள்ளல்!
கண்டாலே முகம் மலரும் சிவந்த றோஜா!
கைகுலுக்கும் மெய்சிலிர்க்கும் கவிதை ராஜா!'

உவமை சொல்வது
கவிஞரின் தனி உடைமை!
அதுபோன்று,
அதை, உருவகமாய் சொல்வதும்
கவிஞரின் பொதுவுடைமை!
ஆகையால்,
'இந்த நதி.... எந்த நதியைப் போலுமில்லை!
இந்த நதி, இந்த நதியேதான்!!
இது தனித்துவமான நதி!!'
என்றும்.... நாம்
உருவகமாய் சொல்லுவோம்!

விவேகானந்தரும் வள்ளலாரும் துறவிகள்!
'சாந்தி மார்க்கத்தில்'
துறவறத்திற்கு இடமேயில்லை!
ஆயினும்
அந்தத் துறவிகளின் ஆளுமையை
இந்த நதியின்
கவி முகத்தில் காண்கிறார் மேத்தா!
அத்துடன், நதியின் ஆழத்தில் ஓடும் ...
'சூபித்துவ' சுடர் மின் அலையையும்
நதி மூலத்தில் காட்டுகிறார்!
மெய் சிலிர்க்க வைக்கும்
கவிராஜனாகவும் நதியைக் காண்கிறார்!

'பாடும் கவியில் படைக்கும் எழுத்தில்
எது? இன்று....
ஊடுபொருளாக வேண்டும்?'
என்பதில், எமக்கும்....
'கவிக்கோ', மேத்தாவுக்கும்....
இருக்கிறது கருத்து வேறுபாடு!
ஆனாலும்
மரபுக்கவிதையோ புதுக்கவிதையோ
எதுவானாலும்
தலைவனின் ஆணைக்கு
தொண்டன் கட்டுப்படுவது போல
கவிஞனின் ஆணைக்கு
கவிதை கட்டுப்படவேண்டும்!
என்பதில்
கருத்து வேறுபாடு கிடையாது!

புதுக்கவிதை
புதுத் தலைமுறையை புடம் போடுகின்றது!
என்பதற்கு
என்.எம். அப்துல் லத்தீப்
எழுதியுள்ள கவிதைகள்....
எடுபடும் உதாரணங்கள்!

'உன் புருவத்திலிருந்து
ஓர் உரோமத்தைத் தா!
ஒரு தூரிகை செய்து
நம் போராளிகளைப்பற்றி
ஒரு கவிதை எழுதிப் பாடுவேன்!

உன் நெற்றியில் வலம் வரும்
ஞானத்திலிருந்து ஒரு துளி தா!

கிழக்கின் கடலுக்குள் போடுவோம்;
என் சமூகத்தின்
ஆயுள் முழுவதும் அமைதி நிலவட்டும்!'
என்று, முகை அவிழ்கிறது அவர் கவிதை.

ஆளுமைக் கவியொருவன்
மரபுக் கவிதையையும்
தான் நினைத்த பொருள் விளங்க
தனக்கு கைகட்டி நிற்க வைப்பான்!
என்பதற்கு,
ஆ. முஹம்மதலி
சொல் விருத்தம் சிறப்பாயிற்று.
அவர், இப்படிப் பாடுகிறார்:

'தன் சமூகப் பங்களிப்பால்
எம்மரசு ஆட்சி மாற்றம்!
இலட்சியத்தில் வெற்றி வாகை!
ஏற்புடைய பல அமைச்சு!
தென்கிழக்கால் முழுநாடும்
சிறக்க பல்கலைக் கழகம்!
தேசமெங்கும் மீன் வழங்க
திறந்த நற் துறைமுகம்!
வன்முறைக்கு இலக்கானோர்
வாழ்வுயர நிவாரணம்!
வாலிபரும் யுவதிகளும்
வளம் கொழிக்க தொழில் வாய்ப்பு!
என்னுயிரும் வாழ் நாளும்
என் சமூக விடுதலைக்கே!'
என, முழங்கும் 'அஷ்ர∴ப்' எனும்
தலைவா நீர் வாழியவே.
சொற்சிலம்பம் இல்லாத செய்யுளிது.

நாடறிந்த நம் கவிஞர்
அன்புடன் குரல் இப்படிக் கேட்கிறது :

'சலுகைக்காக சல்லாரி வாசித்த
இலங்கை முஸ்லிம்களை
உரிமைகளுக்காக உரத்துப் பேச
உசுப்பி விட்டவரே!
இலங்கை முஸ்லிம்களின் சுவாசம்
உங்களிடந்தான்
ஒப்படைக்கப்பட்டிருக்கிறது!

அதனாற்தான் சொல்கிறோம் :
'எங்களை நீங்கள் வாசியுங்கள்!
நேசியுங்கள்! ஆசியுங்கள்!
சுவாசியுங்கள்!'
இப்படி.... பாலமுனை மக்கள் சார்பில்
இதய ஆழத்திலிருந்து அந்த, குரல் கேட்கிறது!

வாங்காமம் மக்களின் வளமான கற்பனையில்
வாய்மை மிளிர்கின்ற கவிதை இது :

'அசுரன் வீழ்ந்ததாற்தான்
அகிலமெங்கும் தீப ஒளி!
'அஷ்ரஃப்' எழுந்ததாற்தான்
ஆம், எங்கும் தீப ஒளி!
இலங்கைக் கடிகார
இணை முள்ளில் ஒருமுள் நீர்!
சின்ன முள்ளும் இல்லை நீர்!
பெரிய முள்ளும் இல்லை நீர்!
சிறிசையும் பெரிசையும்
செயற்படுத்தத் தூண்டுகின்ற

வினாடி முன் நீர்!
என்று, விடை கண்டு கொண்டவர் நாம்...!'
அவ்வாறு வளர்கின்றது அக்கவிதை.

'மூலைக்கொன்றாய் வீழ்ந்து கிடந்த
நூல்களை மட்டுமா ஒன்று சேர்த்தாய்?
'முஹ்மீன்' களையுமல்லவா
'தஸ்பீஹ்' மாலையாக்கினாய்!'
என்று, இரங்குகிறார் கவிஞர் மீலாத் கீரன்.

செ.குணரத்தினம் நாடறிந்த கவிஞர்
அவர், இப்படிச் சொல்கிறார்:
'என்னை விட..... பிறந்தகத்தில்
இவர், பற்று வைத்ததினால்....
என்னருமை உயிரே...!
என்று, எண்ணி மனம் களிப்பேனா?
எப்படி அழைத்தால்.... என்ன?
என்னாட்டான் என்னாட்டானே!
'அல்லாஹ் தந்த அருட்கொடையே!'
'அஷ்ர.'.ப்' என்பேன்!'
என்று, தொடர்கிறது அவர் கவிதை.

'கண்ணே!' 'உயிரே!'
என்று.. ஏங்கிப் பாடாத கவிஞரே இல்லை;
கம்பன் தொட்டு, வைரமுத்து வரை!
கவிச்சக்கரவர்த்தி இப்படிப் பாடினான்:

'கண்ணே வேண்டு மெனினும்
ஈயக் கடவேன்!
என், உள் நேராவி வேண்டுமெனினும்

உனதன்றோ! பெண்ணே!
வண்மைக் கேகயன் மானே!
மண்ணே கொள்!
மற்றய தொன்றும் மற!' என்றான்.
என்று,
தசரதன் கைகேயியை வேண்டினான்!
குணரத்தினம், அதற்கு அப்பாலும் சென்று
'அல்லாஹ் தந்த அருட்கொடையே! அஷ்ர·ப்!'
என்று, இறைவனை வேண்டி இரங்குகிறார்.

இடம் பெயர்ந்து வாழும்
புத்தளம் வித்தியாலய மாணவர்,
ஆசிரியர், பெற்றாரெல்லாம்....
'இனவாத விலங்கொடித்து
எம்மைச் சிறை மீட்டாய்!
தனித்துவம் என்பதற்கு தனி ஓர் அர்த்தமானாய்!
அகதிகள் எங்களுக்கு சரணாலயமானாய்!'
என்று, இதயம் கசிகிறார்கள்.

வடக்கில்,
பனை வட்டுக்குள் கூடுகட்டிக் குடியிருந்த
'அடைக்கலம் குருவிகளை'
'கழுகுகள்' கொத்திக் கலைத்த போது....
தெற்கில் புத்தளத்தில் தென்னந் தோப்புக்குள்
குடியிருக்க வீடுகள் கட்டிக் கொடுத்ததையும்
அடிப்படைத் தேவைகளை
நிறைவேற்றி வைத்ததையும் ...
தம்மைச் சிறை மீட்டு
தமக்கு சரணாலயம்
அமைத்துக் கொடுத்ததாக
அகதிகள் கூறுகின்றனர்.

மஷ்ஹூறா ஏ.மஜீத்தின்
ஒரு வித்தியாசமான பார்வை இது :
'கற்பக தருவின் ஆணி வேரே!
சாம்ராட் அசோகனின்
அசோக மாளிகைக்குள் நுழைந்த
புஷ்பமாலிகை மாதிரி
உங்கள் அரசியல் வாழ்வு
புனிதம் பெறட்டும்!' என்று, வாழ்த்துகிறார்.

'நாணலைப்போல்
தலை வணங்கிக் கொண்டிருந்த
முஸ்லிம் சமூகத்தை
முதிரை மரம்போல்
மாற்றிய முற்போக்காளன்!
'மரக்கல மினுசு'*வின்
மரமும் நீ! கலமும் நீ!'
என்று, நதித்துவத்தை
கவித்துவமாய் காண்கிறார் 'நிலாப்பிரியன்'.

'சமூகம், இலக்கை அடைவதற்காக....
சொந்த வழக்கை தள்ளி வைத்து விட்டு
சமூகத்தின் வழக்கை ஏந்தியவர் நீங்கள்!
நீங்கள், 'அதி' காரம் காட்டாத மிளகு!
ஆனால், அரசியல் 'கல்' பிரிக்கும் சுளகு!'
என்று நதியின் வெட்டுமுகம் காட்டுகிறார்
என். நஜ்முல் ஹுஸைன்.

---

* மரக்கல மினுசு இவ்வாறு, சிங்கள மொழியில் முஸ்லிம்களை அழைப்பார்கள்.

'நீங்கள் ஒரு தசாப்தமாய்
சரித்திரம் காணவில்லை என்றால்....
எங்கள் துகில்
துச்சாதனர்களால் உரியப்பட்டிருக்கும்!'
என்று, சமூகத்தின் 'ஆபத்பாந்தவனாக'
நதியை அடையாளம் காட்டுகிறார்
'இனியவன் இசார்தீன்.'

'நீங்கள்,
முகில் பொழியுமென்று
முடங்கிக் கிடந்த குளமல்ல!
மலை முகடுகளில்
பனியிருப்பை முனைப்புடன் கரைத்தெடுத்து
ஊரெல்லாம் வளம் சேர்க்கும்
உயர்ந்த வகைப் பேராறு!' என்று
உருவகிக்கிறார் கவிஞர் எஸ்.எச்.நிஃமத்.

'நாளை....
இந்த, நாயகனின் நயம் மிகுந்த காவியத்தை
பாடிக் களிப்பதற்கும் பாதுகாத்து வைப்பதற்கும்
சத்தியத்தை ஒருபோதும்
சாகடிக்க விரும்பாத புத்திரர்கள்
நிச்சயமாய் புறப்பட்டு வருவார்கள்!'
என்று, நம்பிக்கை கூறுகிறார்
'கவிச்சுடர்' அன்புமுகையதீன்.

'அஷ்ரஃப் எனக் கூறும் அழகுக் கவி மன்னன்
இஸ்லாத்தை இந்துவத்தை - இனிதாய்ந்து
முஸ்லீம்கள் தமிழர் எல்லோரும்
தலை தூக்கி வாழ்ந்திடவே

புவியினிலே புரிந்தான் பணி!'
என்று, தமிழ் பேசும் மக்கள் தலைதூக்கி வாழ
தண்ணீர் வழங்கிய ஆற்றுப் படுக்கையை....
செய்யுளாக்கியுள்ளார், அ.கௌரிதாசன்.

'வானளாவ வளர்ந்து விட்ட
விருட்சங்களை 'அரிந்து வெட்டி'
பலகைகளாய் ஆக்குகின்ற மனநிலையே....
இந்நாட்டில் இருக்குமட்டும்
அமைச்சர் பதவிகளும் அத்துடன்....
எத்தனையோ பதவிகளும் ஏற்று.... நீ....
மக்களுக்கு செய்த பணி போதும்! புறப்படு!
கவி எழுதிப் புது உலகம் காண்பதற்கு!'
என்று, சிங்கள மொழிக் கவிஞர்
பிரியரஞ்சன் ஜயக்கொடி
கவி நதிக்கு அழைப்பு விடுக்கிறார்! அதை
தமிழில் தந்திருக்கிறார் இப்னு அஸூமத்.

'பழுத்தும் பக்குவமடையாத
தலைவர்களை நம்பி
அழுகிப் போவதற்கு ஆயத்தமாயிருந்தோம்!
ஆனால், நீங்கள் தெளித்த
அரசியல் ரசாயனத்தால் மீட்சி பெற்றோம்!'
என்று, அரசியல் மீட்சியை
அழகுக் கவிதையாக்கியிருக்கிறார்
தாஸிம் அஹமது.

'தூய தொண்டின்
இலக்கணமாய் திகழ்வதோடே
செந்தமிழின் புகழோங்க கவிதை பாடும்

நாயகனாய் தனை உயர்த்தி வேதம் ஓர்ந்து
நபி வழியை தொடர்கிறதே புகழ் இறைக்கே!'
என்று, நபி வழியே நதிவழி தொடர்வதாக
புகழ் இறை புகல்கிறார் ஜின்னா ஷரிபுத்தீன்.

'முஸ்லிம் சமூகத்தின் - மழுங்கும்
முனை தீட்டும் கூர் அரத்தான்!
தத்துவ வித்தகத்தால் புடைத்தெழும்
சாயாத நெடுமரத்தான்! இத்தரை மீதினில்
பீறிட்டு எழுகின்ற எரிசரத்தான்!
தவப் புத்திரர் மனங்களை
சிந்தனைப் போருக்கு தினம் அழைத்தான்!'
என்கின்றார் 'கலைவாதி கலீல்.'

'அரசியலில் முஸ்லிம்கள் அடையாளத்தை
உறுதி செய்ய உழைக்கின்ற வீர நெஞ்சு!
பிற இனத்தின் உணர்வுகளைப் புரிந்துவைத்து
என்றென்றும் அவரோடு பேரன்பு பூண்டு வாழ
ஆர்வமுடன் துடிக்கின்ற ஈர நெஞ்சு!'
என்று, ஓடும் நதியின்....
வீரநெஞ்சையும் ஈரநெஞ்சையும்
அடையாளம் காட்டுகிறார் 'பாலமுனை பாறூக்'.

'இனி ஒரு தலைவன் உங்களில் இல்லை!
பேச்சுக்கு பேச்சாலும் வீச்சுக்கு வீச்சாலும்
விடிவு காணப் புறப்பட்ட வெண்ணிலவு!
இது தேய்ந்தாலும் மூன்றாம் பிறையாக
உங்கள் கொடியில் ஒட்டிக்கொள்ளும்!
ஒரு போதும் ஒடிந்து விழாது!
என்கின்றார் கவிஞர் வி. ஜெகதீசன்.

'உவெஸ்லி உயர் கல்லூரி....
உன்னை 'பழயமாணவன்'
என்று, பெருமை பெற்றுக்கொள்கிறது...!
முறுவலித்த முகத்துடன் நீ....
முன்னணியில் வரும் போது....
நீ, பதித்த பாதத்தில்
இன்னும்.... நிழல் கொடுக்கும்
ஆலைமரம், முதிரைமரம்....
அனைத்துமே இங்கு.... மகிழ்கிறது...!'
என்று, நதியின் இளமை நினைவுகளை
நினைவு கூருகிறார் பரதன் கந்தசாமி.

'எனக்கு என்ன வேண்டும்?
என், பேரக் குழந்தைகளுக்கு
எதை, சேமித்து வைக்கவேண்டும்?'
என்று, கேள்வி எழுப்பும் ஏ.எம்.எம். நஸீர்,
'கவலை வேண்டவே வேண்டாம்!
முஸ்லிம் காங்கிரஸ்
முதல் உயில் எழுதி வைத்துவிட்டது!'
என்று, கூறுகிறார்.

'ஸ்ரீலங்கா அரசின் சிரசாய் இருப்பவனே!
என்கட்சியின் அத்திபாரத்திற்தானே
என்கட்சி அரசாங்கத்தை கட்டியிருக்கிறது!
நீ பசையாய் இருப்பதால் தானே
எமது. அரசாங்கம் அசையாதிருக்கிறது!
நீ நகராதிருப்பதால் தானே
எமது. அரசாங்கம் நகராதிருக்கிறது!'
என்று, சந்திரிக்கா, அஷ்ரப் ஒப்பந்தத்தை
அழகாக சொல்லியிருக்கிறார்.

பொத்துவில் தொகுதி
சுதந்திர கட்சி இளைஞர் முன்னணி சார்பாக....
அக்கரையூர் அப்துல் குத்தூஸ்.

'இலங்கைத் தீவு அடங்கலும்
இனவெறிப் புயலால் சிதறிய
மனிதக் குப்பைகளைக் கூட்டி எடுத்து,
ஒலிவம் தளிர்களாய் மாற்றினான்!
அது, இலங்கைத்தீவின் ஒவ்வொரு முடுக்கிலும்
'லிவாஹுல் ஹம்தின்'* நிழலாய் விரிந்தது!'
என்று, நதி ஓடி.... சமூகச் சமவெளியை
செழிக்கச் செய்ததையும்
நதி பூத்த பூவுக்குள்ளேயே....
பூகம்பம் ஒன்று பொங்கி எழுந்ததையும்
சிறப்பான கவிதையாக்கியிருக்கிறார்,
மன்சூர் ஏ.காதர்.

'பாடுகின்ற இளங்குயிலாய்
படைநடத்திச் செல்கின்ற தளபதியாய்
உயிரை, உதிரத்தை, உழைப்பை....
அனைத்தையும் அர்ப்பணித்து....
'அமைதி! அமைதி!' என்றே....
எழுந்து நின்று கர்ச்சிக்கும்
எழுவானின் அரிமாவே! வாழ்க! வாழ்க!'
என்று, வாழ்த்துகிறார்
'கலாபூசணம்' எஸ்.முத்துமீரான்.

---

* லிவாஹுல் ஹம்து - பூரண இறை விசுவாசிகளுக்கு சொர்க்கத்தில் நிழல் கொடுக்கும் ஒரு கொடி.

'அலைபாயும் வாழ்வில்
அடிபட்டு வந்த மரம்!
நிலை பாய விரும்பாமல்
நேர்மையாய் வளர்ந்த மரம்!
அந்த மரம்....
அன்று, அழகான கிளைவிட்டு....
சந்தன மரமாகி சரித்திரம் படைத்த மரம்!
வீட்டிற்குள் தளைத்த மரம்,
வெளியேயும் வளர்ந்ததால்....
காட்டுக்குள் நின்ற காஞ்சிர மரங்கள்
தீட்டுப் பட்டது போல் தீய்ந்து கருகியது...!'
என்று, மரத்தின் கதை கூறுகிறார்....
பிரோஸா ஹுஸைன் ஏ.ஸலாம்.
இத்தோடு மதிப்பீடு
போதும் போதுமென்று நினைக்கின்றேன்!

எல்லாம் எல்லாமே....
இந்த சந்தனக் கட்டை தேய்ந்ததால்....
அது சந்தனா அததராகி....
'சங்கடம் தந்தார்! தராதார்!'
என்ற, சங்கடம் பாராமல்....
சர்வமும் சுகந்தம் வீசும்
இந்த சந்தன நதியைத் தொட்டு
பாடிய அத்தனை மலர்கள் மீதும்....
நிச்சயம் நறுஞ் சந்தன மணமே வீசும்!

ஓடும் நதியை... பாடும் அரும்புகளே!
முகைகளே! மொட்டுகளே!
மலர்களே! பூக்கள்! புஷ்பங்களே! வீகளே!
இந்த நதியில்...
காலமெல்லாம் ஓடம் விடும்...

ஓர் மீகாமன் பாடுகிறேன்!
இது,
உங்களுக்கும் எனக்கும்
ஓடும் நதியல்ல!
ஆற்று நீருமல்ல! கங்கையுமல்ல!
இது,
மனிதகுலம் முழுவதற்கும்
இளைக்காமல் களைக்காமல்
ஓடிவரும் வற்றாத ஊற்று!
'ஸம்ஸம்'* கிணற்று நீர்!
இது உலகத்தின் அதிசயம்!
இந்த நீரை.... எந்த மனிதனும்
குறிப்பாய் எந்த நொந்த மனிதனும்
அள்ளிப் பருகலாம்! முழுகலாம்!
ஆசைதீர அள்ளிச் செல்லலாம்!
எந்த இனமும் எந்தச் சமூகமும்
எந்த நிறமும் எந்த மொழியும்
எந்த தேசமும் ஏற்றுக் கொள்ளலாம்!
ஏனெனில்
இது 'சாந்தி' எனும் ஆற்றில்....
'சமாதான' ஓடத்தில்.... ஏறி உலா வருகிறது!
அமைதியும் ஆனந்தமும் ஆட்சி செய்யும்
'ஊர்' சேரப் போகிறது!
'அமுதசுரபி'க்கும் இதுதான் ஊற்றுக்கண்!
இது,
உலகிற்கு கிடைத்த அருள் ஊற்று!
மதீனாவின் 'மறை' ஊற்று!

---

ஸம்ஸம்* - இது, புனித மக்காவில் ஊற்றெடுத்து காலங்காலமாக அங்கு. பிரவாகித்துக் கொண்டிருக்கும் புனித நீர். இதன் வியாபகமும் பெருக்கமும் இன்றுவரை ஆரும் கண்டறிய முடியாத அற்புதம்.

ஓடும் நதியை பாடும் குயில்களே!
நதிக்கரையில்.... நீண்டு வளர்ந்து
நிழல் தந்து கொண்டிருக்கும்
வேம்பு, வெள்ளரசு, ஆல்.... போன்ற
மரங்களின்
கொத்துக்குளிருந்து கத்தும் குயில்களும்
கூடுகட்டித் தொங்கும்
தூக்கணாங் குருவிகளும்
'குரங்குகளால்' 'கழுகுகளால்'....
எதிர் கொள்ளும்
சோதனையும் வேதனையும்....
இலக்கியத்தின் தேவையை எடுத்தோதும்!
அதற்கு
அதன்....
சோகக் குரல்களே சாட்சி சொல்லும்!!

இறுதியாய்....
கவிபாடும் குயில்களுக்கு
கவிதை பற்றி.... என், சில வரிகள் :

'எடுத்த பொருளை
எதுகை, மோனையுடன்
தொடுத்தல் மட்டும் கவியல்ல!
'இடரும்' பொருளை
'சுடரும்' மொழியில்
'உருவம்' கொடுத்து
'செழிக்கச்' செய்வதே கவியாகும்!
கவிதையில்
கையாளப் படுகின்ற
உவமை, உருவகம், படிமம், குறியீடு....
எதுவாக இருந்தாலும்

படிக்கும் போது....
இடியப்பச் சிக்கல்போல்
தலையிடியைத் தராமல்
தலையிடிக்கு
'குளோன்' பூசிவிட்டாற்போல்
மணக்க வேண்டும்!

கவிதையில்
எல்லா அணிகளும் 'விரவி' வருவதே
அதன்.... பொருளை
அழகாக 'விளங்க' வைக்கத்தான்!
ஆனால்....
படிமத்தை அறியவும்
குறியீட்டைப் புரியவும்
மண்டையைப் போட்டு
உடைக்க வேண்டு மென்றால்....
படிமமும் குறியீடும் எதற்கு?

பூனை....
குட்டியை கவ்விக் கொண்டு
குடுகுடென்று ஓடுவது போல் அல்லாமல்
கொம்பன் யானை....
குட்டியை கூட்டிக்கொண்டு
கம்பீரமாய் நடந்து செல்வது போல்
கவிதையில்
'கரு' நடந்து செல்லவேண்டும்!
அத்தோடு....
கூடவே....
அங்குசத்தைக் கொண்டு செல்லும்
பாகனைப் போல்
'உரு' வும் நடை போடவேண்டும்!
'நிமிர்ந்த நடையும்

நேர் கொண்ட பார்வையும்'
கவிதைக்கும் இருக்க வேண்டும்!
அதில்,
'பிறர் ஈன நிலை கண்டு துள்ளும்'
சுடர் தெறிக்க வேண்டும்!!'
அச்சுடர்,
சுரண்டலைத் தகர்த்து
வறுமையை எரிக்கவேண்டும்!!

●

குறிப்பு :

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும்
துறைமுகங்கள் அபிவிருத்தி,
புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சரும்
தேசிய ஐக்கிய முன்னணி ஸ்தாபகரும்
கவிஞர் திலகமுமான
எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின்
பொன் விழாவை முன்னிட்டு
ஐம்பது கவிஞர்கள் எழுதிய கவிதைகளின் தொகுப்பை
எஸ்.எச்.நிஃமத்
'ஓடும் நதியைப் பாடும் மலர்களாக' வெளியிட்டார்.
அதற்கு எழுதிய முன்னுரை இது.

இவ் விழாவில் மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி
திரு. சி.வி. விக்னேஸ்வரன்
பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மொறிஷியஸ் நாட்டுக்கான
கௌரவ இலங்கைத் தூதுவர்
திரு தெய்வேஸ்வரன் தலைமையில்
1998.10.31 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற
நூல் வெளியீட்டு விழாவில் இது படிக்கப்பட்டது.

●

ம் விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுத

தரமான நூல்களின் தாயகம்

ம் விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுத

தரமான நூல்களின் தாயகம்

ம் விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுத

தரமான நூல்களின் தாயகம்

ம் விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுத

தரமான நூல்களின் தாயகம்

ம் விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுத

தரமான நூல்களின் தாயகம்

ம் விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுத

தரமான நூல்களின் தாயகம்

ம் விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுத

தரமான நூல்களின் தாயகம்

ம் விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுத

தரமான நூல்களின் தாயகம்

ம் விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுத

தரமான நூல்களின் தாயகம்

ம் விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுத

தரமான நூல்களின் தாயகம்

ம் விடுதலை விருட்சம் வெளியீட்டகம் விடுத

தரமான நூல்களின் தாயகம்

# மருதூர்க்கனி



மருதமுனைக் கவிதைப்
பண்ணையின் முதுசம்
எம்மண்ணின் இலக்கியப்
பாரம்பரியத்துள் விளைந்த முத்து

தன்னெழுத்துக்களால் முற்போக்காளனாக
ஆரம்பம் முதலே தன்னை அடையாளப்படுத்திக்கொண்ட
முதன்மைக் கவிஞன்

வாலாயமாக வரும் தன் எழுத்துக்களால்
பாமரனையும், பாட்டாளியையும் தன்னோடு அணைத்துச் சென்ற
யதார்த்தவாதி

வாசகனுக்கு இசைவான எழிய மொழிநடையில் தான்
சொல்லவந்த கருத்தை ஆவேசமாக உறுத்திச்சொன்ன
உணர்ச்சிக் கவிஞன்

தன் இனத்தின் முதுகெலும்பை நிமிர்த்த நினைத்த அரசியல்
போராட்டத்தின் மூத்தபோராளி

மருதூர்க்கனி, தன் எழுத்துக்களால்
நல்ல கவிஞனாக, சமூக சீர்திருத்தவாதியாக,
பொதுநலவாதியாக என்று பலமுகங்களில் தன்னைத்
தடம் பதித்துக் கொண்ட முற்போக்குவாதி

தனது ஒவ்வொரு எழுத்தும் தான்சார்ந்த மக்கள், தான் கண்ட
அடக்குமுறைகள் என்பவற்றைச் சூழ்ந்ததாகவே இருந்து
தாக்கம் தரவேண்டும் என்பதில் கவனமாக அவதானமாக
இருந்ததால் கவிஞரின் எழுத்துக்கள் என்றும் இலக்கிய
உலகில் நிலைத்திருக்கும்,
நிமிர்ந்து நிற்கும்.

Eng. **நியாஸ் ஏ ஸமத்**
(கவிஞரின் அன்புக்குரிய மாணவன்)